

**அப்பரைப் போல்.....**

**ஆங்கிலேயர் போல்....**


கல்வெட்டு, வரலாற்றின் ஆராய்ச்சி நோக்கு
கனிந்தவராய்ப் புலவரிலே விளங்கியவர் என்றே
வல்லவராய் நனிசிறந்தார் ஒருவரெனில் இராச
மாணிக்கர்! மிகையில்லை! மொழியுலகே கூறும்!
தொல்லுலகை ஒளிகாட்டிச் சுட்டியநற் சான்றோர்!
தொட்டுமொழித் தொன்மையினைச் சொல்லியபேர் ஆசான்!
கல்வியிலே சிறந்தவராய்க் கமழ்ந்தபெரும் அண்ணல்!
கடனாற்றி நிறைகுடமாய்ப் புகழ்விளங்கும் தோன்றல்!

**– மனைச ப. கீரன்**

(இராசமாணிக்கனார் -
நூற்றாண்டு விழா மலர் - பக். 301)

# இராசமாணிக்கனார்

## தமிழ்நாட்டுப் புலவர்கள்



நிலவன் பதிப்பகம்

# தமிழ்நாட்டுப் புலவர்கள்

வரலாற்றுப் பேரறிஞர்
**மா. இராசமாணிக்கனார்**

**நிலவன் பதிப்பகம்**

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **தமிழ்நாட்டுப் புலவர்கள்** |
| ஆசிரியர் | : | வரலாற்றுப் பேரறிஞர் **மா. இராசமாணிக்கனார்** |
| பதிப்பாளர் | : | **முனைவர் க. தமிழமுது** |
| பதிப்பு | : | 2014 |
| தாள் | : | 16கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 14 + 82 = 96 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **90/–** |
| படிகள் | : | 1000 |
| மேலட்டை | : | தமிழ்க்குமரன் |
| நூலாக்கம் | : | வி. சித்ரா |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர் வடபழனி, சென்னை - 26. |
| வெளியீடு | : | **நிலவன் பதிப்பகம்,** பி 3, பாண்டியன் அடுக்ககம், சீனிவாசன் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017. |
| நூல் கிடைக்குமிடம் | : | **தமிழ்மண் பதிப்பகம்** 044 2433 9030. |




# பதிப்புரை

மொழியாலும், இனத்தாலும், அறிவாலும் சிறந்தோங்கி விளங்கிய பழந்தமிழ்க்குலம் படிப் படியாய் தாழ்ச்சியுற்று மீள முடியாத அடிமைச் சகதியிலும், அறியாமைப் பள்ளத்திலும் வீழ்ந்து கிடந்த அரசியல் குமுகாய வரலாற்று உண்மை களைத் தேடி எடுத்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டு எம் தந்தையார் **தமிழ்மண்** பதிப்பகத்தைத் தொலைநோக்குப் பார்வையோடு தொடங் கினார்.

என் தந்தையின் பதிப்புச் சுவடுகளைப் பின்பற்றி எம் பதிப்புப் பணியைச் செய்து வருகிறேன். தமிழ்ப் பேரறிஞர் முனைவர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய ஆய்வுகள், சமயம் சார்ந்த ஆய்வுகள், வரலாற்றாய்வுகள், கோவில் ஆய்வுகள், கல்வெட்டு ஆய்வுகள், மாணவர் நலன் குறித்து அவர் எழுதிய 110 நூல்களும் ஆய்வாளர்களுக்கும் மாணவர் களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படத்தக்க நூல்களாகும்.

இவற்றில் 18 நூல்களை 2012இல் எம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. தொடர் பணியாக 2014இல் 21 நூல்களை தமிழுலகம் பயன்படும் வகையில் எம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதனை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

- க. தமிழமுது

# நுழையுமுன்

## மனிதரில் தலையாய மனிதரே!

ஆசிரியர், ஆய்வாளர், அறிஞர் என்று தம் உழைப்பாலும் திறமையாலும் விடாமுயற்சியாலும் படிப்படியாக உயர்ந்த **இராசமாணிக்கனார்** தமிழ்நாடு கண்ட மிகச் சிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவர். மொழி, இனம், நாடு எனத் தமிழ் கூறும் நல்லுலகம் பற்றி ஆழச் சிந்தித்தவர்களுள் அவர் குறிப்பிடத்தக்கவர். சமயஞ் சார்ந்த மூட நம்பிக்கைகளும், சாதிப் பிணக்குகளும், பிறமொழி ஈடுபாடும், பெண்ணடிமைத் தனமும், சடங்கு நாட்டமும், கல்வியறிவின்மையும் தமிழ்ச் சமுதாயத்தைச் சூறையாடிக் கொண்டிருந்த கால கட்டத்தில்தான் இராசமாணிக்கனார் தம் ஆசிரிய வாழ்க்கையைத் தொடங்கினார். தாமுண்டு, தம் குடும்பமுண்டு, தம் வேலையுண்டு என்று அவரால் இருக்க முடியவில்லை.

தமிழ் இலக்கியங்களைப் பழுதறப் படித்திருந்தமையாலும், இந்த நாட்டின் வரலாற்றை அடிப்படைச் சான்றுகளிலிருந்து அவரே அகழ்ந்து உருவாக்கியிருந்தமையாலும் மிக எளிய நிலையிலிருந்து உழைப்பு, முயற்சி, ஊக்கம் இவை கொண்டே உயரத் தொடங்கியிருந்தமையாலும் தம்மால் இயன்றதைத் தாம் வாழும் சமுதாயத்திற்குச் செய்வது தமது கடமையென அவர் கருதியிருந்தார். மொழி நலம், தமிழ்த் திருமணம், சாதி மறுப்பு என்பன அவருடைய தொடக்கக் காலக் களங்களாக அமைந்தன. தாய்மொழித் தமிழ், தமிழரிடையே பெறவேண்டிய மதிப்பையும் பயன்பாட்டையும் பெறாமலிருந்தமை அவரை வருத்தியது.

‘தமிழ் நமது தாய்மொழி’ ஈன்ற தாயைப் போற்றுதல் மக்களது கடமை. அது போலவே நமது பிறப்பு முதல் இறப்பு வரையில் நமக்கு உறுதுணையாக இருந்து நம்மை வாழச் செய்யும் மொழியைக் காப்பதும் வாழ்விக்கச் செய்வதும் தமிழராகிய நமது கடமை. ‘இன்றைய தமிழரது வாழ்வில் தமிழ் எவ்வாறு இருக்கின்றது?’ ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு பேசும்போது பெரும்பாலும் பிறமொழிச் சொற்களைக் கலந்தே பேசுவதைக் காண்கிறோம். இப்பிறமொழிச் சொற்கள் நம் மொழியிற் கலந்து தமிழ் நடையைக் கெடுத்துவிடுகின்றன. ஒரு தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாகப் பிற மொழிச் சொல்லைப் பயன்படுத்தினால், அந்தத் தமிழ்ச்சொல் நாளடைவில் வழக்கு ஒழிந்துவிடும்’ ‘பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதில் தலைசிறந்தவர் தமிழரே ஆவார். மொழிக் கொலை புரிவதில் முதற்பரிசு பெறத்தக்கவர் நம் தமிழரே ஆவர்!

‘நம் தமிழ்நாட்டுச் செய்தித் தாள்களில் தமிழ்ப் புலமையுடையார் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். அதனாலும், நல்ல தமிழை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் இன்மையாலும், மிகப் பலவாகிய பிறமொழிச் சொற்களைக் கலந்து தமிழ் எழுதி வருகிறார்கள். இவற்றைத் ‘தமிழ்ச் செய்தித்தாள்கள்’ என்று கூறுவதற்குப் பதிலாக ‘கலப்பு மொழிச் செய்தித்தாள்கள்’ என்று கூறுதலே பொருந்தும். இவ்வாறு செய்தித் தாள்களில் மொழிக் கொலை புரிவோர் வேற்று நாட்டவரல்லர், வேறு மொழி பேசும் அயலாரல்லர். தமிழகத்தில் பிறந்து தமிழிலேயே பேசிவரும் மக்களாவர் என்பதை வெட்கத்துடன் கூற வேண்டுபவராக இருக்கிறோம்’.

நாடு முழுவதும் மொழி நலம் குன்றியிருந்தமையைத் துறை சார்ந்த சான்றுகளோடும் கவலையோடும் சுட்டிக் காட்டியதோடு இராசமாணிக்கனார் நின்றுவிடவில்லை. மொழியை எப்படி வளர்ப்பது, காப்பாற்றுவது, உயர்த்துவது என்பதே அவருடைய தொடர்ந்த சிந்தனையாக இருந்தது. காலங் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயம் அவர் கண் முன் நின்றது. வடமொழி ஆதிக்கமும் ஆங்கிலப்பற்றும் தமிழ் மக்களின் கண்களை மூடியிருந்தன. தம் மொழியின், இனத்தின், நாட்டின் பெருமை அறியாது இருந்த அவர்கட்குத் தமிழின் தொன்மையையும் பெருமையையும் சிறப்பையும் எடுத்துச் சொல்வது தம் கடமையென்று கருதினார் இராசமாணிக்கனார். அக்கடமையை நிறைவேற்ற அவர் கையாண்ட வழிகள் போற்றத்தக்கன.

தம்முடைய மாணவர்களை அவர் முதற்படியாகக் கொண்டார். நல்ல தமிழில் பேசவும் எழுதவும் அவர்களுக்குப் பயிற்றுவித்தார். சிறுசிறு கட்டுரைகளை உருவாக்கப் பயிற்சியளித்தார். மொழிநடை பற்றி அவர்களுக்குப் புரியுமாறு கலந்துரையாடினார். மொழி நடையைச் செம்மையாக்குவது இலக்கணமும் பல நூல்களைப் படிக்கும் பயிற்சியுமே என்பதை விளங்க வைத்தார். இலக்கணப் பாடங்களைப் பள்ளிப் பிள்ளைகள் விரும்பிப் படிக்குமாறு எளிமைப்படுத்தினார். அதற்கெனவே நூல்களை உருவாக்கினார். அவரிடம் பயின்ற மாணவர்கள் அவர்

இலக்கணம் சொல்லிக் கொடுத்த அழகையும், படிப்படியாக இலக்கணத்தை நேசிக்க வைத்த திறனையும் பல இடங்களில் பதிவு செய்துள்ளனர். பயிலும் நேரம் தவிர்த்த பிற நேரங்களிலும் மாணவர்களுடன் உரையாடித் தமிழ் மொழியின் வளமை குறித்து அவர்களைச் சிந்திக்கச் செய்தார். அவரிடம் பயின்றவர்களுள் பலர் பின்னாளில் சிறந்த தமிழறிஞர்களாகவும், நூலாசிரியர்களாகவும் உருவானமைக்கு இத்தகு பயிற்சிகள் உரமிட்டன.

பள்ளி ஆசிரியராக இருந்த காலத்திலேயே ஒத்த ஆர்வம் உடையவர்களைச் சேர்த்துக் கொண்டு அப்பகுதியிலிருந்த பொது மக்களுக்குத் தமிழ்க் கல்வியூட்டும் பணியை அவர் செய்துள்ளார். 'வண்ணையம்பதியில் தனலட்சுமி தொடக்கப் பள்ளியில் பேராசிரியரின் தமிழ்த்தொண்டு தொடங்கியது. அங்குத் தொடர்ந்து வகுப்புகள் நடத்தினார்.' பணிகளில் இருந்தவர்களுக்கு வார இறுதி நாட்களில் தமிழ் வகுப்பெடுத்தார். உறவினர்களைக் கூட அவர் விட்டு வைக்க வில்லை. 'குடியரசு' இதழில் சொற்ப ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தம் மைத்துனர் பு. செல்வராசனை 'வித்துவான்' படிக்க வைத்து, சென்னை அப்துல் அக்கீம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணிபெறச் செய்தார்.

தமக்குக் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் மொழிச் சிந்தனைகளை விதைக்கப் பயன்படுத்திக் கொண்டவர், 'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்', 'நக்கீரர் கழகம்', 'மாணவர் மன்றம்' முதலிய பொது நல அமைப்புகளோடு தம்மை இணைத்துக் கொண்டார். 1946 இல் சென்னை நக்கீரர் கழகம் என்ற அமைப்பினைத் தொடங்கிய காலத்துப் பேராசிரியர் அவர்களின் அரவணைப்பும் தொண்டும் கழகத்திற்குக் கிடைத்துக் கழகம் வளர்ந்து சிறந்தது. 1946 ஆம் ஆண்டில் நக்கீரர் கழகம் 'திருவள்ளுவர்' என்ற திங்கள் ஏட்டினை நடத்தத் தொடங்கியபோது, பேராசிரியர் தம் கட்டுரைகளை வழங்கியதோடு அல்லாது, தாம் நட்புப் பூண்டிருந்த தவத்திரு ஈராஸ் பாதிரியாரின் கட்டுரையையும் பெற்றுத் தந்து இதழுக்குப் பெருமை சேர்ந்தார். அடியவனின் தமிழ் தொண்டிற்கு ஊக்கமும், உள்ளத்திற்கு உரமும், துவண்டபோது தட்டி எழுப்பி ஊட்ட உரைகளும் அளித்துச் சிறப்பித்தவர் பேராசிரியர்' என்று இராசமாணிக்கனாரின் தமிழ்த் தொண்டை நினைவு கூர்ந்துள்ளார் நக்கீரர் கழக அமைப்பாளர் சிறுவை நச்சினார்க்கினியன்.

கல்வி வழி விழிப்புணர்வில் பெருநம்பிக்கை கொண்டிருந் தமையால், 'அரசியலாரும் சமூகத் தலைவர்களும் நாடெங்கும் கல்விக் கூடங்களை ஏற்படுத்த வேண்டும். கல்வி கற்கும் வயதுடைய எந்தச் சிறுவனும் சிறுமியும் கற்காமல் இருத்தல் கூடாது' என்று முழங்கிய இப்பெருமகனார், தாம் வாழ்ந்த பகுதியில் இருந்த அத்தனை குடும்பங்களின் பிள்ளைகளும் பள்ளிப் படிப்புக் கொள்ளுமாறு செய்துள்ளார்.



பெண்கள் பின்தங்கிய காலம் அது. 'அடுப்பூதும் பெண்ணுகளுக்குப் படிப்பெதற்கு' என்று கேட்டவர்கள் மிக்கிருந்த காலம். அந்தக் கால கட்டத்தில்தான் பேராசிரியர் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்தார். எட்டாம் வகுப்பே படித்திருந்த தம் மனைவிக்குத் தாமே ஆசிரியராக இருந்து பயிற்றுவித்து அவரை, 'வித்துவான்' பட்டம் பெறச் செய்தார். 'என் கணவர் எனக்கு ஆங்கிலப் பாடமும் தமிழ்ப்பாடமும் கற்பித்து வந்தார். பாடம் கற்பிக்கும் நேரத்தில் பள்ளி ஆசிரியராகவே காணப்பட்டார். ஒவ்வொரு பெண்ணும் தன்னைக் காத்துக் கொள்ளும் வகையில் கல்வி கற்றுப் பொருளீட்ட வேண்டும் என்பது என் கணவர் கருத்து. அதனால், என்னைப் பெண்கள் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினார். மாணவியர்க்கு மொழியுணர்வும் நாட்டுணர்வும் வருமாறு பேசவேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார்' என்று 'என் கணவர்' என்ற கட்டுரையில் திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார் கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

மொழி, இனம், நாடு இவற்றைப் பற்றி அறிந்திருந்தால் தான் அவற்றை நேசிக்கவும் அவற்றிற்குத் துணை நிற்கவும் முடியுமென்பதில் அவர் தெளிவாக இருந்தமையால்தான், 'கல்வி'யில் அக்கறை காட்டினார். அவருடைய ஆசிரியப் பணி அதற்குத் துணையானது. தம்மிடம் பயில வந்தவர்க்கு மொழியுணர்வூட்டினார். 'தமிழகத்தில் ஆட்சி தமிழிலேயே இயங்க வேண்டும். எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஆங்கிலம் ஒழிந்த எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பித்தல் வேண்டும்' என்பது அவர் கொள்கையாக இருந்தது. "அறிவியல் மனப்பான்மையை ஊட்டி வளர்க்கும் முறையில் அமைந்த பாடநூல்களையே பிள்ளைகள் படிக்கும்படிச் செய்தல் வேண்டும்". உலக நாடுகளோடு தம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் குறைகளை நிறைவாக்கும் மனப்பாங்கு வளரும்படியான முறையில் கல்வி அளிக்கப்படல் வேண்டும். கடவுள் பற்றும், நல்லொழுக்கமும், சமுதாய வளர்ச்சியில் நாட்டமும் ஊட்டத் தக்க கல்வியை ஏற்ற திட்டங்கொண்டு நடை முறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்' என்று அவர் எழுதியுள்ளார்.

'பேச்சுத் தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படை ஆதலால், நமது பேச்சுத் தமிழ் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் நாம் எழுதும் தமிழ் நல்ல தமிழ் நடையில் இருக்கமுடியும்' என்பது அவர் கருத்தாக இருந்தமையால், தம்மிடம் பயின்ற மாணவர்களை அவர் நல்ல தமிழில் பேசுமாறு வழிப்படுத்தினார். அதற்காகவே தாம் பணியாற்றிய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருந்த மாணவர் மன்றங்களைச் செயலூக்கம் பெற வைத்தார். தமிழ் மன்றங்கள் இல்லாத கல்வி நிலையங்கள் அவற்றைப் பெறுமாறு செய்தார். பேச்சையும் எழுத்தையும் இளைஞர்கள் வளப்படுத்திக் கொள்ள உதவுமாறு 'வழியும் வகையும்' என்றொரு சிறு நூல் படைத்தளித்தார். எண்ணங்களை எப்படி உருவாக்கிக் கொள்வது, அந்த எண்ணங்களை வெளிப்படுத்த எத்தகு சொற்களைத் தேர்ந்து கொள்வது, அச்சொற்களை இணைத்துத் தொடர்களை எப்படி அமைப்பது, பின் அத்தொடர்களைக் கேட்டார்ப் பிணிக்கும் தகையனவாய் எங்ஙனம் அழகு படுத்துவது என்பன பற்றி நான்கு தலைப்புகளில் அமைந்த இந்நூல் இளைஞர் களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் இராசமாணிக்கனாரின் மொழி வழிச் சிந்தனைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்தது.

தமிழ்மொழியின் தொன்மை, பெருமை இவற்றைத் தமிழர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே 'தமிழ் மொழிச் செல்வம்', 'தமிழ் இனம்', 'தமிழர் வாழ்வு', 'என்றுமுள தென்றமிழ்', 'புதிய தமிழகம்' என்னும் அவருடைய நூல்கள் தமிழ் மக்களுக்கு அவர்கள் மறந்திருந்த மொழியின் பெருமையை, சிறப்பை அடையாளப்படுத்தின. 'ஒரு மொழி பேசும் மக்கள் தம் மொழியின் பழைமைகளையும் பெருமையையும் வளர்ச்சியையும் நன்கு அறிந்தாற்றான், அம்மொழியினிடத்து ஆர்வமும் அதன் வளர்ச்சியில் கருத்தும் அம்மொழி பேசும் தம்மினத்தவர் மீது பற்றும் கொள்வர். இங்ஙனம் மொழியுணர்ச்சி கொள்ளும் மக்களிடையே தான் நாட்டுப்பற்றும் இனவுணர்ச்சியும் சிறந்து தோன்றும். ஆதலின், ஓரினத்தவர் இனவொற்றுமையோடு நல் வாழ்வு வாழ மொழிநூலறிவு உயிர்நாடி போன்ற தாகும். இம்மொழி நூலறிவு தற்காப்புக்காகவும், தம் வளர்ச்சிக்காகவும் வேண்டற்பாலது என்பதைத் தமிழ் மக்கள் அறிதல் நலமாகும்' என்ற அவர் சிந்தனைகள் இந்நூல்கள் மக்களிடையே வேர் பிடிக்கச் செய்தன.

தமிழ் மக்களுக்கு மொழிப் பற்றையும், மொழியறிவையும் ஊட்டிய அதே காலகட்டத்தில், அவர்களை நாட்டுப்பற்று உடையவர்களாகவும் மாற்றினார். தமிழ் நாட்டின் பெருமையை, வரலாற்றை இந்த நாட்டில் பிறந்த



ஒவ்வொரு குடிமகனும் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே, 'தமிழக ஆட்சி', 'தமிழ்க் கலைகள்', 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்', 'தமிழக வரலாறு' என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார். நாட்டுக்காக உழைத்த அறிஞர்களின் வரலாறுகளைச் சிறுசிறு நூல்களாக்கி இளைஞர்கள் அவற்றைப் படித்துய்ய வழிவகுத்தார். இளைஞர்கள் படித்தல், சிந்தித்தல், தெளிதல் எனும் மூன்று கோட்பாடுகளைக் கைக்கொண்டால் உயரலாம் என்பது அவர் வழிகாட்டலாக இருந்தது.

மொழி, இனம், நாடு எனும் மூன்றையும் தமிழர்க்குத் தொடர்ந்து நினைவூட்டல் எழுதுவார், பேசுவார் கடமையென்று அவர் கருதியமையால் தமிழ் எழுத்தாளர்கள் எங்ஙனம் அமைதல் வேண்டுமென்பதற்குச் சில அடையாளங்களை முன்வைத்தார். 'தாமாக எண்ணும் ஆற்றல் உள்ளவரும் உண்மையான தமிழ்ப்பற்று உடையவருமே நல்ல எழுத்தாளர். தமிழ் எழுத்தாளர் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் படித்தவராக இருப்பது நல்லது. தாழ்ந்துள்ள தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தப் பயன்படும் நூல்களை எழுதுவதையே எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த கடமையாகக் கருத வேண்டும். சமுதாயத்தில் இன்றுள்ள தீண்டாமை, பெண்ணடிமை, மூட நம்பிக்கைகள், கண்மூடித் தனமான பழக்கவழக்கங்கள் முதலிய பிற்போக்குத் தன்மைகளை வன்மையாகக் கண்டிக்கும் நெஞ்சுறுதி எழுத்தாளர்க்கு இருக்கவேண்டும்' அத்தகைய எழுத்தாளர்கள், 'தமிழர்' என்ற அடிப்படையில் ஒன்று கூடுதல் வேண்டும் என்று அவர் விழைந்தார்.

அதனாலேயே மதுரையில் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் மதுரை எழுத்தாளர் மன்றத்தை உருவாக்கி அது சிறந்த முறையில் இயங்குமாறு துணையிருந்தார். இம்மன்றத்தின் தலைவராக இருந்து மன்றத்தின் முதல் ஆண்டு விழாவில் அவர் ஆற்றிய உரை தமிழ் எழுத்தாளர் கடமைப் பற்றிய அவருடைய அறை கூவலாக அமைந்தது. 'தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக ஆட்சி மொழியாக இருந்த நமது தமிழ் பிற்காலத்தில் தனது அரியணையை இழந்தது; இப்பொழுது வளர்ந்து வருகின்றது. எழுத்தாளர்கள் இதனை மனத்தில் பதிய வைத்தல் வேண்டும் அதன் தூய்மையையும் பெருமையையும் தொடர்ந்து பாதுகாப்பதே தங்கள் கடமை என உணர்தல் வேண்டும்.

'மக்கள் பேசுவது போலவே எழுதவேண்டும் அதுதான் உயிர் உள்ள நடை என்று சொல்லிப் பாமர மக்கள் பேச்சு நடையையே எழுத்தாளர் பலர் எழுதி வருகின்றனர். பாமர மக்களது நடை பொதுமக்களுக்கு நன்கு

தெரியும்; அதைத் தெரிந்து கொள்ள எழுத்தாளர் நூல்களை விலை கொடுத்து வாங்க வேண்டிய தேவை இல்லை அல்லவா? கொச்சை மொழி பேசும் மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளை ஊட்டுவதோடு, இனிய, எளிய, செந்தமிழ் நடையையும் அறிமுகம் செய்து வைப்பதுதான் எழுத்தாளரது கடமையாக இருத்தல் வேண்டும். எழுத்தாளர் தங்கள் எளிய, இனிய செந்தமிழ் நடைக்கு மக்களை அழைத்துச் செல்ல வேண்டுமே தவிர, மக்களுடைய பேச்சு நிலைக்குத் தங்களை இழித்துக் கொண்டு போவது முறையன்று. சிறந்த கருத்துக்களோடு பிழையற்ற எளிய நடையையும் பொதுமக்களுக்கு ஊட்டுவது எழுத்தாளர் கடமை என்பதை அவர்கள் மறந்து விடலாகாது. இதுவே அறநெறிப்பட்ட எழுத்தாளர் கடமை என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

சாதிகள் ஒழிந்து சடங்குகள் அற்ற சமயம் நெறிப்படத் தமிழர், 'தமிழ் வாழ்வு' வாழ வேண்டுமென்பதில் அவர் கருத்தாக இருந்தார். அதனால் தான், வாழ்க்கையின் தொடக்க நிலையான திருமணம் தமிழ்த் திருமணமாக அமைய வேண்டுமென அவர் வற்புறுத்தினார். இதற்காகவே அவர் வெளியிட்ட 'தமிழர் திருமண நூல்', தமிழ்ப் பெரியார்களின் ஒருமித்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. தமிழ் நாட்டளவில் அதற்கு முன்போ அல்லது பின்போ, ஏன் இதுநாள் வரையிலும் கூட வேறெந்தத் தமிழ் நூலும் இதுபோல் தமிழ்கூறும் நல்லுலகத்தின் ஒருமித்த அரவணைப்பைப் பெற்றதாக வரலாறு இல்லை.

'எல்லோரும் வேலை செய்து பிழைக்கவேண்டும். பிச்சை எடுப்பவரே நாட்டில் இருக்கக் கூடாது' 'வலியவர் மெலியவரை ஆதரித்தால் நாட்டில் அமைதியும் இன்பமும் பெருகும்' என்று கூறும் இராசமாணிக்கனார், 'கல்வி மட்டுமே ஒருவரைப் பண்படுத்துவதில்லை. ஒழுக்கம் வேண்டும். எல்லோரும் ஒழுக்கத்திற்கு மதிப்பைத் தரவேண்டும். ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கத்தோடு உறையும் கல்விதான் மனிதனை உயர்விக்கும்' என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

மொழி, இனம், நாடு, கல்வி, சமயம், மக்கள் நலம், கோயில்கள் எனப் பலவும் கருதிப் பார்த்துத் தமிழ் மொழி சிறக்க, தமிழினம் உயர, தமிழ்நாடு வளம்பெறப் பயனுறு சிந்தனை விதைகளைத் தம் வாழ்நாள் அநுபவ அறுவடையின் பயனாய் இந்த மண்ணில் விதைத்த இராசமாணிக்கனார், 'உண்மை பேசுதல், உழைத்து வாழுதல், முயற்சியுடைமை, அறிவை வளர்த்தல், நேர்மையாக நடத்தல், பிறர்க்குத் தீங்கு செய்யாமை முதலியன



நேரிய வாழ்க்கைக்குரிய கொள்கைகளாம்' என்று தாம் கூறியதற்கு ஏற்ப வாழ்ந்த நூற்றாண்டு மனிதர். மறுபிறப்பு நேர்ந்தால், 'மீண்டும் தமிழகத்தே பிறக்க வேண்டும்' என்று அவாவிக் கட்டுரைத்த தமிழ்மண் பற்றாளர். 'அவரை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டும் நூற்பா வடிவிலான ஒருவரி சொல்லட்டுமா?' எனக் கேட்கும் அவரது கெழுதகை நண்பர் வல்லை பாலசுப்பிரமணியம் சொல்கிறார்: 'இராசமாணிக்கனார் மதியால் வித்தகர்; மனத்தால் உத்தமர்', 'மனிதரில் தலையாய மனிதரே' எனும் அப்பர் பெருமானின் திருப்பூவணப்பதிகத் தொடர் இப்பெருந்தகையைக் கருத்தில் கொண்டே அமைந்தது போலும்!

**டாக்டர் இரா. கலைக்கோவன்**

## நூன்முகம்

*இச் சிறுநூல், திருவளரும் செந்தமிழில் வல்ல புலவர் பெருமக்களின் சீரிய வரலாற்றைக் கூறுவது. இது, புறநானூற்றைப் பெரும்பான்மை தழுவியும், அகநானூறு, நற்றிணை, பதிற்றுப் பத்து முதலிய பிற இலக்கியங்களைச் சிறுபான்மை தழுவியும் ஆராய்ந்து எழுதப்பட்டது. இதில், அக்காலத்து வேந்தர், புலவர், குடிகள், பரிசிலர் என்ற இவர்களுடைய சீரிய வாழ்க்கையும், குணாதிசயங்களும், நிலப்பகுதிகளின் தோற்றம், இயற்கை வனப்பு முதலாயினவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இனிய செந்தமிழ் நடைகொண்டு விளங்கும் இந்நூல் மாணவ வுலகத்திற்குப் பெரிதும் பயன்படும்.*

***நக்கீரனாரகம்,***
***வண்ணை.*** மா. இராசமாணிக்கம்



## உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| I. | ஆவூர்-மூலங்கிழார் | 15 |
| II. | காரிக் கண்ணனார் | 28 |
| III. | பெருங்குன்றூர் கிழார் | 36 |
| IV. | மாறோக்கத்து நப்பசலையார் | 47 |
| V. | மாங்குடி கிழார் | 55 |
| VI. | மோசி கீரனார் | 64 |
| VII. | கோவூர் கிழார் | 71 |
| VIII. | பிசிராந்தையார் | 83 |

# I. ஆவூர்-மூலங்கிழார்

## 1. மூலங்கிழார்

காவிரியாறு சோழ நாட்டு மக்களைக் காப்பாற்றுவதால் அஃது, அவர்களுக்குச் செவிலித்தாய் என்னலாம். அந் நாட்டு மக்கள் அதனை ஒரு பெண் தெய்வமாகவே கொண்டாடுகின்றனர். அக்காவிரியாற்று நீரால், விளையாத புஞ்சை நிலங்களும் நல் விளைச்சலைத் தருகின்றன வென்றால், சோணாட்டின் வளப்பத்தை என்னென்பது? காவிரிக் கரையின் இருமருங்கிலும் தண்ணிழல் பரப்பும் இனிய சோலைகள் பல உள. மனத்தை ஒரு வழிப்படுத்தி இறைவன்பால் நாட்டத்தைச் செலுத்தும் தூய்மையாளர்க்குக் காவிரிக்கரையே சிறந்த ஆச்சிரம மென்னலாம்.

அங்ஙனம் பெருமையுற்ற காவிரிக்கரை மருங்கில் உள்ள சிற்றூர் **ஆவூர்** என்பது. அதன் நாற்புறங்களிலும் செழிப்பான வயல்கள் பல உள. அவ் வூரின் அருகில் தண்ணிழல் பரப்பும் சோலைகள் பல உண்டு. நல் விளைச்சலை நுகர்ந்து, தீச் செயலை மறந்து, நற்குண நற்செயல்களில் மேம்பட்டு விளங்கும் பழங்குடி மரபினர் அப்பதியில் உறைவர். அதில் இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், பைந் தமிழைப் பாங்குறக் கற்று, தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராய்ப் பெருமையுற்றிருந்தவர் **மூலங்கிழார்** என்பவர். இப் பெரியார் வேளாண் மரபினர்.

இவர் நிறைந்த கல்வியறிவைப் பெற்றுப் பேரறிஞராய் விளங்கியபோது, குணத்திலும் செயலிலும் உருவிலும் திருவிலும் தம்மை யொத்த பெண்மணி ஒருவரை நாடி மணந்து, இல்லற வாழ்க்கையை நடத்தலாயினர். சிறிது காலங் கழிய, புலவர் செய்த நற்பேற்றின் பயனாய், நல்லிசைப் புலமைவாய்ந்து உலகம் போற்றும்படி விளங்கிய சாத்தனார் என்பவர் பிறந்தார். அவர் தலை சற்றுப் பெரிதா யிருந்தமையின் **பெருந்தலைச் சாத்தனார்** என்ற பெயர் பெற்றார்.

## 2. புலவரும் கிள்ளிவளவனும்

புலவர் இல்லறத்தை நடாத்திவருங்காலை, வறுமைப் பிணி அவரை வாட்டத் தலைப்பட்டது. கல்வியறிவுடையார் பெரும்பாலர் வறுமையால் வாட்டப்படுகிறார்கள். பொருட் செல்வம் படைத்தார் கல்விச் செல்வத்தைப் பெற்றிலர். இங்ஙனம் இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். புலவர்களை வறுமைப் பிணி வாட்டியதாற்றான் அவர்கள் அரசர் பலரையும் குறு நில மன்னர் பலரையும் சென்றடைந்து, தீந்தமிழால் திறம்படப் பாடிப் போந்தனர். அவ்வாறு பாடிய தால் அவர்கள் அருமை பெருமைகளையும் கல்வியறிவையும் நாம் நன்கு உணரத்தக்க நிலையில் உள்ளோம். எனவே, அவர்கள் வறுமையால் வாட்டமுற்றது நம் தமிழ்மொழி வளர்தற் பொருட்டேயாமென்க.

புலவர் வாழுங் காலத்தில் சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தவன் **குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவன்** என்பவன். அவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டிருந்தான். அம் மன்னன் மறங்கடிந்து அறம் வளர்த்தவன்; மிக்க கொடையும் வீரமும் உடையோன்; திருவளர்க்கும் செந்தமிழைச் செவ்வையாய்ப் படித்தவன்; செய்யுள் செய்தலில் வல்லவன்; அவன் கருவூரை ஒரு காலத்தில் முற்றுகையிட்டுச் சேரனை வென்றவன்; கோபத்தில் நமனை ஒத்தவன்; தமிழ் அருமையினையும் புலவர் பெருமையினையும் நன்கு உணர்ந்தவன். அப் பெருந்தகையாளன் தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் ஆதரித்து வந்தான்; யார் எதை விரும்பி அவனிடம் சென்றாலும் அவர்களை வறிதே அனுப்பத் துணியான்; 'பெறுக' என்று சொல்லி, அவர் மனம் வெறுக்குமாறு பரிசில் நல்குவன். புலவரும், பாணரும், கூத்தரும் அவனைத் தங்கள் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வந்தார்கள். இரவலர்க்குத் தாய் வீடு போன்ற அவன் அரண்மனையைப் பைந்தமிழாற் பாடாதார் இலர்.

இங்ஙனம் பெருமையுற்று விளங்கிய அக் கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார், வெள்ளைக் குடி நாகனார், மாறோக்கத்து நப்பசலையார், கோவூர் கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக் காட்டூர்த் தாயங் கண்ணனார் முதலான நல்லிசைப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.



கிள்ளிவளவனின் வள்ளற்றன்மையை ஆவூர் மூலங்கிழார் கேள்வியுற்றார். அவர் அவ்வரசனின் ஆளுகைக்குட்பட்ட ஊரினரா யிருந்தமையின், தம்மையாளும் வேந்தனின் தண்ணளித் திறனைக் கேள்வியுற்றதும் மனமகிழ்ந்தார்; அவனைச் சென்று நேரிற் காண விழைவு கொண்டார்; ஒரு நல்ல நாளில் புலவர் தம்மூரை விட்டுப் புறப்பட்டு உறையூரை யடைந்தார்.

அடைந்த புலவர் அரண்மனையுட் புகுந்து, அரியாசனத்து வீற்றிருந்த அரசனைக் கண்டார். அரசன் கிழாரின் முகவிலாசத் தால், அவர் பைந்தமிழ்ப் பாவலர் என்பதை யுணர்ந்து, அவரை முகமன் கூறி வரவேற்றான்; புலவர்க்கு ஆதன மொன்றிட்டான். புலவர் மகிழ் வெய்தி அதனில் அடக்கத்தோ டமர்ந்தனர். அமர்ந்த புலவரை அரசன் நோக்கி, "புலவீர்! நீர் எங்குள்ளீர்? எந்நாட்டீர்?" என்று உசாவினன்.

மன்னன் வினாவிற்குப் புலவர் விடை கூறுபவராய், "மலையை யொத்த இளமை பொருந்திய களிற்றின்மேல் ஆகாயத்தை யளாவும் கூறுபாட்டையுடையன்போல விரவின பலநிறத்தை யுடையனவாகிய கொடிகள் அசைந்து தோன்றும் பரந்த படையையுடைய விறல் வேந்தே! நீ முனிந்து பார்க்குமிடம் தீப்பரக்கும்; நீ அருளோடு பார்க்குமிடம் பொன் பொலியும்; செஞ்ஞாயிற்றின் கண்ணே நிலவுண்டாக வேண்டினும், வெளிய மதியின்கண்ணே வெயில் உண்டாக வேண்டினும், நீ வேண்டிய பொருளை உண்டாக்கும் வன்மை யுடையை. இனிய நிலையை யுடைத்தாகிய பொற்பூப் பொருந்திய கற்பகக் காவை யுடைய விண்ணுலகத்தவரும் தாம் செய்த நல்வினையால் உள்ள இன்பத்தை யனுபவிக்கின்றார்களே யன்றி, செல்வ முள்ளோர் வறியோர்க்கு வழங்குதலும் வறியோர் செல்வமுடையர்பாற் சென்றிரத்தலும் அங்குச் செய்ய இயலவில்லை; ஆதலின், அது செய்தல் அறவுடைத் தெனக் கருதி, விண்ணுலகத்தில் நுகரும் இன்பம் இவ்விடத்திலும் கூடுதலான், நின்னாடு நிலையுடைத் தென்று கருதி, பகைவர் தேயத்தில் உள்ள பரிசிலரும் நின்னாட்டை நினைப்பார். இத்தகைப் பெருமை பொருந்தியது நினது நாடு. நினது நிழற் கண்ணே பிறந்து, நினது நிழற்கண்ணே வளர்ந்த எமது நில வெல்லை சொல்லவும் வேண்டுமோ? வேண்டாவன்றே" என்று, அரசனின் வென்றி மேம்பாட்டையும், வரையாது கொடுக்கும் வள்ளற்றன்மையையும், நாட்டின்

பெருமையையும் தான் அந்நாட்டினர் என்பதையும் அழகாக எடுத்துக் கூறினர்.

புலவர் பகர்ந்தவற்றைக் கேட்ட சோழன் மன மகிழ்ந்தான்; புலவரின் தமிழ்ப் புலமையை அறிந்த அவன் அவரைப் போற்றி, இன் சுவை அமுதை ஈந்து, இனிய முகத்தோடு தனது அவைக்களத்தே வைத்திருந்தான்.

புலவர் சோழமன்னன் அவைக்களத்தில் பல நாட்கள் இருந்து, அரசனையும் அவையையும் தமது புலமையால் மகிழ்வித்தார். அரசன் புலவரைத் தமிழ்த்தெய்வமாக மதித்து வந்தான். அவன்பால் அன்பு கொண்ட புலவர் ஒருநாள், "மன்ன! நீ, பகைவரால் பாதுகாக்கப் பெற்ற நிலைபெற்ற அரண்களைப் பாதுகாவாது, எதிர்நின்று அழித்து, அவரைக் கொன்று வீழ்த்துவை; அவர் மகுடமாகச் செய்யப்பட்ட பசும் பொன்னால் நினது அடி விளங்க வீரக்கழல் செய்து புனைந்துள்ளாய்; வலிய ஆண்மையை யுடையை. வயவேந்தே! நின்னை இழித்துரைப்போர் நமனுல கடைவர்; புகழ்ந்துரைப்போர் பொலிவு தோன்ற விளங்குவர். பெரும! ஒரு பிடி கிடக்கும் சிறிய விடம் ஏழு களிற்றியானையைப் பாதுகாக்கும் நாட்டை யுடையோய்! நீ, எந்நாளும் இனிய மொழியோடு எளிய செல்வியை யாகுக" என்ற கருத்தை வைத்து,

'நீயே பிறரோம் புற்ற மன்னெயி
லோம்பாது கடந்தட் டவர்முடி புனைந்த
பசும்பொன்னி னடிபொலியக்
கழறைஇய வல்லாளனை
வயவேந்தே! யாமே நின்
னிகழ்பாடுவோ ரெருத்தமடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற
வின்றுகண் டாங்குக் காண்குவ மென்று
மின் சொலெண் பதத்தை யாகுமதி, பெரும!
வொரு பிடி படியுஞ் சீறிட
மெழுகளிறு புரக்கு நாடுகிழ வோயே!'

என்று பாடினர்.



புலவர் தன்னிடம் கொண்ட அளவற்ற அன்பின் பெருக்கைக் கண்ட கிள்ளிவளவன் உள்ளங்குளிர்ந்து உவகை மீதூர், புலவர்க்கு வேண்டும் பரிசில்களை வரிசையாக நல்கினான். வறிஞரான மூலங்கிழார், சோழன் தந்த பொருள் களைக் கண்டு வியப்புற்று, அவன் தண்ணளித்திறனை வியந்து கொண்டாடினர். பின்னர், புலவர் பெருமான் சோழனிடம் பிரியா விடைபெற விரும்பினார். புலவர் தம்மை விட்டு நீங்க விரும்பியதை அறிந்த அரசன் அயர்வெய்தினன். புலவர் தாம்சென்று தம் மனைவி மக்களைக் காண விழைவதாகச் சொன்னார். உடனே, சோழன் மனமுவந்து அவருக்கு விடை கூறி யனுப்பினன்.

உறையூரை விட்டு நீங்கிய புலவர் வறுமையால் வாட்ட முறும் தம் மனைவி மக்களைக் காண வேண்டி, காற்றினும் கடிதோடிச் சென்று, தமது குடிலை யடைந்தார்; அரசன் தந்த வரிசைகளைக் காட்டினர்; அவர் மனைவிமக்கள் அளப்பரிய ஆனந்த மெய்தினர்; தமது வறுமை அன்றே தொலைந்ததென் றெண்ணினர். புலவர் இனிதே இல்லறம் நடத்திக் கொண்டு வந்தார்.

## 3. புலவரும் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பானும்

வளப்பமிக்க சோழ நாட்டில் பல சிற்றூர்கள் உண்டு. அவற்றுள் **பூஞ்சாற்றூர்** என்பது ஒன்று. நமது புலவர் வாழ்ந்த காலத்தில் அவ் வூரில் செல்வன் ஒருவன் இருந்தான். அவன் அந்தணர் திலகன். அவன் பெயர் **விண்ணந்தாயன்** என்பது. அவன் கௌணியர் குலத்தைச் சேர்ந்தவன். எனவே, ஊர்ப்பெயரும் மரபுப் பெயரும் குலப் பெயரும் இயற் பெயரும் சேர்த்து, 'பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன்' என்று அவனை யாவரும் அழைப்பாராயினர் அவன் பொறை, உண்மை, ஈதல் முதலிய பல சிறந்த குணங்களைப் பெற்றிருந்தான்; தமிழ் மொழியில் பெரும் பற்றுடையோன். அவனைத் தேடிச் செல்லும் புலவர் பெருமக்களை நன்கு உபசரித்து அவர்கள் மனமகிழுமாறு பரிசில் நல்கி யனுப்புபவன்.

அவ்வந்தணன் புகழ் சோணாடெங்கும் பரவியது. ஆவூரில் இருந்த மூலங்கிழார் அந்தணன் புகழைக் கேட்டார்; தாமும் அவனிடம் சென்று கவிபாடிப் பரிசில் பெறத் தீர்மானித்தார். அவர் தம் மனைவியிடம் விடைபெற்று, ஆவூரினின்றும் நீங்கிப்

பூஞ்சாற்றூரை யடைந்தார்; அந்தணச் செல்வனைக் கண்டார். வந்தவர் புலவர் என்பதை உணர்ந்துகொண்ட பார்ப்பான் "வருக, வருக, புலவரே வருக" என்று உள்ளத்தில் உவகைபூப்ப வர வேற்றான். புலவர் உள்ளங்குளிர்ந்து, அவனுடன் அளவளாவி , தாம் கற்ற கல்வியின் திறத்தைச் சிறிதே காட்டினர் புலவரின் கல்விப் பயிற்சியையும் அறிவின் ஆற்றலையும் கண்டு மகிழ்ந்த அந்தணன், புலவர் "போதும், போதும்" என்று சொல்லும் வரை, உயர்ந்த ஆடையாபரணங்களையும் மிக்க செல்வத்தையும் தந்தான். அவனது ஒப்புயர்வற்ற வள்ளற் றன்மைக்கு வியந்த புலவர் பெருமான் அவ்வந்தண வள்ளலை நோக்கி, "வள்ளலே! வேதங்கள் நான்கு கூறுபாடுகளை யுடையன; அவை பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடை யினையுடைய முதிய இறைவனது வாக்கைவிட்டு நீங்காதன. அத்தகைய முதுமையான வேதங்கட்கு மாறாகப் புத்தர்கள் வேறு நூல்களைச் செய்துள்ளார்கள். அம் மதத்தாரின் மிகுதியைச் சாய்க்க வேண்டி, அவர்களது மெய்போன்ற பொய்யை அறிந்து, அப் பொய்ம்மையை மெய்யென்று கருதாமல் உண்மைப் பொருளை அவர் களுக்கு ஏற்பச் சொல்லி, இருபத்தொரு வேள்வித் துறையையும் குறையின்றாகச் செய்து முடித்த புகழமைந்த தலைமையையுடைய அறிவுடையோர் மரபில் உள்ளானே! காட்டு நிலத்தில் வாழும் புல்வாய்க் கலையினது உறுப்புத் தோல், வேள்வித் தொழிற்கு வேண்டி, நினது தோளின்கண் இடப்பட்ட பூணு நூன்மீதே நீ போர்த்துள்ளாய். நின் மனைவியர் நின் மனநிலைக் கொத்த மனநிலை யுடையவர்கள். அவர்கள் பெறுதற்கரிய கற்பினை யுடையவர்கள்; அறநூலால் புகழ்ந்து பாராட்டப்பட்ட **சாலகத்**தைச் சூடியவர்கள்; பலவாகிய கூந்தலையுடையவர்கள். அவர்கள் தத்தமக்குப் பொருந்திய ஏவற்றொழிலைக் கேட்டுச் செய்வர். காடென்றும் நாடென்றும் சொல்லப்பட்ட இடத்தின்கண் பல வேள்விகளை நின் மனைவியரோடமர்ந்து செய்வை. ஆக் காலத்தில் நீ விருந்தினரை நன்கு உபசரிப்பை. அத்தகைய நினது திருந்திய மேம்பட்ட நிலைமையை யாங்கள் எந்நாளும் காண்பேமாக. வற்றாத வளம் பெற்றதும் சோணாட்டுக் குடிகட்குச் செவிலித்தாய் போன்றதுமாண காவிரிபாயும் குளிர்ந்த புனற்பக்கங்களை யுடையது எம்மூர். அதன்கண் உண்ணப்படுவனவற்றை யுண்டும், தின்னப் படுவனவற்றைத் தின்றும், ஏறப்படுவன வற்றை ஏறியும் யான் நின்



பெருமையைப் பலப்பட ஏத்திச் செல்வேனாக. மழை தலை யெடுப்ப உயர்ந்த நெடிய பக்க வரைகளை யுடையதாய் மூங்கில் வளரும் இமயமலையைப் போல நிலத்தின்மேலே நீ நிலை பெறுவாயாக, பெரும்," என்று, அந்தணர் பெருமையையும், வள்ளலின் அருங்குணத்தையும், அவன் வேள்வி செய்யும் முறையினையும், தன் மகிழ்வையும் விளக்கிக் கூறினார்.

புலவர் புகழ் மொழிகளைக் கேட்ட பார்ப்பன வள்ளல் புலவரை மார்புறத் தழுவி, பல புபசார வார்த்தைகளைக் கூறி, மீண்டும் பரிசில் நல்கினான். புலவர் பெருமகிழ்ச்சி யடைந்து, அவனிடம் விடைபெற்றுத் தம்மூர் போய்ச் சேர்ந்தார்.

## 4. மல்லிகிழான் காரியாதி

அக் காலத்தில் குட நாட்டை மல்லிகிழான் காரியாதி என்பவன் அரசாண்டுவந்தான். அவன் ஒரு சிறறரசன்; தன்னை நாடி வருவோர்க்கு அன்புடன் கொடுக்கும் கொடையை யுடையவன். அவ் வள்ளல் நற்குண நற் செயல்கள் நிரம்பியன்; குடிகளைத் தன் கண்ணே போல் பாதுகாத்து வந்தான். அவன் ஆட்சியில் குடிகள் இன்புற்றிருந்தனர் என்றே கூறுதல் அமையும்.

ஆவூர் மூலங்கிழார் மல்லிகிழான் காரியாதியைப் பற்றிக் கேள்வியுற்றார்; அவன் தன்னை வரவேற்றுப் பரிசில் நல்குவன் என்று எண்ணினார். அதனால், அவர் ஆவூரை விட்டு, அவ் வள்ளலை நாடிச் சென்றார். அவன் உறையும் பதியை யடைந்து, வள்ளலைக் கண்டார். அவனும் வந்தவர் புலவர் என்பதைக் குறிப்பால் உணர்ந்து அவரை வரவேற்றான்; புலவரின் ஊர், குலம், பெயர், குடும்பநிலை, கல்வியறிவு முதலிய விஷயங்களை விசாரித்தறிந்தான். அவன் புலவர் மீது உண்மையில் இரக்கங் கொண்டான்; சில நாட்கள் அவரைத் தன் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டான். புலவர் கவலையின்றி வள்ளலின் பாதுகாப்பில் இருந்தார். சின்னாட்கள் கழிந்த பின்னர், அவர் வள்ளலிடம் விடைபெற விரும்பினார். வள்ளல் அவருக்கு வேண்டிய பொருள்களைக் குறைவின்றி யளித்தான். அவனது வரையாது வழங்கும் வள்ளற்றன்மையை வியந்த புலவர் அவனைக் களிப்புற நோக்கி, "குறுநில மன்ன! நினது அரணில் நினக்குச் சிறந்த நட்புடையோர் எளிதிற் புகப்பெறுவர். போர் ஆயின், திங்களாலும் நுழைய முடியாது. அங்ஙனம் செறிந்ததும் நுழையப்படாததும் ஆன பொறிகளைப் பொருந்திய நெருங்கிய

வாயிலை யுடையது நினது அரண். உனது நாட்டுக் குடிகள் இவ் வரணுள்ளே யிருந்து மதுவை நூகர்வர்; இனிதாகக் காலங் கழிப்பர்; பின்னர்ச் செருக்கினால் விடாய் மிகுந்து, புளிச் சுவையை விரும்புவர். அப்போது அவர்கள் கண்கள் மதத்தால் சிவந்திருக்கும். இனிய புளிச்சுவையையுடைய களாப் பழத்துடனே துடரிப் பழத்தையுந் தின்று, பைந்தேன் அரித்தொழுகுகின்ற நல்ல கான்யாற்றினது மணற் குன்றின்கண்ணே யேறிக் கரிய நாவற் பழத்தைப் பறித்து இருந்துண்ணும் இயல்பு வாய்ந்தவன் நீ. பெரிய காட்டையுடைய குடநாட்டின்கண் மறவர் எய்து கொண்டுவரப் பட்ட எய்ப் பன்றியினது நிணமிக்க தசையை வருவார்க் கெல்லாம் ஒப்பக் கொடு வந்து நினது ஆட்கள் சொரிவார்கள். அங்ஙனம் சொரியப் பட்ட தசையை விடியற் காலத்தில் உண்ணுவது வழக்கம். நீ விருந்தினர்க் களிக்குஞ் சிறப்பு இதனால் நன்கு விளங்குகின்றது. இவ் விடியற்காலத்துச் சீருக்கு, அரசரது அரண்மனை வாயிலின்கண் பல நாள் காத்திருந்து, பலவாறு பாடிப் பரிசிலாகப் பெறும் பொற் படையணிந்த யானை நிகரொவ்வாது" என்ற கருத்தமைந்த கொழுவிய பாடல் ஒன்றினைப் பாடினர். இப் பாடலால், ஆதியினது விருந்தோம்பும் தன்மை நன்கு புலனாகின்றது.

பின்னர்ப் புலவர் அங்கு நின்றும் நீங்கி, சின்னாட்களில் தம் பதியை யடைந்தார். புலவர் சென்ற விடமெல்லாம் சிறப்பெய்தி, பெரும் பரிசுகளுடன் இல்லத்திற்கு வருவதைக் காண அவர் குடும்பத்தார் மகிழ் வெய்தினர். கல்வியின் பெருமையை அவர்கள் அப்போதே உணர்ந்தார்கள். கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை என்பதில் ஐயம் என்ன?

## 5. பாண்டியன்–கீரஞ்சாத்தன்

பீடு மிக்க பாண்டிய நாட்டில் பல சிற்றரசர்கள் சிற்றூர் களை யாண்டுவந்தார்கள். அவர்களில் பெரும் பாலர் பாண்டியர் மரபினராகவே யிருந்தார்கள். அரசபட்டத்திற்கு நெருங்கிய உறவற்றவர்கள் சிற்றூர்களை யாண்டுவந்தார்கள். அவர்கள் குறுநிலமன்னர் என்றே அழைக்கப்பட்டனர். அவ் வரசர்கள் தம் தலைவனாகிய பெரிய பாண்டியனுக்கு அடங்கி நடக்க வேண்டியவர்கள். பாண்டிமன்னன் பிற நாட்டார்மீது போர் புரியச் சென்றால், இக் குறுநில மன்னரும் உதவி புரிய வேண்டும். இக் காலத்திய வழக்கம் போன்றே அக் காலத்துக் காவலர்க் குள்ளும் இவ் வழக்கம் இருந்து வந்தது.



இங்ஙனம் பாண்டிய நாட்டுச் சிற்றரசர்களாக விளங்கிய வர்களில் **கீரஞ்சாத்தன்** என்பவன் ஒருவன். அவன் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் உடையோன். மிக்க வளப்பம் பொருந்திய நாட்டை அவன் ஆண்டு வந்தான். குடிகளைச் செவ்வனே அரசாள்வதும் வறியோர்க்கு வழங்குதலும் ஒரு அரசனது சிறந்த கடமைகள் என அம் மன்னன் கருதியிருந்தான்; யானையேற்றம், குதிரையேற்றம், படைக்கலப் பயிற்சி என்பன போன்ற அரசர்க்குரிய பயிற்சிகளில் தேர்ச்சியுற்ற வீரன்; தன்னைத் தேடி வந்தோர்க்கு அன்புடன் உபசரித்து உணவளிக்கும் உத்தமன்.

அவனது சிறந்த கொள்கைகள் தமிழ் நாடெங்கும் பரவலாயின. பல புலவர்களும் இரவலர்களும் அவனைச் சென்று கண்டு இனிய கவிகளைப் பாடி, அவனை மகிழ்வித்துப் பரிசில் பெற்றேகுவர். அவனது அரண்மனை வாயிற் கதவு புலவர்க்கும் ஏழைகட்கும் வழிவிடும் தன்மைத்து. அவர்கள் எதை விரும்பி வரினும் வள்ளல் அதனை ஈதலிற் றவிரான். இத்தகைச் சிறந்த கொடையாளியின் பெயர் தமிழ் நாட்டிற் பரந்தது வியப்பன்று.

கீரஞ்சாத்தனின் புகழை நம் புலவர் பெருமான் கேள்வி யுற்றார்; உடனே அவனைச் சென்று காண்பதென உறுதி கொண்டார். புலவர் தம்மூரை விட்டுப் புறப்பட்டுப் பாண்டிய நாட்டை யடைந்தார்; கீரஞ்சாத்தன் அரசாண்டு வந்த புகழ்ப்பெருநகரை மேவினர்; அரசனை ஆவலுடன் சென்று கண்டனர்.

பாண்டியன் புலவரை அன்போடு உபசரித்து, ஆதன மொன்றில் அமரச் செய்தான்; அவரைப் பற்றிய வரலாற்றைக் கேட்டறிந்தான்; புலவர் வறுமைப்பிணியால் வாட்டமுறுவதை அறிந்த பாண்டியன் மனங் கவன்றான். புலவர் "போதும், போதும்" என்று பன்முறை கூறிய பின்னரே அவன் ஈதலை நிறுத்தினான். பட்டாடைகளும், பழவகைகளும், பொன்னும் மணியும் ஏராளமாகப் பெற்றார் புலவர்.

புலவர் பெருமான் பாண்டியனின் ஈகைத்தன் மையை வியந்து கொண்டாடுபவராய், "அரசே! நினது யானைகள் கம்பத்தை வெறுத்து நெட்டுயிர்ப்புக் கொள்ளுதலை யுடையன. நின் குதிரைகளும் அங்ஙனமே. இவை இரண்டும் மணல் மிக்க

நின் அரண்மனை முற்றத்தின்கண் உலவும். அந்த முற்றத்தின் கட்புக்க சான்றோர் அப்பொழுது உண்ணார். ஆயினும், நீ, உன்னுடனே சார்த்திச் சூளுற்று 'உண்மின்' என்று அவரை வேண்டிக்கொள்வை. பெரிய பெயரையுடைய சாத்த! நீ, அவர்களிடம் காட்டும் அன்பைப்போலவே எம்போல்வாரிடத்தும் அன்பு காட்டுகின்றனை. அதனால், நீ எங்கட்கு மென்மையை யுடையை. ஆனால், 'நாங்கள் கீரஞ்சாத்தனை எளிதிலே வென்று விடுவோம்; அவன் படைக்கு அஞ்சோம்' என வீர வார்த்தைகளைப் பேசிவரும் நின்பகைவர்க்கு நீ இன்னாய். அவர்கள் உனக்குப் பயந்து, போர்க் களத்தை விட்டு ஒடுங்காலத்து, அவர்களை விடாமற் சென்று உனது பேராண்மை விளங்கத் தடுத்து அவர்கள் முன் நிற்பை. ஆகவே, நீ, அவர்களுக்கு எமன் போன்றவன். பெரும! நீ ஆற்று மணலினும் பல வாழ்நாட்களைப் பெற்று நீடூழி வாழ்வாயாக" என்று பாண்டியன் தண்ணளித் திறனையும், போர் செய் வன்மையையும் எடுத்துக்கூறி வாழ்த்தினார்.

கீரஞ்சாத்தன் மூலங்கிழார் மீது அளவு கடந்த அன்பு கொண்டான்; அவரது செம்மொழிப் புலமையைக் கண்டு சிறந்த நட்புக் கொண்டான். பின்னர்ச் சின்னாட்கள் அங்குத் தங்கியிருந்த புலவர், பாண்டியனிடம் விடைபெற்றுத் தம்மூர் போய்ச் சேர்ந்தார்.

## 6. புலவரும் நன்மாறனும்

கீரஞ்சாத்தன் பாண்டிய நாட்டுச் சிற்றரசனாக இருக்கையில், பாண்டிய மன்னனாக விளங்கியவன் **இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்** என்பவன். அவன் அக் காலத்து முடியுடை மூவேந்தரினும் சிறப்புற்று விளங்கியவன். அவனைத் தமிழுக்குத் தாய் போன்றவன் என்று பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள். அரசற்குரிய உத்தம இலக்கணங்களைப் பெற்ற அம் மன்னன் செங்கோலரசனாக விளங்கினான். அவனது அரண்மனையை இரவலர் தம் தாய் வீடெனக் கருதினர்.

பாண்டியன் வருவார்க்கும் போவார்க்கும் வரையின்றிக் கொடுப்பது, தமிழ் நாடெங்கும் பரவியது. பல புலவர்கள் அவனைச் சென்று கண்டனர்; தங்கள் ஆற்றலுக் கேற்றவாறு அவனது குணாதிசயங்களைப் புகழ்ந்தனர்; செங்கோன்மையைப் புகழ்ந்தனர்; போர்த்திறத்தை வியந்தனர்; மிக்க பரிசிலைப் பெற்றனர். இங்ஙனம் சென்று பாண்டியன் நட்பைப் பெரிதும் பெற்ற புலவர்கள் மதுரை-மருதனிளநாகனார், நக்கீரனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், வடமவண்ணக்கன் பெரிய சாத்தனார் என்போர். பாண்டியன் புகழைக் கேள்வி யுற்றார் ஆவூர்-மூலங்கிழார். உடனே அவர் தம்மூரினின்றும் நீங்கி, பாண்டிய நாட்டை யடைந்தார்; பீடு மிக்க மாடமதுரையுள் நுழைந்தார்; பாண்டியர் பெருமானை நேரிற் கண்டார். தமது புலமைத் திறத்தால் பல தீங் கவிகளைப் பாடி அரசனை மகிழ்வித்தார். ஆனால், பாண்டியன் எக் காரணத்தாலோ புலவர்க்குப் பரிசில் தராது நீட்டித்தான். புலவர் சில நாட்கள் காத்திருந்தனர்; அரசன் பரிசில் ஈந்தனுப்பும் வழியைக் காணார்; அவர் மனங் கொதித்தது. புலவர் மனம் வேறுபட்டாற் சொல்லவும் வேண்டுமோ? அரசன் அம்பாற் சுடுவானாயின், புலவர் சொல்லாற் சுடுபவர் அன்றோ?

மூலங்கிழார் பெரிதும் வருத்தம் அடைந்து, பாண்டியர் பெருமானை நோக்கி, "இறைவ! தம்மாற் கொடுக்க வியலும் பொருளை 'இயலும்' என்று சொல்லிக்கொடுத்தலும், யாவர்க்கும் தம்மாற் கொடுக்க வியலாத பொருளை 'இல்லை' என்று சொல்லி மறுத்தலும் ஆகிய இரண்டும் தாளாண்மைப் பக்கத்துளவாகிய நட்பின் கூற்றின் உள்ளன. தனக்கு இயலாததனை 'இயலும்' என்றாலும், இயலும் பொருளை 'இல்லை' என்று மறுத்தலும் ஆகிய இரண்டும் இரப்போரை மெலிவித்தலன்றியும், ஈவோர் புகழ் குறைபடும் வழியாம். இப்போது நீ எம்மளவிற் செய்த செய்தியும் அத் தன்மைத்தாகுக. இதுவரை இத்தகைச் செய்தியை எங்குடியுள்ளார் கண்டிலர்; யாம் கண்டோம். அத் தீங்கினால், நின் பிள்ளைகள் நோயின்றியே யிருப்பாராக; யானும், வெயில் என்று நினைந்து போக்கை வெறேனாய்ப் பனியென்று கருதிச், சோம்பலுற் றிரேனாய் இருக்கக் கடவேன்; எனது நல்குரவின் மிகுதியால் மனையிடத்து நாணல்லது வேறில்லாத கற்பினையும் ஒளியையுடைத்தாகிய நுதலினையும் மெல்லிய இயல்பினையும் உடைய குறுமகளை நினைந்து போவேன்; நின் ஆயுள் மிகுவதாக" என்று, ஈவோர் இருக்கவேண்டிய லட்சணத்தையும், பாண்டியன் நெறி தவறிய செய்யையும், அதன் இழிவையும், அதனால் அவன் உறும் பயனையும் விளக்கமாகக் கூறி, அவ்விடத்தினின்றும் புறப்பட்டார்.

புலவர் புகன்றவை பாண்டியன் மனத்தைக் கலக்கின. அவன் பரிசில் நீட்டித்தது பிழை யென்று எண்ணி வருந்தினான். புலவர் சீற்றம் எய்தின் அரசர் புகழ் மாயும் என்பதை அவன் நன்கு அறிவான். மேலும், மூலங்கிழார் கல்வியறிவும் சிறந்த ஒழுக்கமும் வாய்ந்த வேளாண் மரபினர் என்பதும் அவனுக்குத் தெரியும். அவன் புலவர் செல்வதை யறிந்து, தன் ஆதனத்தினின்றும் கீழே குதித்துப் புலவரை மறித்து, "கவியரசே! தம்பால் நச்சிய நேயத்தால் தம்மை விட்டுப் பிரிய மனமற்றவனாய்ப் பரிசில் தாழ்த்தினேன்; வேண்டுமாயின் இக்கணமே பெறுக; தம் போன்ற பேரறிவாளர் இங்ஙனம் சினங் கொள்ளல் ஏற்புடைத்தோ?" என்று உபசார வார்த்தைகள் கூறினான்.

அவ்வளவில் அமைச்சர் பல திறப்பட்ட பரிசில்களைக் கொணர்ந்தனர். மன்னன் மனமகிழ்ச்சியோடு புலவர்க் கீந்தான். புலவர், தம் சீற்றம் எல்லாம் காற்றிற் பரக்க விடுத்தவராய், இரு கைகளையும் நீட்டிப் பரிசில் பெற்றார்; பின்னர் அரசனோ டறுசுவை உண்டி அன்புடன் உண்டு, அவனிடம் விடை பெற்றுத் தம் மூரை யடைந்தார்.

இங்ஙனம் புலவர் பெருமானாய ஆவூர்-மூலங்கிழார் தமது பேரறிவாற்றால் அரசர்களையும் செல்வப் பெருமக்களையும் மகிழ்வித்துப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்திவந்தனர். சிலகாலம் இல்லற வாழ்க்கையில் இருந்தபின்னர், பைந் தமிழ்ப் புலவர் பெருமான் எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெருமானின் கழலடி நீழலைச் சார்ந்தார்.

## 7. புலவர்பாடிய செய்யுட்கள்

ஆவூர்-மூலங்கிழார் பாடிய செய்யுட்களில் அகநானூற்றில் (24, 156, 341) மூன்று செய்யுட்களும், புறநானூற்றில் (38, 40, 166, 177, 178, 196, 261, 301) எட்டுச் செய்யுட்களும் காணப்படுகின்றன. இச் செய்யுட்கள் பரிசில் பெறப் பாடப்பட்டவை யாதலின் இவை, பெருவேந்தர், குறுநிலமன்னர் என்போரின் வீரம், ஈகை, செங்கோன்மை முதலிய சிறந்த குணாதிசயங்களைத் தழுவியும் செல்வரின் தண்ணளித்திறனை வியந்தும் பாடப்பட்டவை. இப் புலவரால் பாடப் பெற்றவர்கள் சோழன்-குளமுற்றத் துஞ்சிய கிள்ளிவளவன், சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன், மல்லிகிழான்காரியாதி,



பாண்டியன் - கீரஞ்சாத்தன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்போர்.

மூலங்கிழார் பாடிய செய்யுட்களில் இருந்து, பண்டைக் கால அரசர்கள் வாழ்ந்த நிலையும், அவர்கள் போர் செய்யுந் திறனும், குடிகளை அறத்துடன் ஆளும் அழகும், புலவரையும் தமிழையும் அன்போடு ஆதரித்த தன்மையும், பிறவும் நன்கு புலனாகின்றன. அரசர்களைப் புலவர் வாழ்த்துவதென்றால், 'நீ ஆற்று மணலினும் பல வாழ்நாட்களைப் பெற்று வாழ்தி' என்றும், கோபமுற்று அவர்களைச் சபிக்கவிரும்பினரென்றால், 'நீ, நோயின்றி வாழ்வாயாக' என்றும் கூறுவன ஆராயற் பாலன. இவற்றால், பண்டைக்காலத்தில் தமிழ்மக்கள் பேசிவந்த புகழ்மொழியும் இகழ் மொழியும் இற்றெனப் புலப்படும்.

*மூலங்கிழார்,*

*'வேளாப் பார்ப்பான் வாளரந்துமித்த*
*வளைகளைந் தொழிந்த கொழுந்து'* -அகநானூறு.

அதாவது, யாகம் பண்ணாத ஊர்ப் பார்ப்பான்-இவர்களுக்குச் சங்கறுக்கையுந் தொழில் என்பதாகப் பாடியுள்ளார். மேலும் அவர், கவுணியன் விண்ணந்தாயனைப் புகழ்ந்து பாடிய பாடலில்,

*'நன்றாய்ந்த நீணிமிர்சடை*
*முதுமுதல்வன் வாய்போகா*
*தொன்று புரிந்த வீரிரண்டி*
*னாறுணந்த வொருமுதுநா*
*லிகல்கண்டோர் மிகல்சாய்மார்*
*மெய்யன்ன பொய்யுணர்ந்து*
*பொய்யோராது மெய்கொளீஇ*
*மூவேழ் துறைய முட்டின்று போகிய*
*வுரைசால் சிறப்பி னுரவோர் மருக!'*

என்ற அடிகளால், யாகத்தின் பெருமையையும், யாகம் செய்து வைதிக மதத்தை நிலை நிறுத்திய அந்தணர்களைப் புகழ்ந்து பேசியதையும், பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் செய்த யாகத்தையும் பலபடப் புகழ்ந்து கூறுவதால், இம் மூலங்கிழார் என்பவர் வைதிக மதத்திற் பெரும் பற்றுள்ளவர் என்பது அரியக் கிடக்கின்றது.

# II. காரிக் கண்ணனார்

## 1. காரிக் கண்ணனார்

எந் நாட்டினும் சிறந்ததான சோழ நாட்டில் சிறந்த பட்டணங்களுள் ஒன்று காவிரிப்பூம் பட்டினம் என்பது. அது, காவிரியாறு கடலொடு கலக்கும் சங்கமுகம் என்னுந் துறையை யுடையது. அந்நகரைப் பூம்புகார் என்றும், புகார் என்றுங் கூறுவர். அந்த நகரில் தொழிலும் வாணிபமும் பெருகி இருந்தன. அங்குத் தொழிலுக்கு ஏற்றபடி கூலிகொடாமல் தொழிலாளர் களின் மனம் வருந்தக் குறைத்துக் கொடுக்கும் முதலாளிகளும், முதலாளிகள் வெறுக்கும் படிச் சோம்பர்களா யிருந்து, கூலிபெற ஆசிக்கும் தொழிலாளர்களும் கிடையார். அதனால், அங்குத் தொழிலும் வாணிபமும் செழித்தோங்கி விளங்கின.

அந் நகரில் வணிகர்கள் பெருங்குடி மக்களாகவே யிருந்தார்கள். அவர்கள் தங்கள் மூதாதைகள் காலத்திருந்தே வாணிபத் தொழிலை நடத்திவந்தனர். ஆதலால், அவர்களின் செல்வம் பலகோடிக் கணக்காகவேயிருக்கும். வறுமை என்பதை அந்த நகரில் ஒருவரும் அறியார் என்றே சொல்ல வேண்டும்.

காவிரிப்பூம் பட்டினம் துறைமுகத்தை யடுத்திருந்தமையின் அயல்நாட்டாருடன் வியாபாரஞ் செய்யும் பல வணிகரும் செல்வரும் அந் நகரில் மிக்கிருந்தனர். அந்நகர் சோழநாட்டிற்கே தலைமைப் பட்டினமாக விளங்கியது. சோழர்குலத் துங்கனான கரிகால் வளவன் சோணாட்டையாண்டிருந்த காலத்தும் அந்நகரையே தலைநகராகக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னர் வந்த மன்னர்கள் பலரும் காவிரிப்பூம்பட்டினத்தையே தலைநகராகக் கொண்டிருந்தனர்.

இங்ஙனம், பல வழிகளிலும் சிறப்புற்று விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் குலத்தில் காரிக்கண்ணன் என்ற ஒருவர் இருந்தார். அவர் இளமையில் பல நல்லாசிரியர் களை யடுத்து, தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேறிப் பைந்தமிழ்ப் புலவர் பெருமானாய் விளங்கினார்.



## 2. புலவரும் பாண்டியன் – மாறனும்

புலவர்-காரிக்கண்ணனார் சோழநாட்டில் வாழ்ந்து வருகையில், பாண்டியநாட்டில் **இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்** என்ற பாண்டிய மன்னன் அரசாண்டுவந்தான். அவன் சிறந்த புலமை வாய்ந்தோன்; புலவர் விரும்பியவாறே கொடுக்கும் தண்ணளிச் செல்வன்.

புலவர் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டனர். எனவே, அவரை வறுமைப்பிணி வாட்டத் தலைப்பட்டது. "யாரிடம் சென்றால் நம் வறுமை ஒழியும்? என்னே நமது ஊழ்வினைப் பயன் இருந்தவாறு! நாம் எவரிடம் சென்று பொருள் கேட்பது? உலகத்தில் செல்வராயினோர் பலர் உளர் என்றாலும், அவர் யாவரும் அறிவுடைச் செல்வராகாரே! அறிவுடை மக்களிடத்தே சென்றாலன்றோ, அவர் நமது பெருமையையும் நம்மைப் பிடித்து அலைக்கும் வறுமையையும் நன்குணர்ந்து பரிசில் நல்கத்தக்கவர். புல்லறிவாளர் செல்வரேயாயினும் நாம் அவரிடத்துச் சென்று பயன் என்?

திருவளர்க்கும் செந்தமிழாலாகிய தேனினும் இனிய பாக்களைத் தமிழின் அருமைமையும் புலவரது பெருமையையும் நுணிகி அறியவல்ல பேராற்றல் வாய்ந்த வள்ளல்களிடத்தன்றோ பாடவேண்டும். அவர்களிடம் சென்றால், நமது வறுமையும் நீங்கும். அங்ஙனம் செல்வோம் என்றாலும், யாரிடத்துச் செல்வது? ஆ! நல்லயோசனை! தற்போது யாவரும் சிறப்பித்துக் கூறும் பாண்டியன்-நன்மாறனிடம் செல்வோம். அவனே நமது வறுமையை யகற்றும் பெருமை வாய்ந்தவன்" என்று, புலவர் பலவாறு எண்ணமிட்டவராய் ஒரு முடிவுக்கு வந்தார்.

அவர் உடனே காவிரிப்பூம் பட்டினத்தை விட்டகன்று, பலநாட்கள் வழி நடந்து பாண்டிய நாட்டையடைந்தார். அடைந்தவர் நேரே அரசனின் அரண்மனையுள் நுழைந்து அரசனைக் கண்டார். புலவர் பெருமையை அவர் முகத்தால் உணர்ந்த பாண்டியன் அவரை நன்முகத்தோடு உபசரித்தான்.

பாண்டியனிடம் சில சாட்கள் இனிதாகக் காலங்கழித்தார் காரிக்கண்ணனார். புலவர் இடையிடையே பைந்தமிழன் பெருமையை அரிய பாடல்களால் விளக்கி, அரசனையும் அவையையும் மகிழ்வித்தார். அரசன் புலவர்க்கு வேண்டிய உபசாரங்களைக் குறைவறச் செய்து வந்தான். புலவர் ஒருநாள்

*பாண்டியனது வெற்றித்திறத்தைப் புகழ விரும்பியவராய் அவனை நோக்கி,*

*"மாயோனை யொத்த சொல்லுதல் அமைந்த தலைமையை யுடைய புகழமைந்த மாற! யாதொரு கல்வியிலாவது வலியா ராயினும் எளியாராயினும் நினது ஆட்களாகிய அவர்கட்கு ஒன்று கூற விரும்புகின்றேன். அது யாதெனின், நீ, நினது பகைவர் நாட்டைக் கொள்ளுங் காலத்து அவர் நாட்டின்கண் வளைந்த கதிர் சாய்ந்துள்ள வயலை நின்னுடைய வீரர் கொள்ளை கொள்க; அகன்ற இடத்தையுடைய பெரிய ஊரைத் தீயுஞ் சுடுக; மின் நிமிர்ந்தாற்போன்ற நினது ஒளி பொருந்திய வேல் பகைவரை அழிக்கினும் அழிக்க; ஆனால், காவன் மரத்தை வெட்டுதலை நீ பாதுகாப்பாயாக; ஏன் எனில், நின்னுடைய நெடிய நல்ல யானை கட்டு முன்பு நட்டு நிற்கின்ற தறிகள் வலிவிழந்துள்ளன. அரசே! நீ, வாழ்க" என்ற கருத்தை வைத்து,*

*"வல்லா ராயினும் வல்லுந ராயினும்*
*புகழ்தலுற் றோர்க்கு மாயோ னன்ன*
*வுரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற!*
*நின்னொன்று கூறுவ துடையேன்; என்னெனிற்*
*பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்*
*டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க;*
*நனந்தலைப் பேரூ ரெரியு நக்க;*
*மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவே*
*லொன்னார்ச் செகுப்பினுஞ் செகுப்ப; என்னதூஉம்*
*கடிமரந் தடித லோம்பு நின்*
*னெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே."*

*என்ற நற்றமிழ்ப் பாவினை நயம்பட உரைந்தார்.*

*பாண்டியன், தன்னைப் புலவர் புகழ்ந்து கூறியதைக் கேட்டதும் பெருமகிழ் வெய்தினன். அவர் பாடலால் அரசன் தமிழ் அருமையையும் புலவர் பெருமையையும் ஒருங்கே உணர்ந்தான். பின்னர், இரண்டொரு நாள் கழித்துத் புலவர்-காரிக்கண்ணனார் பாண்டியனிடம் விடைபெற்றுத் தம்மூரை அடைந்தார்.*



## 3. புலவரும் பிட்டங்கொற்றனும்

*புலவர் சோணாட்டில் வாழுங் காலை, சேர்நாட்டில் குதிரைமலைப் பிரதேசத்தைச் சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் பெயர் **பிட்டங்கொற்றன்** என்பது. அவன் புகழ்பெற்றக் கொடையாளிகளுள் ஒருவன். அவ் வள்ளல் சேரனுடைய சேனாதிபதியாக விருந்தான். உடல் வன்மையும், ஈகைத்தன்மையும் உடைய அவன் தன் குடிகளை அருளோடும் அன்புடனும் ஆண்டு வந்தான். அவனது ஒப்பற்ற புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது.*

*தமிழ் நாட்டில் பரந்த செய்தி நம் புலவர் திலகரான காரிக் கண்ணனார் காதில் விழாமற்போகவில்லை. அவர் அவ் வள்ளலைச் சென்று காண விழைவுகொண்டார். புலவர், தாம் விரும்பியபடியே குதிரை மலையையடைந்தார். அடைந்தவர், நேரே சென்று அரசனைக் கண்டார். பிட்டனும் புலவரைப் புன்முறுவலோடு வரவேற்றான். புலவர் தனது ஊர், பெயர், மரபு முதலியவற்றை விவரமாகக் கூறினர். வள்ளலும் அவரது வரலாற்றை யுணர்ந்து, இரக்கங்கொண்டு, அவரைத் தன்னிடத்தே சில நாள் வைத்திருக்க விரும்பினான். அதனை யுணர்ந்த புலவர் அவனை நோக்கி,*

*"வேந்தே! நீ, உனது படை பகைவர் மேற்போங்காலத்து அவரது படையாகிய வேல் முதலாயவற்றை ஓங்கி யெறியும் படைக்கு முன்னே நிற்பை. அவர் படை அடர்த்துவருங் காலத்து உனது படையினது அணியைத் தாங்கவேண்டி அகன்ற ஆற்றின் குறுக்கே தடுத்துகிடக்கின்ற மலையைப் போல அதனைத் தடுத்து நிற்பை. ஆதலால், பெரும! நின்னைக் காணத்தக்க காலம் பெறுதல் அரிது. நீ, பகைவர்க்கு நமனையொத்தவன். எனது சுற்றத்தினது இடும்பை பெரிதாதலால் நீ இப்பொழுதே எனக்குப் பரிசில் தந்து விடுவாயாக; நினது வென்றி வாழ்வதாக" என்ற கருத்தமைந்த செய்யுள் ஒன்றினைப் பாடினர்.*

*புலவர் வறுமையை யுணர்ந்து பிட்டங் கொற்றன், அவர் விரும்பியவிதமே அவர் மனம் வெறுக்குமாறு பரிசில் நல்கினான். அவன் தம்மிடம் கொண்ட கரைகடந்த உள்ளன்பையும், வரையாதளிக்கும் ஈகைத்தன்மையையும் கண்டு வியந்தார் புலவர். அவர் அவனைப் பலப்பட ஏத்தினார். அன்று புலவர்*

அரசனோடிருந்து அறுசுவையுண்டி கொண்டனர். புலவர் அவனது தண்ணளித்திறனை வியந்தவராய்,

"திருந்திய வேலையுடைய கொற்றன், இன்று போகினும் தருவன்; சிறிது நாட் கழித்துப் போகினும் தருவன்; பின்னையும் 'முன்னே தந்தேன்' என்னாது, பயின்று நாடோறுஞ் சென்றாலும் பொய்யானாகி யாம் வேண்டியபடியே எம்முடையவறிய கலத்தை நிரப்புவன். அவ் வள்ளல் தான் விரும்பியபடியே தன்னுடைய அரசன் உவப்ப, செய்தற்கரிய போர்த்தொழில்களை முடிப்பானாக. இரவலர், இனமாகிய வெவ்விய சேக்களைத் தொழுவோடே வேண்டினும களத்தின்கண் மலிந்த நெல்லின் குவியை வேண்டினும், பெறுதற்கரிய அணிகலங்களைக் களிற்றுடனே வேண்டினும், பெரிய தகைமையை யுடைய பிட்டன், அவற்றை ஈதலிற்றவரா வண்மையுடையோன். ஈவோர் அரிதாகிய இவ் வுலகத்தின்கண் வள்ளன்மையிற் சிறந்து இப் பிட்டங் கொற்றன் விளங்குவதால், அவனது தாள் வாழ்வதாக" என்ற கருத்தைக்கொண்ட செந்தமிழ்ச் செய்யுள் ஒன்றினைப் பாடி யகன்றார்.

## 4. புலவரும் சோழ பாண்டியரும்

சோழ நாட்டில் புலவர்-காரிக்கண்ணனார் வாழ்ந்து வருகையில் **குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திர மாவளவன்** என்னும் சோழன் ஆண்டு வந்தான். அவன் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் உடையவன்; குடிகளைக் கண்ணென மதித்து ஆள்பவன்; அவர்களுக்கு நற்றாதை போன்றவன்; அவன் தன் குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், வேற்றரச ராலும், கள்வராலும், விலங்குகளாலும் நேரும் ஐவகைத் துன்பந் துடைத்துக் காத்து வந்தான்.

சோழன் சோணாட்டை யாள்கையில், பாண்டிய நாட்டை **வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி** என்போன் ஆண்டிருந்தான். அவனும் சோழனைப்போல நற்குண நற்செயல் களிற் சிறந்தவன்; சோழனுக்கு உயிர்த்துணைவன்.

ஒரு முறை எக் காரணத்தாலோ சோழனும் பாண்டியனும் ஒருங்கிருந்தார்கள். அப்போது, அவர்கள் இருவரையும் நேரிற்கண்டு பாடிப் பரிசில் பெற வேண்டும் என்று விரும்பிய புலவர் - காரிக்கண்ணனார் அவர்கள் இருந்த பதியை



யடைந்தார்; அவர்கள் இருவரையும் நேரிற் கண்டார்; கண்டவர், தம் வரலாற்றை அவர்களுக்கு எடுத்துக் கூறி,

"சோழமன்ன! நீ காவிரிக்குத் தலைவன். இவன் தனக்கு முன்னுள்ளோர் குறைந்தாராகத்தான் தளராது நல்ல புகழை யுடைய பழையகுடியைத் தடுமாற்றம் அற அணைத்து, தான் சிறிதேயாயினும் கிளையுடனே பாம்பை யெறியும் பொறுத்தற் கரிய வெள்ளிய உருமேறுபோல் இளமைக் காலத்தும் பகைவரைக் காணப் பொறாத போரின்கண் மாட்சிமைப்பட்ட பாண்டியர் குடியுள் ஏறுபோல்வான். நீ, அறந்தங்கும் உறையூரின் கண் அரசன்; இவன், நெல்லும் நீரும் யாவர்க்கும் எளியவெனக் கருதி, அவை போலாது யாவர்க்கும் பெறுதற்கரிய பொதிய மலையிடத்துச் சந்தனமும் கடலிடத்து முத்தும் பெறும் தலைவன்; முரசம் மூன்றுடனே யாள்பவன்; தமிழ் பொருந்திய மதுரைக்கண் குளிர்ந்த செங்கோலை யுடையவன். நீவிர் இருவரும், பால்போலும் நிறத்தை யுடைய பனைக்கொடியை யுடையோனும், நீல நிறம்போலும் திருமேனியை யுடைய ஆழியையுடையோனும் என்று சொல்லப்படும் இரண்டு பெரிய தெய்வமும் ஒருங்கு நின்றாற் போல உட்குப் பொருந்திய காட்சியோடு அச்சம் வர விளங்கி இத் தன்மையர் ஆகுதலின், இதனினும் இனிய பொருள் உளவோ? இன்னமும் கேளீர்; நும்முடைய புகழ் நெடுங்காலம் செல்வதாக; நும்முள் ஒருவீர் ஒருவீர்க்கு உதவுவீராக; நீங்கள் இருவரும் கூடி நிற்கின்றஇந் நிலையின் வேறுபடீராயின், இந் நிலவுலகம் உங்கள் கையகத்தே படுதல் பொய்யாகாது. ஆதலால், நுமது கூட்டம் நல்லன போலேயிருக்கக் கடவன; நியாயத்தையுடையன போலே யிருக்கக்கடவன; பழையோர் ஒழுகிய ஒழுக்கம் உடையன போலேயும் இருக்கக் கடவன; அன்பு பொருந்திய நெஞ்சை யுடைய நும் இருவர் இடையே புகுந்து நும்மைப் பிரித்தற்கு அயலார் அலமருக; அவரது சிறப்பில்லாத மொழியைக் கேளா தொழிவீராக. நும்முடைய வேல், வென்று வென்று கொலைக்களத்தின்கண் மேம்படுக; குன்றையுடைய பிறருடைய நாடுகள், புலி வடிவாகச் செய்யப்பட்ட கொடியையும் பெரிய நீரின்கண் வாழும் கயல் போலச் செய்யப்பட்ட கொடியையும் சிகரங்களிலே பெற்றிருக்கக் கடவன; அரசர்களே! நீவிர் இருவரும் நீடூழி வாழ்க"

என்று, புலவர் அவர்கள் வெற்றி மேம்பாட்டையும், அவர்கள் ஒன்றுசேர்ந் திருப்பதால் உண்டாகும் நன்மையையும் தெளிவுபடக் கூறினார்.

புலவரின் புகழ் மொழிகளும் புத்தி மொழிகளும் இரு பெரு வேந்தரை மகிழ்வித்தன. அவர்கள் அகமலர முகமலர்ந்து, புலவரின் அருமையை உணர்ந்து, அவருக்கு வேண்டிய பரிசில்களைக் கொடுத்தனர். புலவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுத் தம் மூரையடைந்தார்.

இங்ஙனம், புலவர்-காரிக்கண்ணனார் பெருவேந்தர், குறுநில மன்னர், வள்ளல்கள் முதலாயினோரை வாழ்த்தியும், அவர்களின் அரும் பெருஞ் செயல்களை எடுத்துக் கூறியும் பலவாறு புகழ்ந்து பாடி, அவர்களால் ஆதரிக்கப் பெற்று வந்து இறுதியில் எம்பெருமான் அடிக் கமலங்களைச் சார்ந்தார்.

## 5. பாக்களின் நயம்

இவர் பாடியனவாக நற்றிணையில் 237-ம் செய்யுளும், குறுந்தொகையில் ஒன்றும், அகப்பாட்டில் (107, 123, 285) மூன்றும், புறப்பாட்டில் (57, 58, 169, 171, 353) ஐந்தும், திருவள்ளுவமாலையில் ஒன்றும் ஆகப் பத்துப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

இவர் பாலைத் திணையைப் பலபடியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார்; பிரிந்த காதலனைக் கருதி வருந்தினாயு மில்லையே யென்று தலைவியைத் தோழி கடிந்து கூறுவதாக உரை மாறுபடப் பாடியுள்ளார். இதனை நற்றிணை 237-ம் பாடலில் பரக்கப் பார்க்கலாம். இச்செய்யுளில் வேள்-ஆய் என்னும் கொடையாளனை,

*'. . . . . . . . . . வியப்புடை*
*யிரவலர் வரூஉ மளவை யண்டிரன்*
*புரவெதிர்ந்து தொகுத்த யானை போல'*

என்று கூறி மகிழ்கின்றார். அதாவது, வியப்புடைய இரவலர் வரும் பொழுது அவர்கட்குக் கொடுப்பது கருதி, ஆய்-அண்டிரன் சேர்த்து வைத்த யானைத்திரள் போல' என்று கூறும் உவமை முகத்தானே, அண்டிரனது கொடைச் சிறப்பைக் கூறுகின்றார்.



அகப்பாட்டில் இவர் பாடிய பாக்களில் வடுகர் தேக்கிலையில் உண்ணும் வழக்கினையும், நிரை கோடற் சிறப்பினையும் சிறப்பித்துக் கூறியுள்ளார் (அகம். 107); வேட்டையில் செந்நாய்கள் மானின் ஓடுங் குறங்கறுத்து அதனை எளிதிற் பற்றுவதனையும் பாராட்டிக் கூறியுள்ளார். (அகம்-285.) இவர், தமது ஊராகிய காவிரிப் பூம்பட்டினத்தைச் 'சோழர் கழைமாய் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை' எனச் சிறப்பித் துள்ளார் (அகம். 123); புறநானூற்றில் இவர் பாடியபாக்களே, இவரது வரலாற்றில் இவர் கூறியனவாக நாம் எழுதியுள்ளவை. அவற்றை விரிப்பின் அதிகம் பெறுகுமாதலின், ஈண்டு வேண்டாவென விடுத்தோம்.

# III. பெருங்குன்றூர் கிழார்

## 1. இளமையும் கல்வியும்

கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் பெற்றெடுத்தும் இளமை குன்றாது விளங்கும் தனித் தமிழில் புலமை பெற்ற புலவர் குழாத்துள்ளே பல் புகழ் நிறுவிய புலவர் நமது **பெருங்குன்றூர் கிழார்**. அவர் பெருங்குன்றூர் என்னும் கிராமத்திற் பிறந்தவர். கிழார் என்னும் பெயரானே அவர் தாளாண்மையிற் சிறந்த வேளாண் குலத்தவர் என்பது பெறப்படும். அவர் இளமையில் நல்லாசிரியர் ஒருவரையடைந்து, அக் காலத்து விளக்கமுற்றிருந்த இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் பேரறிவு படைத்த புலவராய் விளங்கினார்.

புலவர் தக்க வயதடைந்ததும் தன் கருத்திற்கிசைந்த நற்குடியிற் பிறந்த நங்கை யொருத்தியை நாடி மணந்தார். நாட்கள் பல கழிய, புலவர் புத்திரப்பேற்றைப் பெற்றார். மலையிட்ட செல்வத்தார்க்கு மகிழ ஓர் மகவுந் தாரானாகிய அம்புயத்துறை அண்ணல், குடிக்கக் கூழ் இலார்க்குப் புத்திரப் பேற்றை யளிக்கின்றான். இதனை, நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். நம் பைந்தமிழ்ப் புலவர், மனைவி மக்களின் பசியைப் போக்க வகையறியாராய்த் தவித்தார்; எவரிடம் சென்று பொருள் கேட்பதென யேங்கினார்.

அக் காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடைப் பெருவேந்தர் மூவரும், குறுநில மன்னரும், வள்ளல்கள் பலரும் இருந்தன ரெனினும், எவரிடம் சென்று தம் வறுமையைக் கூறிப் பொருள் பெற்று வருவதெனப் புலவர்க்குப் புலப்படவில்லை. இரவலர்க்குப் பொருள் நல்கும் நிலையில் உள்ளவராயினும், அன்னார் முகமலர்ச்சியோடு இரவலரை வரவேற்றுப் பரிசில் தந்தாலன்றோ சிறப்புடைத்து? சீறி விழுந்து, முகக் கோணலுடன் ஆயிர மாயிரமாக வாரி இறைத்தாலும் பரிசிலர் பெறுவரோ? பெறார். ஆதலின், தம்மை நன்முகத்தோடு வரவேற்று, பொருள் நல்கி விடை கொடுப்பவனிடமே புலவர் செல்ல வேண்டு மென்று தீர்மானித்தார்.



## 2. புலவரும் குடக்கோச்சேரலிரும் பொறையும்

பெருங்குன்றூர் கிழார் காலத்தில் சேரநாட்டைக் **குடக்கோச் சேரலிரும் பொறை** என்னும் சேர மன்னன் ஆண்டு வந்தான். அவன் நல்லொழுக்கம் வாய்ந்தவன்; புலவர்களைப் போற்றி யாதரிப்பவன்; தமிழில் பெரும் பற்றுடையோன்; வருவோர்க்கு இல்லை என்னாது கொடுக்கும் கொடையாளி. அவன் சிறந்த போர் வீரன்; போரில் முன்வைத்தகாலைப் பின்வைக்காதவன். அவனது பெரும் புகழ் நாடெங்கும் பரவியது.

புலவர்-பெருங்குன்றூர் கிழாரும் சேரமானின் சிறப்பைக் கேள்வியுற்றார்; அவனைக் காணின், தம்மைப் பிடித்து வருத்தும் வறுமைப் பிணி யகலும் என்று நம்பினார். அதனால் அவர் தம் மனைவியிடத்து விடைபெற்றுச் சேர நாட்டை யடைந்தார்; சேர மன்னனைக் காண்டார்; தீந் தமிழால் தீஞ்சுவை பொருந்திய அரும்பாக்களைப் பாடினார். அரசன் புலவர் அருமையையும் அவர் பாக்களின் பெருமையையும் நினைந்து வியந்தான். எனினும், அவன் எக்காரணத்தாலோ, புலவர்க்குப் பரிசில் தரவில்லை. புலவர் பல நாட்கள் அவன் பரிசிலுக்காகக் காத்திருந்தார். சேரமான் பரிசில் தந்தானில்லை. புலவர் மனங் கவன்றார். வறுமையால் வாட்டமுற்று, சேரமானால் தம் வறுமைப் பிணியை அகல வோட்டலாம் என்று நம்பி யிருந்த புலவர், அவன் பரிசில் நீட்டித்ததை யுணர்ந்து வருந்தினார்; அவர் மனம் நெருப்பில் விழுந்த புழுவைப் போலத் துடித்தது. அதனால் அவர் அரசனை நோக்கி,

"இறைவ! உயிர்ப் பன்மையைக் காக்கும் நினது உயர்ச்சியைப் பாராது காதல் கண்மாறிய அறமில்லாத பார்வையுடனே கூடி நும்போல்வார் யாவரும் இதற்கொத்த அறிவை யுடையராய் அருள் மாறுவாராயின், எம்போல்வார் இவ் வுலகத்துப் பிறவா தொழியக் கடவர். 'குற்றந் தீர்ந்த கற்பினை யுடையளாய் எம்மை விரும்பிய காதலி இறந்துபடாது உயிர் வாழ்வுடையளாகக் கூடின் எம்மிடத்து நினையாதிருத்தல் அரிது; அதனால், அறன் இல்லாத கூற்றம் திறப்பாடின்றி உயிர் கொளத்துணிய இறந்துபட்டனனோ? என்னுயிர் கெடுவதாக' என்று சொல்லி, நோயை யுடையாளாய்ப் பலபட வெறுத்துறை யும் என் மனைவியின் துன்பந் தீர்க்க வேண்டிஇப்பொழுதே விடை கொண்டேன். நீ வாழ்வாயாக. அரசே! இதனைப் பாராய்;

நின்னை வெகுண்டாரது அணுகுதற்கரிய காவலையுடைய முனையிடத்து அரணைப் போலப் பெரிய செயலற்ற எனது வறுமையை முன்னே போகவிட்டு இன்னாமையையுடைய நெஞ்சத்தோடே போவேன்.

அஞ்சத்தக்க வெய்ய சினத்தையுடைய மழையின் கண் உள்ள இடியேறு பாம்பினது அணுகுதற்கரிய தலை துணிய நில வகலத்தை நின்று பார்க்கும். அதுபோல நீ, நீண்டமலைபிறழச் சிறுமலை தூவ எறியும் ஓசைபோல வீர முரசு கிளர்ந்து ஒலிக்கும் படையுடனே மேற்சென்று வேந்தர் படநின்று கொல்லுவை; புகழமைந்த தலைவ! யான் உயர்ந்த நிலைமையையுடையவன்; நீ வள்ளன்மையிற் சிறந்தவனாதலின், எமக்குத் தாழ்ந்து பரிசில் நல்குவை என்று நினைந்து வந்தேன் நீ எம்மை ஏமாற்றி விட்டனை. எம்மை எதிரேற்றுக் கொள்ளாத மாந்தரது கொடுமையைச் சொல்லவும் நின்னுடைய நினைவே செய்தாய். முன்னை நாட்பரிசில் கையிலே புகுந்ததுபோலக் காட்டிப் பிற்றை நாட் பொய்யைப் பெற்று நின்ற நினது புறநிலை மைக்கு யான் வருந்திய வருத்தத்திற்கு நீதான் நாணாயாயினும், நீ நாணச்சொல்லி உனது நுண்ணிய ஆராய்ச்சியை யுடைய செவ்விய நா வருந்தப் புகழ்ந்து நாடோரும், பாடப் பாடப் பின்னரும் பாடவேண்டும் புகழைப் பெற்றுக்கொண்ட நினது வென்றி பொருந்திய அகன்ற-மார்பை வணங்கிவாழ்த்திப் போவேன்யான். நாடோறும் உணவில்லாமையால் வருந்துபவளும், பாலில்லாது வருந்தும் பிள்ளையுடனே வறுமையுற்று வாடுபவளு மான ஒளிபொருந்திய நுதலையுடைய என் மனையாளை நினைந்து போவேன்,"

என்று முனிவும் வருத்தமும் தோன்றக்கூறி அவ்விடம் விட்டு அகன்று, தம் வழியே செல்லலானார். அங்ஙனம் சென்ற புலவர் வள்ளல்-பேகன் என்பானைக் கண்டு செல்ல வேண்டும் என்று விருப்பங்கொண்டார்; அவனது நாட்டை நோக்கி நடந்தார்.

## 3. வேள்-பேகன்

பேகன், வையாவிக் கோப்பெரும் பேகன் எனவும் வழங்கப் பெறுவான். கடைச் சங்க நாளில் விளங்கிய கடையெழு வள்ளல் களில் அவனும் ஒருவன். அவன் வரையா வள்ளன்மையிற்



சிறந்தவன். குளத்திலும் வயலிலும் களர் நிலத்திலும் ஒப்பப் பெய்யும் மாரி போலப் பேகனும் கொடையை வழங்குவான். அவன் அறத்தைப் பெரிதாகக் கருதினானே யன்றி, மறக்கள வேள்வியைப் பெரிதாகக் கருதினானில்லை. இதனைக் கபிலர் என்ற புலவர் பெருமான்.

'அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படாஅன்பிறர் படைமயக்குறினே' - புறநானூறு

என்று புகழ்ந்துள்ளார்.

அவ் வள்ளலின் தருமசிந்தையையும் தண்ணளித்திறனையும் விளக்க மற்றோர் செய்தியுளது; அவன் ஒரு முறை மலைவழியே செல்கையில் மயில் ஒன்று தன் சிறகை விரித்து ஆடிக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட பேகன், அதுகுளிர் தாங்க வியலாது நடுங்குவது போல எண்ணி மனம் வருந்தினான்; அதற்குத் தான் உதவிபுரியவேண்டுமென விரும்பினான். அவ்வள்ளல் பெருமான் தான் மேற் போர்த்திருந்த பெரிய போர்வையை எடுத்து, அதன் அருமைபெருமையைக் கவனியாது மயிலின்மீது போர்த்துச் சென்றான். இவ் வரிய செய்தி பல புலவர்கள் பாடல்களால் தெற்றெனத் தெரிகின்றது.

'வானம் வாய்ந்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்கன் னாடன் பேகன்' - சிறுபாணாற்றுப்படை

'முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்'
- புறப்பொருள் வெண்பாமாலை

'உடாஅ போரா ஆகத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ

*கடாஅ யானைக் கலிமான் பேக!'* -புறநானூறு

*'மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்*
*படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக!'* - புறநானூறு

இவ்வாறு, பேகன் வள்ளன்மையிற் சிறந்து விளங்கிய காலத்தில், தன் மனதிற்குகந்த நேரிழையாள் ஒருவளை மணந்தான். அவள் பெயர் கண்ணகியென்பது. அவளோடு வாழ்ந்த பேகன் பரத்தையொருவள் நேசத்தில் ஈடுபட்டான்; தன் மனைவியைத் துறந்தான். கண்ணகியோ கற்புக்கரசி போன்றவள்; மாசிலாக் குலத்து வந்தவள்; வருவிருந்து உவப்ப வூட்டும் நேசமிக்குடையாள்; கொண்கன் நினைப்பையறிந்து ஒழுகுந் தன்மையுடையாள்; தேசுறு வாய்மையுள்ளாள்; சினந்திடல் என்றும் இல்லாள்; உருவில் அலைகளையும் கல்வியில் கலைமகளையும் பொறையில் மலைமகளையும் நிகர்த்த அம் மெல்லியலாள் கணவன் பிரிவுக்கு ஆற்றாதவளாய் வாட்ட முற்றிருந்தாள்.

கண்ணகி வாட்டமுற் றிருத்தலையும் பேகன் பரத்தையர் லோலனாயிருத்தலையும் உணர்ந்த அவனது நண்பரான பைந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் பலர் அவனிடம் சென்று அறிவுறுத்தலாயினர். அவர்கள் கபிலர், பரணர், அரிசில்கிழார் என்போர்.

கபிலர், பேகனிடஞ் சென்று, "சிறந்த மலைநாட்டை யுடையோனே! போர்வன்மை யுடையானே! வறுமையின் கொடுமையை முன்னிட்டு, நின்னைக்கண்டு, நின்னையும் நின்மலையையும் பாடிப்புகழ்ந்து, பரிசில் பெற்றேகலாம் என நினைத்து நின் அரண்மனையையடைந்தேன்; நின் பிரிவாற்றாமல் வருந்திப் புலம்பும் நின் மனையாளைக் கண்டேன். என் துயரம் மறைய, அவள் படுந் துயரத்தைக் காணச் சகியாமல், யான் நின் பால் ஓடிவந்தேன். அவளை-உனக்குரிய இல்லக்கிழத்தியான அவளை-நீ உடனே ஏற்றுக்கொண்டு இல்லறத்தை நடத்துவாயாக. நீ உன் மனைவியோடு வாழ்ந்தால், நான் பரிசில் பெற்றால் அடையும் மகிழ்ச்சியை யடைவேன்" என்று கூறினர்.

இங்ஙனம் புலவர்கள் அறிவுறுத்தி அகன்றனர். நான்காவதாக நம் புலவர்-பெருங் குன்றூர் கிழார் பேகன் அரண்மனையை நாடிச் சென்றார். அவர், பேகன் மனைவியைத் துறந்து வாழும் செய்தியை அறயார். யாவரும் ஒப்பப் புகழும் மலைநாடனைக் கண்டு, தம் வறுமையைக் கூறிய பரிசில் பெற்று வரலாமென்று சென்றார்.



## 4. புலவர் அறிவிறுத்தல்

புலவர் பேகனது அரண்மனையை யடைந்தார்; பேகனைக் காண்பதற்குப் பதிலாக அவன் மனைவி கண்ணகியைக் கண்டார். அவளை எந்நிலையிற் கண்டார்? அந்தோ! கணவனைப் பிரிந்து உயிர் வாழும் உத்தமியின் நிலை கூறற் கெளிதோ? மழைத்துளி போல் அவள் கண்களினின்றும் நீர்த் துளிகள் வெளிவந்தன. தலைவிரி கோலமாக அவள் இருந்தாள். 'கணவனைப் பிரிந்த காரிகை இவள்" என்பதை அவள் முகத்தினின்றும் உணர்ந்து கொண்ட புலவர், பேகனைப் பற்றிய வரலாற்றையறிந்து கொண்டார். தான் வந்து வீணே செல்வதைப் புலவர் விரும்பினா ரில்லை.

அதனாற் புலவர் நேரே பேகம் இருந்த விடத்தை யடைந்தார்; அடைந்து, அவனை நோக்கி, "நின்னைக் காண்பவர் கன்முழைக்கணின்றும் விழும் அருவியையுடைய பலமலைகளை அரிதிற் கழித்துச் சிறிய யாழைச் 'செவ்வழி' என்னும் பண்ணை வாசிக்கும்படியாகச் செய்து, வாசித்து வருகின்றனர். நின் மனைவி, கார்காலத்து மழையினது இனிய துளி வீழ்கின்ற ஓசையைத் தமியளாகக் கேட்டு நேற்று ஒரு பக்கத்தே தனிமை கொண்டிருந்தாள். அவள் அரிபரந்த மதர்த்த குளிர்ச்சியை யுடைய கண்ணினை யுடையள்; அழகிய நிறத்தையும் உடையள்; அவளது மைபோலும் கரியமயிர் நெய்யாற்றுறக்கப்பட் டிருந்தது ஆவியர் வேந்தே! அவளிடம் இன்று நீ வருவைவாயின், அதுவாகும் எம்முடைப் பரிசில்" என்ற சீரிய கருத்தைக் கொண்ட செந்தமிழ்ச் செய்யுள் ஒன்றினைப் பாடினர். அது பின் வருமாறு:

*'கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்*
*சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்*
*கார்வா னின்னுறை தமியள் கேளா*
*நெருந லொருசிறைப் புலம்புகொண் டுறையு*
*மரிமதர் மழைக்க ணம்மா வரிவை*

*நெய்யொடு துறந்த மைபிருங் கூந்தன்*
*மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்*
*புதுமலர் கஞல வின்று பெயரி*
*னதுமனெம் பரிசி லாவியர் கோவே!'*

இச் செய்யுளைக் கேட்ட பேகன் இன்னது செய்தான் என்று புலப்படவில்லை. அறிவிற் சிறந்த அவ் வுத்தமன் பல புலவர்கள் கூறியதைக் கேட்டும் பொருட் படுத்தா திருந்திருப்பனோ? புலவர் பொன்மொழிகள் அவன் கொண்ட மயக்கத்தை மாற்றி யிருக்கவேண்டும். அவ் வள்ளல் மீண்டும் தன் ஆவியனைய மனையாளைத் துணை வளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 5. சோழன்–இளஞ்சேட் சென்னி

இம் மன்னவன் சோழ நாட்டுக் கதிபன். இவன் சோழன்-கரிகால் வளவனின் தந்தை. இவ் வரசன் அழுந்தூர் வேளிடம் மகட்கொண்டோன்; சிறந்த போர் வீரன். இவனைக் கண்ணுற்றவர் கூற்றென நடுங்குவர்; எனின், இவனது உருவத் தோற்றத்தையும் தறுகண்மையையும் என்னென்பது? வீரத்தில் சிறப்புற்று விளங்கியதே போலக் கொடையிலும் இவன் சிறப்பெய்தி விளங்கியது குறிப்பிடத் தக்கது.

இப் பெருவேந்தன் தமிழை மிக வளர்த்தான். இவனைப் புலவர் பெருமானான பரணரும் புகழ்ந்துள்ளார் என்றால், இவன் அருமை பெருமைகளை என்னென்று விரிப்பது? புலவர்க்குப் பெருந்தாய் போன்று விளங்கினான் இவ் வள்ளல். இவன் பெயர் இளையோன் எனவும் வழங்கும்.

## 6. புலவரும் இளையோனும்

புலவர் - பெருங்குன்றூர் கிழார் **சோழன்-உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி** என்பானது புகழைக் கேள்வி யுற்றார்; அவனிடம் சென்று, கவி பாடிப் பரிசில் பெற்றுத் தன் வறுமையைப் போக்கிக்கொள்ள விரும்பினார். அவர் தம் ஊரைவிட்டுப் புறப்பட்டு, சோழன் தலைநகரை யடைந்தார்; அடைந்து, சோழர் பெருமானைக் கண்டு, தம் வறுமையைக் கூறலானார்:



“பயன் பொருந்திய பெரிய முகில் பொய்யா தொழிதலால் நீர் நிலைகள் கோடைக் காலத்தில் வற்றும். அத் தகைய கோடைக்காலமாயினும், துளைபொருந்திய தாளையுடைய ஆம்பலினது அகன்ற இலை. நிழற்கண் கதிர்போலுங் கோட்டை யுடைய நத்தையினது இளைய சங்குடனே பகற்காலத்தே மணங்கூடும் நீர் விளங்கும் வயல்களை யுடைத்தாகிய நாட்டை யுடையாய்! பெரிய வெற்றியை யுடையோய்! ஆகாயத்தைப் பொருந்தும் நெடிய குடையினையும் வலிய குதிரையினையும் உடைய சென்னி! அறிவானமைந்தோர் கூடியிருந்த அவையின் கண் சென்று பொருந்தினானொருவன் யானுற்ற துன்பத்திற்குத் துணையாய் எனக்கு நீர் பற்றாகவேண்டும் என்னும் ஆரவாரத்தை அவர் விரைவில் தீர்ப்பதைப் போல, விருந்தினர் என்னைத் தேடிவர, அவர்கட்கு அன்ன மளித்து உபசரிக்க வகையறியாது உன்னைத் தேடிவர நிலை பெற்ற எனது வறுமையை விரையத் தீர்ப்பாயாக,”

என்று, சோழன் பெருமையையும், தன் வறுமையையும் விளங்கக் கூறி, தன்னைப் பிணித்து வருத்தும் வறுமையைப் போக்கப் பரிசில் நல்கும்படி வேண்டினார். சோழன், புலவர் மனமகிழுமாறு அவர் விரும்பிய பொருள்களைத் தந்தான். புலவர் சில நாட்கள் அங்கிருந்து, மீண்டும் தம் பதியை யடைந்தார்.

## 7. புலவர் ஒன்பதாம் பத்தைப் பாடியது

புலவர் அரசர்களையும் குறுநில மன்னர்களையும் அண்டிப் பிழைத்து வருங்கால், சேரநாட்டுக் கரசனும் முன்பு நம் புலவரால் இகழப் பட்டவனான சேரமான-குடக்கோச் சோலிரும்பொறை என்பான் இறந்துவிட்டான். அதனால், அவன் தம்பி குடக்கோ இளஞ் சேர லிரும்பொறை என்பான் அரசாட்சியைக் கைக்கொண்டான். அதனை யுணர்ந்த நமது புலவர்-பெருங்குன்றூர் கிழார் அவ் வரசனிடஞ் சென்று, அவன் விச்சிக்கோனை வென்றதும், பெருஞ் சோழனையும் பழையன் மாறனையும் போரில் தொலைத்ததும் ஆகிய இன்னோரன்ன சிறப்பெல்லாம் அமைத்துப் பதிற்றுப் பத்தில் ஒன்பதாம் பத்தைப் பாடி, அவனால் அளவு கடந்த பரிசில் கொடுக்கப் பெற்று வாழ்ந்திருந்தார்.

அவர் பாடிய பத்துப் பாக்களைக் கொண்ட ஒன்பதாம் பதிகத்தில் அவர் கூறியுள்ளவை யாவை என ஆராய்வோம். முதற் செய்யுளில், சேரனின் வெற்றிச் சிறப்பைக் காணலாம். 'அண்ணல்! நின் அரிவை காண, நினது தேர் ஒரு நாள் புரவி பூண்பதாக வேண்டும்; அது, நின் அரிவையை மகிழ்வித்தற் கன்று; அதனாலே துஞ்சா வேந்தரும் துஞ்சுவார்களாக வேண்டும்; அதுதான் நின் பெருந் தோட்கு விருந்துமாகவேண்டும்; இங்ஙனம் இரண்டொரு காரியங்களைச் செய்வாயாக' என்பதே முதற் செய்யுளின் சாரமாகும். இரண்டாஞ் செய்யுளிலும் அரசனது வெற்றிச் சிறப்பே கூறப்பட்டுள்ளது; 'நெடியோய்! பெரும! நின் பகைவர் நின்னை யஞ்சித் தாம் தாம் வழிபடும் தெய்வத்தைத் தத்தமக்குக் காவலென்று சொல்லும் வண்ணம் அஞ்சத்தக்க படையுடனே போர் மேற் செல்லுகின்றனை. நினது யானைகள் கடுஞ்சினத்தைக் கொண்டவை; அவற்றை யடக்கப் பாகர் படுந் துன்பம் சற்றன்று. நால்வகைப்படையோடு முரச வாத்தியங்கள் என்ற தோற் படையும் போரில் தலைகாட்டு கின்றது. பகைவர் போரில் கொல்லக் கொல்லக் குறைவுபடாத தானையையுடையை. மூன்றாம் பாவில் சேரமானின் படைச்சிறப்புக் கூறப்பட்டுள்ளது. அப் பா கீழ் வரிமாறு:

'கார்மழை முன்பிற் கைபரிந் தெழுதரும்
வான்பறைக் குருகி னெடுவரி பொற்பக்
கொல்களிறு மிடைந்து பஃறோற் றொழுதியொடு
நெடுந்தேர் நுடங்குகொடி யவிர்வரப் பெரலிந்து
செலவுபெரி தினிதுநிற் காணு மோர்க்கே
யின்னா தம்மவது தானே பன்மா
நாடுகெட வெருக்கி நன்கலந் தரூஉநின்
போரருங் கடுஞ்சின மெதிர்ந்து
மாறுகொள்வேந்தர் பாசறை யோர்க்கே',

நான்காம் பாட்டில் சேரனின் வெற்றிச் சிறப்புக் கூறியுள்ளார். அதன் சுருக்கம், 'பூழியர் கோவே! பொறைய! பகைப் புலத்து ஆரெயில்கள் எண்ணுவரம் பறியா; பன்மா பறந்தன; ஆகையால், பகைப்புலத்தை நாம் வெல்லுதல் அரிதென்று எண்ணாது, நின் பகைவர் நின்னோடு போர் செய்து அதனை இன்று அறிந்தனர். ஆயினும், அவர் நின்னோடு உடன்று எழுந்து தோல்வியுறுவதை யறிவதல்லது, நின்னை



வணங்கவேண்டு மென்பதை அறிகிலர். இனி அவர், முளை மூங்கிலிற் கால்கவர் கிளைபோல் அழிவதல்லது உய்யவுங் கருதுவதேது? நெடுங்காலம் பெய்யாத மழை பெய்தவழிப் பரகுரலையுடைய புள்ளின் ஒலி யெழுந்தாற் போல, நெடுங்காலம் போர் செய்யாது நின்று, அவ் வுடற்றியோரை வென்று நின் பல படைக்குழாம் ஆரவாரிக்கின்ற இருப்பினை யாம் இனிது கணடேம்' என்பதே.

புலவர் ஐந்தாம் பாட்டில், அவன்முன்னோருடைய கொடைச் சிறப்பையும் அவன் வெற்றிச் சிறப்பையும் குறித்துப் பாடியுள்ளார். அவர் அதனில், 'இளஞ்சேரலிரும்பொறை சென்னியர் பெருமானுடைய நாடுகள் பலவற்றையும் எமக்குக் கொண்டு தந்து, "சென்னியர் பெருமானை எம்முன்னே பிடித்துக்கொண்டுவந்து தருமின்" எனத் தம் படைத்தலைவரை ஏவ, சென்னியர் பெருமான் படையாளர் பொருது தோற்றுப் போயினர். அங்ஙனம் அவன் பெற்ற வெற்றியைவிடச் சிறப்பெய்திய வெற்றியையுடையாய் நீ. செல்வக் கடுங்கோ வாழியதனைப் பாடிக் கபிலன் பெற்றதினும் யான் பெற்றவை பல' எனப் பாராட்டிக் கூறியுள்ளார்.

ஆறாம் செய்யுளில் சேரமானின் வன்மை மென்மைச் சிறப்பு கூறினார். ஏழாம் பாவில் அவனது அருட்சிறப்பை விரிக்கின்றார்.

'சென்மொ பாடினி நன்கலம் பெறுகுவை;
சாந்தம் பூழிலொடு பொங்குநுரை சுமந்து
தெண்கடன் முன்னிய வெண்டலைச் செம்புன
லொய்யு நீர்வழிக் கரும்பினும்
பல்வேற் பொறையன் வல்லனா லளியே.'

எட்டாம் பாவில், "பெரியோர் மருக! மறங் கெழுகுரிசில்! கொங்கர் கோவே! தொண்டியோர் பொருந! பொலந்தேர்க் குரிசில்! பெரும! சேயிழை கணவ! நாடு கிழவோய்! ஈங்கு நின்னைக் காணவந்தேன்; நீ, நீடு வாழ்வாயாக; பன்னாள் ஞாயிறுபோல விளங்குவாய்" என்று வாழ்த்தி, அவனது கொடைச் சிறப்பையும் இன்பச் சிறப்பையும் விரிக்கின்றார் புலவர்; ஒன்பதாஞ் செய்யுளில் அவன் நாடு காவற் சிறப்பைக் கூறி வாழ்த்தினார்; பத்தாம் பாட்டில் அவன் தண்ணளியும்

பெருமையும் கொடையும் சுற்றந்தாழலும் உடன் கூறி வாழ்த்தினார்.

## 8. பாக்களின் நயம்

புலவர்-பெருங்குன்றூர் கிழார் பாடியனவாக நற்றிணையில் (5, 112, 119, 347) நான்கு பாடல்களும், குறுந்தொகையில் ஒன்றும், அகத்தில் ஒன்றும், புறத்தில் (147, 210, 211, 266, 318) ஐந்தும், பதிற்றுப் பத்தில் பத்துமாக இருபத்தொரு பாடல்கள் கிடைத்துள்ளன.

இவர் பாடிய ஒன்பதாம் பத்தில் 'நல்லிசைக் கபிலன் பெற்ற ஊரினும் பல' எனக் கபிலரைப் பாராட்டிக் கூறியிருப்பது அறியத்தக்கது. இப்புலவர் குறிஞ்சித் திணையைப் பலபடியாகச் சிறப்பித்துப் பாடியுளார். சந்தனமரத்துவேர் தனியே யிருந்தால் மரத்தில் வாசனை-யமையாதென்றும், பிறவேர்களாடு கலந்தால் மரம் நல்ல மணத்தைப் பெற்றிருக்கு மென்றும் குறிப்பிடுக் கின்றார்;

'குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்
நறுங்கா ழாரஞ் சுற்றுவன வகைப்ப.' -நற்றிணை



# IV. மாறோக்கத்து நப்பசலையார்

## 1. நப்பசலையார்

பண்டைக் காலத்தில் ஆண்மக்கள் தமிழ்ப் புலமை பெற்று விளங்கியவாறே பெண்மக்கள் பலரும் தமிழ்ப் புலமை பெற்றுப் பேரறிவினராய் விளங்கினர். அவர்களும் புலவர்களாயிருந்த ஆண்மக்கள் பெற்ற பெருமையையே பெற்றிருந்தனர்; எனவே, அக் காலத்திலும் கற்றவர் எப் பிறிவினாராயினும் அவர்கள் பெருமையுற்று விளங்கினார்கள் என்பது அறியப்படுகிறது.

வேள்-பாரி என்போனின் பெண்கள் கபிலர் பால் தமிழ்ப் புலமை பெற்றுக் கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். ஔவையார் என்னும் நல்லிசை மெல்லியலார் பாணர் குலத்தில் பிறந்த பெண்மணியாயினும் சிறந்த புலமைவாய்ந்து மூவேந்தரும் மதிக்கத்தக்க அருமை பெருமை வாய்ந்தவரா-யிருந்தனர்.

இவர்கள் யன்றி, காக்கை பாடினியார், காமக்கணிப் பசலையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினி, மாறோக்கத்து நப்பசலையார் முதலான பல பெண்மணிகளும் அக்காலத்தே நிறைந்த புலமை பெற்றுப் பேரறிவாளிகளாக விளங்கினார்கள் என்பதற்குச் சங்க நூல்களே சான்று பகரும்.

அம் மாதரசிகள் வரலாற்றில் நாம் எடுத்தாளப் புகுவது **மாறோக்கத்து நப்பசலையார்** என்பவரது வரலாற்றாகும். அவரது ஊர் மாறோக்கம் என்பது. அது கொற்கையைச் சூழ்ந்த தோர் நாடு. எனவே, அவரது நாடு பாண்டிய நாடாயிற்று. அவர், பசலையைப் பற்றித் தம் பாக்களில் விரித்துக் கூறுவதால் பசலையார் எனப்பட்டார். ந-சிறப்புப் பொருள் உணர்த்தும் ஓர் இடைச் சொல்; பசலை-மகளிர் கணவனைப் பிரிந்த காலத்து அவர்க்கு, முன்புள்ள நெற்றியின் ஒளி கெட்டுக் கண்ணாடியில் வாயினால் ஊதிய பொழுது ஆவி படர்ந்து ஒளி மழுங்குவதுபோல வேறுபட்டுக் காட்டுந்தன்மை. ஆகவே, மாறோக்கத்து நப் பசலையார் என்ற

தொடர் மொழிக்குப் பொருளைக் கண்டோம். இனி, அவர் புலமையைக் காண்போம்.

## 2. சோழன்–குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன்

சோழ நாட்டை உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட மன்னர்களில் இவன் ஒருவன். இவன் இளமையில் ஒரு நல்லாசிரியனை யடுத்து, தமிழ்க் கல்வியை ஐயந் திரிபறக் கற்றுக் கவி பாடவல்ல ஆற்றல் பெற்று விளங்கினான். புலவர்கள் இவனைக் கொடைத் தந்தை என்றும், இவனது அரண்மனை புலவர்க்குத் தாயகம் என்றும் போற்றி வந்தார்கள்.

தன்னிடத்து வந்த புலவர்களை வறிதே அனுப்பமனமில்லாது, அவர் விரும்புவனவற்றை வாரிக் கொடுத்து நன்முகத்துடன் விடைகொடுத் தனுப்பும் நற்குணம் வாய்ந்தவன் இவன்; வீரத்திலும் சிறந்தோன்; கருவூரை முற்றுகையிட்டுச் சேரனை வென்றவன். இவனுடைய படைகள் காலனின் படைகளை யொக்கும்.

இவனது வள்ளன்மையையும், புலமையையும், வீரத்தையும் வியந்து மகிழ்ந்து, பல புலவர்கள் பாடியுள்ளார்கள். அவர்களிற் சிறந்தோர் ஆலத்தூர்கிழார், ஆவூர் மூலங்கிழார், கோவூர் கிழார், வெள்ளைக்குடி நாகனார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், மாறோக்கத்து நப்பசலையார் என்போர்.

இனி, நமது மெல்லியலார் சோழனிடம் நட்புக் கொண்டமை, அவனைப் புகழ்ந்தமை முதலாயவற்றை முறையே காண்போம்.

## 3. புலவரும் சோழனும்

குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன் போரில் வெற்றி பெற்றுச் சேரனைத் தோல்வியுறச் செய்தான் என்ற செய்தி தமிழ் நாடெங்கும் பரவியது. பாண்டிய நாட்டில் இருந்த நப்பசலையாரும் அதனைக் கேள்வியுற்றனர்; அவனைச் சென்று காணவேண்டுமென்று விருப்பங் கொண்டனர். ஒருவன் ஒரு காரியத்தில் வெற்றியுறுவானாயின், அவனது நண்பர்கள் அவனைச் சென்று கண்டு ஆசீர்வதிப்பது வழக்கம். அங்ஙனமே, ஒரு அரசன் வெற்றி பெற்றானாயின் அவனைப் புலவர்கள் காணச்செல்வர்; அவனது வெற்றித் திறத்தைப் பலபடப் புகழ்வர்; மிக்க பரிசிலைப்பெற்று அரசனை வாழ்த்தி மீள்வர். இச் செய்தியினை இந்நூலில் மூன்றாம் புலவரான பெருங்குன்றூர் கிழார் ஒன்பதாம் பத்தைப் பாடியதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இங்ஙனமே, பாண்டின் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேர சோழரையும் ஐம்பெரு வேளிரையும் வென்றிகொண்டதால், பல புலவர்கள் அவனைக் கண்டு, புகழ்ந்து போற்றிப் பரிசில் பெற்றேகினர்.



சோழனைப் பாடிப் பரிசுபெற விரும்பிய நப்பசலையார் சோழ நாட்டை யடைந்தார்; அதன் தலை நகராய உறையூருள் நுழைந்து அரசனைக் கண்டார்; தன் வரலாற்றைக் கூறினர். பெண்மணியின் புலமையை உய்த்துணர்ந்த சோழன் அவரை முகமன் கூறி வரவேற்றான். சோழமன்னனது நற்குணத்தில் ஈடுபட்ட நப்பசலையார் அவனை முகமலர நோக்கி,

“வெள்வேலோடு சினம்பொருந்திய படையையுடைய செம்பியன் மரபில் உள்ளாய்! குழிந்த இடத்தையுடைய அகழியினையும், மிக்க நீரையுடையதும் முதலைகளை யுடையதுமான மடுவையும், சிறந்த மதிலையுடைய தலைமை பொருந்திய பழைய ஊரினுள்ளே கச்சணிந்த யானையையும் உடைய அரசுண்டாகலின், அவற்றை நல்லனவென்று பாராது, போரின்கண் அழித்தலை வல்லையாயிருந்தாய். பெருந்தகாய்!” என்று வாயார அவனது வெற்றிச் சிறப்பைக் கூறி வியந்தனர்.

அரசன் மனமகிழ்ந்து, மெல்லியலாருக்கு வேண்டிய பரிசிலை நல்கினன்; அவரைத் தன்னிடமே இருக்கும்படியாகவும் கேட்டுக் கொண்டனன்; அம்மையார் அவனது கொடைத் திறத்தை வியந்து கொண்டாடி அவனுடனே தங்கி யிருந்தார். நாளடைவில் சோழனது குணாதிசயங்களும் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் புலவர் மனத்தை ஈர்த்தன. அதனால், அவர் சோழனது தண்ணளியையும் கொடைத்திறத்தையும் புகழ விரும்பி அவனை நோக்கி,

“நீ, புறவினது வருத்தத்தைக் களையவேண்டிக்கறை பொருந்திய அடியினையுடைய யானையினது வெளிய கோட்டாற் கடைந்து செறிக்கப்பட்ட கோலாகிய நிறுக்கப்படும் துலாத்தின் கண்ணே துலைபுக்க செம்பியனது மரபில் உள்ளாய். ஆதலின், இரந்தோர்க்குக் கொடுப்பது நினக்கு இயல்பாவதல்லது புகழும்

அல்லவே; அசுரர்க்குப் பகைவராகிப் தேவர்கள் கிட்டுதற்கு வெருவும் அணுகுதற்கரிய மிக்க வலியையுடைய ஆகாயத்துத் தூங்கெயிலை அழிந்த நின்னுடைய முன்னுள்ளோரை நினைத்தால், ஈண்டுள்ள பகைவரைக் கொல்லுதல் நினது புகழுமல்லவே; கேடின்றி மறம் பொருந்திய சோழரது உரையூர்க் கண் அவைக் களத்தில் அறம் நின்று நிலைபெற்றதாதலால், முறைமை செய்தல் நினக்குப் புகழும் அல்லவே; அதனால், மறம் மிக்கெழுந்திருந்த போரை வென்ற கணையமரத்தொடு மாறுபடும் தசைசெறிந்த தோளினையும், கண்ணிற்கு ஆர்ந்த கண்ணியையும், மனஞ்செருக்கிய குதிரையையும் உடைய வளவ! உயர்ந்த எல்லை அளந்தறியப்படாத பொன் படுகின்ற நெடிய சிகரங்களையுடைய இமயமலையின்கண் சூட்டப்பட்ட காவலாகிய விற்பொறியையும், மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய நெடிய தேரையும் உடைய சேரன் அழிய, அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமை பொருந்திய வலிய தாளைப் பாடுங் காலத்து எவ்வாறு புகழ்வேனோ?" என்ற கருத்தைக்கொண்ட கொழுவிய பாட லொன்றைப் பாடினர்.

இங்ஙனம் புலவர் அவ்வப்போது சோழன் மகிழும்படி அவன் வெற்றியையும், கொடையையும், அறனையும் புகழ்ந்து பற்பல பாடல்களைப் பாடிக்கொண்டு அவனவையில் இருந்தனர். இவ்வாறிருக்கையில், தண்ணளியிற் சிறந்த அண்ணல் நிலவுலக வாழ்வை நீத்தான்.

அதனையுணர்ந்த புலவர் பலர் உறையூருக்குச் சென்று அவன் இறந்தகைக் குறித்து வருந்தினர். நப்பசலையார், "எங்கள் வளவன் பொன்னால் இயன்ற மாலையினை யணிந்தவன்; மண்டிய போரின் கண் எதிர் நின்று வெல்லும் படையினையும் திண்ணிய தேரினையும் உடையவன்; அவனைக் கூற்று கொண்டுவிட்டது; அது, தன் மனத்துள்ளே கறுவுகொண்ட தாயினும், வெளிப்பட நின்று வெகுண்டதாயினும், உற்று நின்று கையோடு மெய் தீண்டி வருத்திற் றாயினும், அதற்குப் பிழைத்தல் உண்டாகாது. அது, பாடுவாரைப் போலத் தோன்றி நின்று கையாற்றொழுது வாழ்த்தி இரந்து அவனது உயிரைக்கொண்டதாகல் வேண்டும்" என்ற சீரிய கருத்தை வைத்து,

*'செற்றன் றாயினும், செயிர்த்தன் றாயினு*
*முற்றன் றாயினும், உய்வின்று மாதோ;*
*பாடுநர் போலக் கைதொழு தேத்தி*
*யிரந்தன் றாகல் வேண்டும்; பொலந்தார்*
*மண்டமர் கடக்குந் தானைத்*
*திண்டேர் வளவிற் கொண்ட கூற்றே'*



என்று பாடிப் புலம்பினர். இதனால், அவனைக் கூற்று கொண்டு செல்ல வலியற்றதென்றும், பரிசில் வேண்டிப் பாடும் இரவலரைப் போல் அது பாடி அவனுயிரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் நப்பசலையார் கருதினர் என்று தெரிகின்றது.

கொடைவள்ளலான வளவன் இறந்த பின்னர், மெல்லியலார் உறையூரை விட்டு நீங்கினார்.

## 4. புலவரும் காரியும்

காரி, பெண்ணையாற்றங் கரையின்கண் உள்ள மலாடம் என்று வழங்கும் மலைநாட்டுத் தலைவன். கோவலூர் அவனது தலைநகர். அவன் பெயர் காரியென்றும், மலையமான் திருமுடிக்காரி என்றும் வழங்கும். அவன் ஒரு காலத்தில் தமிழ் நாட்டு மூவேந்தர்க்கும் ஒவ்வொரு சமயத்தில் போரில் உதவி செய்தவன்; புலவர்களைக் காப்பவன்; அந்தணர்க்கு நிலங் களைக் கொடுத்தவன்; அவனது கொடைதிறத்தால் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகக் கூறப்படுகின்றான்.

அவனைக் காணவேண்டும் என்று நப்பசலையார் விரும் பினார்; அவனது தலைநகரான திருக்கோவலூரை யடைந்தனர். அவனும் அம் மெல்லியலாரை வரவேற்று உபசரித்தனன். அவனது வெற்றிச் சிறப்பையும் ஈகைத் தன்மையையும் முன்னரே கேள்வியுற்றிருந்த அம்மையார் அவனை நோக்கி,

"பகைவருடைய யானையினது பட்டத்தில் இருந்த பொன்னைக் கொண்டு பாணரது தலை பொலியச் செய்பவனே! வாடாத பொற்றாமரையைச் சூட்டிய சிறந்த தலைமையினையும், புறங்கொடாத மேற்கோளினையும் உடைய பெரியோன் மரபில் உள்ளாய்! ஒன்றைக் கற்றறியே மாயினும் அறிவேமாயினும் நின்னிடத்துப் புகழைப் சொலுவோ மாயின், நீ எங்கட்கு 'இல்லை' என்று சொல்லாதவன்; தண்ணளி நிறைந்த அண்ணல் அன்றோ நீ, எமது பெருமானே! எமது வறுமை துரத்த நின் புகழ் கொடுவர வந்து, நினது வன்மையிலே சில

சொல்லத் தொடுத்தனம் யாங்கள்; இராப்பொழுதுதான் ஒரிடத்தே உறங்குவது போன்ற செறிந்த இருளையுடைய சிறுகாட்டையும் பறையொலி போலும் ஒளி பொருந்திய அருவியையும் உடைய முள்ளூர் வேந்தே! அழித்தற் கரிய தன்மையையுடைய நின்சுற்றத்துடனே பெருக நிலத்தின்மேல் மிக்க மாந்தர் எல்லாரினும் அறிவின்கண் மாசற்ற அந்தணனான கபிலன், இரந்து செல்லும் புலவர்க்கு இனிப் புகழ்தற்கு இடனில்லையாகப் பரந்து புகழ் நிற்பப் பாடினான்; முட்போலும் பல்லையுடைய பாம்பை யெறியும் இடியேறு போல முரசு கிளர்ந்தொலிக்கத் தலைமையையுடைய யானை யுடனே அரசு போர்க்களத்தின் கட்படப் பொறுத்தற்கரிய பூசலைச் சிதறவெட்டிப் பெரிதும் பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கத்தையுடைய நாட்டை யுடையோய்!"

என்ற கருத்தமைந்த செழிய பாடலைப் பாடினர். காரி, அகமலர முகமலர்ந்து அம்மையார் மனம் வெறுக்குமாறு பரிசில் பல கொடுத்தான். புலவர் அவனிடம் விடைபெற்றுத் தம்மூரை யடைந்தார்.

## 5. மலையமான் மகனும் புலவரும்

நாட்கள் பல செல்ல மலையமான் திருமுடிக்காரி மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை யடைந்தான். அவன் மகன் **மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன்** என்பவன் அரசனானான். அவனும் தந்தையைப் போலவே இரவலரைப் பெரிதும் ஆதரித்து வந்தான்.

காரி இறந்ததும் அவன் மகன் பட்டமேற்றதும் நப்பசலையார் கேள்வியுற்றனர். காரியின் மகன் எத்தன்மையனாக உள்ளான் என்பதை அறிய அப் பெண் மணியார் தம்மூரை விட்டு நீங்கித் திருக்கோவலூரை யடைந்தார். புலவர் வருகையைக் கண்ட திருக்கண்ணன் எதிர் சென்று அழைத்து வந்து உபசரித்தான். புலவர் சில நாள் அவன் ஆதரவில் சுகமாக இருந்தார்.

ஒரு நாள் புலவர் அரசனைப் புகழ்பவராய், "கதிரவன் யாவருக்கும் உயிர் போன்றவன். அவன் வெளிச்சமும் உஷ்ணமும் தரானாயின், உயிர்கள் எங்கே? உலகம் எங்கே? அத்தகைய உபகாரியான ஞாயிறு, வானத்தில் திடீரென மறைப்புண்டால், உயிர்களின் கதி யாதாகும்? கதிரவனை யொத்த நினது தந்தை இவ் வுலகத்தினின்றும் மறைந்தான். அதனால் குடிகள் துயருற்றார்கள். அவர்கள் குறையைத் தீர்க்க நீ தோன்றினாய். அது எங்ஙனம் இருக்கிற தென்றால், மறைந்த ஞாயிறு மீண்டும் தோன்றியது போலும். நின் தந்தையின் குணாதியங்களைக் கூற வியலுமோ? அவனது கல்வி, ஒழுக்கம், பொறை, தண்ணளி, உபசிரிக்குந் தன்மை முதலிய சிறந்த நிறை குணங்கள் யாவற்றையும் கபிலன் தன் வாயாரப் புகழ்ந்து பாடியுள்ளான். நினது முகிலனையும் உயர்ந்த மலையும் அப் புலவனாற் பாடப் பட்டதேயாகும். பெரிய வென்றியை யுடைய சோழனது திங்கள் போலும் வெண்குடையைத் தோற்றுவித்து, அக் குடையைப் புதுமை யுண்டாக நிலைபெறுவித்த புகழ் மேம்பாடுடைய அரச! வரை முழைஞ்சில் வாழும் புலியை எழுதப்பட்ட இலாஞ்சனையையுடைய கோட்டையையும் விளங்குதலையுடைய அணிகலனையும், வண்டார்க்கப்பட்ட கண்ணியினையும், பெரிய புகழினையும் உடைய உனது தந்தை உலகத்துக்குச் செய்த நல்லறத்தின் பயனைத் தெய்வலோகத்தில் நுகரச் சென்றுள்ளான். ஆதலால், இணைந்த மாலையையுடைய தலைவ! மலையிடம் பொடியக் காடு தீ மிக, மிக்க நீரையுடைய நிலைகள் யாவும் வற்றச் செய்யும் கோடைக் காலத்தில் உறுமேறு முழங்கும் மின் முதலான தொகுதியை யுடைய மழை சொரிந்தாற் போல, நல்ல நெறியைக் கொண்ட அவன் மரபில் தக்க சமயத்தில் நீ வந்து தோன்றினை"

என்ற அரும் பொருள்கள் நிறைந்து சீறிய வளப்பம் பெற்றச் சிறந்த பாடல் ஒன்றினைப் பாடினர். திருக்கண்ணன் மகிழ்ந்து, அவரைப் பலவாறு போற்றி, அவர் வேண்டுவன அளித்தான்.

மெல்லியலார் தம்மூரை வந்தடைந்தார்; தாம் கற்ற தமிழால் நல்லிசைப் பாக்களைப் பாடி அரசர், குறுநிலமன்னர் முதலாயினாரை இங்ஙனம் மகிழ்வித்து, முடிவில் விண்ணக வாழ்வை மருவினார்.

## 6. பாக்களின் நயம்

இவர் பாடியனவாக நற்றிணையில் 304-ம் பாடல் ஒன்றும், புறப்பாட்டில் (37, 39, 126, 174, 226, 280, 383) ஏழு பாடல்களும் ஆக எட்டுப் பாடல்கள் கிடைத்துள்ளன. இவர் தாம் பாடிய இருபாக்களில் கபிலரைப் புகழ்ந்துள்ளார்.

*'நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்*
*புலனழுக் கற்ற வந்த ணாளன்'* -புறம். 126

*'பொய்யா நாவிற் கபிலன்'* -புறம் 174

இங்ஙனம், இந் நல்லிசை மெல்லியலார் கபிலரைப் புகழ்ந்திருப்ப தால், பிற புலவர்களிடத்து இவருக்கு வெறுப்பில்லை என்பதும், பிறரது ஆற்றலையும் நெறியையும் உள்ளவாறே வெளிப்படுத்திக் கூறும் சீரிய குணம் வாய்ந்தவர் என்றும் விளங்குகின்றது.

பின்னும், இவர் ஆங்காங்கு அரசர்களிடமும் குறுநில மன்னர்களிடமும் பாடிய பாடல்களில் இருந்து, அக்கால நிலையும், அரசர்கள் ஒழுக்கமும், அவர்கள் செய்த போரின் வரலாறும், வெற்றிச் சிறப்பும், ஈகைத்தன்மையும், அரசர் முதலாயினோர் தமிழ் மொழியினிடத்தே கொண்டிருந்த பற்று தலும், தமிழ்ப் புலவர்கள்-ஆண்களாயினும் பெண்களாயினும் - அவர்கள்மாட்டு வைத்திருந்த அன்பின் பெருக்கும், ஆகிய இவை போல்வன பிறவும் விளங்குகின்றன. இவைகளில் ஒவ்வொன்றையும் விரிப்பின் அதிகம் பெருகும்.

'கிளிகள் சாரல் பொருந்திய மலையில் உள்ள சுற்றத்தோடு சேர்ந்து தாம் கொள்ளையிடுதற்குரிய மெல்லிய தினையின் மணம் நிரம்பிய கதிரைக் கொய்து தின்று, காற்றினால் ஒலி யெழும்புங் கொம்புவாச்சியம் போல ஒன்றை யொன்று அழையா நிற்கும்' என்ற கருத்தை வைத்து,

*'வாரன் மென்றினைப் புலவுக்குரன் மாந்திச்*
*சாரல் வரைய கிளையுடன் குழீஇ*
*வளியெறி வயிரிற் கிளிவிளி பயிற்று'* -நற்றிணை-304.

என்ற கொழுவிய அடிகளைப் பாடியுள்ளார் நம் மெல்லியலார். இதனால், அக் காலத்துப் புலவர்கள் இயற்கை வளங்களையும் உயிர்ப் பிராணிகளின் செய்கைகளையும் உற்று நோக்கும் தன்மை வாய்ந்தவர்கள் என்பது நன்கு புலப்படுகின்றது.



# V. மாங்குடி கிழார்

## 1. புலவர்–மாங்குடி கிழார்

பல் வளங்களினும் சிறந்து விளங்கும் சோழ நாட்டில் தஞ்சாவூர் ஜில்லாவைச் சார்ந்த திருத்துறைப்பூண்டி என்ற தாலுகா உளது. அத் தாலுகாவில் **மாங்குடி** என்ற சிற்றூர் உள்ளது. அதற் கருகில் **மருதவனம்** என்ற சிற்றூரும் இருக்கிறது. அம் மாங்குடியில் சிறப்புற்ற வேளாண்மரபில் சங்க காலத்தில் நம் புலவர் பெருமான் தோன்றியருளினார். இவருக்கு மாங்குடி மருதனார் என்ற பெயரும் உண்டு. மருதவனம் இவரால் நாட்டப் பட்டதோ, அன்றி மருதன் என்பது இவரது இயற் பெயரோ அறியோம்; இவர் மாங்குடி மருதனார் என்றும் வழங்கப் பட்டார்.

இவர், இளமைப் பருவ முதற் கொண்டு சீரிய ஒழுக்கம் வாய்தவராய், தக்க ஆசிரியரை யடைந்து, தமிழ்க் கல்வியனை நிறைவுறக் கற்றுத் தேர்ந்தார். இவர் அக்காலத்துச் சிறப்புற்று விளங்கிய இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவரனார். இவர் பாடிய கொழுவிய பாடல்களினின்றும் இவர் கொண்ட மனப்பான்மையும் கல்வியின் செவ்வியும் இனிது புலனாகும்.

## 2. பாண்டியன்–நெடுஞ்செழியன்

அக்காலத்தில் பீடுமிக்க மாட மதுரையைத் தலை நகராகக் கொண்டு பாண்டிய நாட்டை **நெடுஞ்செழியன்** என்பவன் ஆண்டு வந்தான். அவன் வயதிற்சிறியனாயினும், செங்கோன்மை யினும் பேரினும் மிகப் பெரியவன். அவன் நற்குணங்களுக் கிருப்பிடமானவன். இரவலர்க்கு வரையின்றிக் கொடுத்து வந்தான். அதனால், அவனது புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. அப்போது சேரநாட்டின் ஒரு பகுதியை **யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை** என்பவன் ஆண்டுவந்தான். அவன் பாண்டியன் புகழைக் கேட்க ஆற்றானாயினன். பாண்டியன் மீது பொறாமை கொண்டு, அவனைக் கெடுக்கவேண்டும் என்று

சேரன் தீர்மானித்தான். பொறாமை பிடர் பிடித்துந்த, அவன் பாண்டியன் மீது படையெடுத்துச் சென்றான். சென்று, தலைநகரான மதுரையை முற்றுகை யிட்டான். சேரன் தன்மீது படையெடுத்து வருவதைப் பாண்டியன் உணர்ந்தான். பெருங்குணம் வாய்ந்த அவன் சேரனின் அறியாமைக்குப் பெரிதும் வருந்தி, தனது நாற்படைகளோடும் புறப்பட்டான். இருதிறத்துப்படைகளும் ஒன்றை யொன்று எதிர்த்தன. வீரர்கள் வீரரை எதிர்த்தனர். கரிகள் கரிகளைத் தாக்கின. பரிகள் பரிகளைத் தேக்கின. சிறிது போழ்தில் பாண்டியன் வீரர்கள் சேரன் சேனையைச் சின்னா பின்னாப் படுத்தினர். போர் கடுமை யாகவே நடந்தது. அதிகம் அறை வானேன்? சேரமான் சேனை சிதறுண்டது; சேனைத் தலைவர்கள் நாலாபக்கங்களிலும் ஓட ஆரம்பித்தனர். தலைவர்கள் ஓடுவதைக் கண்ட வீரர்கள் தங்கள் போர்க் கருவிகளை நிலத்தில் விட்டெறிந்து ஓட்ட மெடுத்தனர். சேரமான அக காட்சியைக் கண்டு மனம் நொந்தான். பின்னர், தன்னை ஒருவாறு தேற்றிக் கொண்டு, தன் யானையை முன்னே செலுத்தி வந்து, பாண்டியனை எதிர்த்தான். அஞ்சா நெஞ்சம் படைத்த வல்லாள உக்கிரம சிங்கனான பாண்டியன் சேரமான் மீது இரக்கமுற்று, அவனைக் கொல்லாது கைப்பிடியாகப் பிடித்துக் கைகளையும் கால்களையும் கட்டி விட்டான்.

தங்கள் அரசன் கட்டுண்டதைக் கண்ட எஞ்சியிருந்த வீரர்கள் ஓடிவிட்டனர். எனவே, சேரமானைத் தவிர அவனுடைய வீரர்கள் அகப்பட்டாரில்லை. பாண்டியன் சேரமானைத்தன் அரண்மனைக்கு அழைத்து வந்து, அவனை ஒரு விருந்தினனாக நடத்தினான். பின்னர், அவன் சேரனுக்குப் பல புத்திமதிகளைக் கூறிப் பொறாமை என்ற பேய்க்கு அடிமையாக வேண்டாமென்று கூறி, அவனது நாட்டிற் கனுப்பிவிட்டான். வினை விதைத்த சேரன் வினை யறுத்தான். பாண்டியனின் பெருந் தன்மையான குணத்தைக் கண்ட சேரன் வெட்கமுற்றுத் தன் நாட்டை யடைந்தான்.

இங்ஙனம் வெற்றிபெற்ற பாண்டியன், நெடுஞ் செழியனைக்காணப் பல புலவர்கள் சென்றனர். அவர்கள் அவனது குணாதிசயங்களையும் போர்த்திறத்தையும், வென்றிச் சிறப்பையும் பலபடியாகப் பாடிப் புகழ்ந்தனர். அங்ஙனம் சென்ற புலவர்களில் நமது மாங்குடி கிழாரும் ஒருவராவர். பாண்டியன் புலவர்கள் அனைவரையும் உபசரித்து, நல்விருந்து செய்தான்; பின்னர், அவரவர் வேண்டியவாறு பரிசில்களைக் கொடுத்தனுப் பினன். ஆனால் அவன் மாங்குடிகிழாரைத் தனது அவைப் புலவராக வைத்துக் கொண்டான்; அவரிடத்து அளவுகடந்த மதிப்பும் அன்பும் கொண்டதாலன்றோ அரசன் அங்ஙனம் செய்தான் புலவரும் பாண்டியனையும் அவையையும் தமது தமிழ்ப் புலமைச் சிறப்பால் மகிழ்வித்துக் கொண்டிருந்தனர்.



## தலையாலங்கானத்துப் போர்

சேரமான் பாண்டியனால் தோல்வியுற்ற செய்தி தமிழ் மண்டலமெங்கும் பரவியது. சேர நாட்டின் பெரும் பாகத்தைச் சேரமன்னன். ஒருவன் ஆண்டு வந்தான். அவன், தன் இனத் தரசனான சேரமான் பாண்டியனால் தோற்கடிக்கப்பட்டான் என்ற செய்தியைக் கேட்கப் பொறாதவனாய்ப் பாண்டியன் மீது பொறாமை கொண்டான். சேரமானுக்கு நேர்ந்த அவமானம் தனக்கு நேர்ந்தே போல அவன் எண்ணினான். என்றாலும், தான் தனியனாய்ப் பாண்டியனை ஒன்றும் செய்ய இயலாதென்பதை அவன் நன்குணர்ந்திருந்தான். தனக்கு உதவிபுரிய எவர் துணையை நாடலாம் என்று அவன் யோசித்துக் கொண் டிருந்தனன்.

சேரன் இவ்வாறிருக்கையில், சோழ மன்னவன் எந்நிலையில் இருந்தான் என்பதைக் காண்போம். அவன் ஏற்கனவே பாண்டியன்மீது பொறாமை கொண்டிருந்தான். சேரமான் பாண்டியனிடம் தோல்வியுற்றான் என்ற செய்தியைக் கேட்டதும் அவன் கொண்ட பொறாமை கொழுந்து விட்டெரியலாயிற்று. பாண்டியனைப் பற்றிய பேச்சே சோழ நாட்டுக் குடிகளும் பேசிவந்தார்கள். அதைப் பார்க்கச் சோழன் மனம் நெருப்பில் விழுந்த புழுப் போலத் துடித்தது. அக்கணமே பாண்டியனைக் கொன்று விடலாமா என்றெண்ணினான்; பின்னர்ப் பாண்டியனின் வன்மையை நினைந்து வருந்தினான்; தன் எண்ணம் எவ்வாறு முற்றுப் பெறும் என்றேங்கினான்.

இங்ஙனம் சோழ மன்னன் இருந்த நிலையைச் சேரன் எவ்வாறோ உணர்ந்து கொண்டான். பின்னர், இரு திறத்தாரும் ஒருவர்க்கொருவர் உதவி புரிவதென ஒப்பந்தஞ் செய்து கொண்டார்கள். அவர்கள் ஒரு நல்ல நாளைக் குறித்து, அந் நாளில் படைகளைத் திரட்டினார்கள். அவர்களுக்கு உதவியாய் ஐந்து குறுநில மன்னர்களும் தத்தம் சேனையோடு வந்து சேர்ந்தார்கள்; எனவே, சேர சோழர் என்ற இரு பெரு வேந்தரும்,

திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற என்ற ஐம்பெரு வேளிரும் தங்கள் தங்கள் பெரும்படையோடு ஒன்று சேர்ந்து, பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தனர்.

இச் செய்தியைப் பாண்டியன் ஒற்றர்களால் கேள்வி யுற்றான். அவன் மனம் அப்போது எத்தைகய நிலையில் இருந்ததென்று நாம் கூறமுடியும்? அவன் ஒருபுறம் கோபமும் மறுபுறம் வருத்தமுங் கொண்டான். ஏனெனில், அவன், தன்மீது படையெடுத்து வரும் எழுவரும் தன்னை இகழ்ந்து பேசியதாக ஒற்றர்களால் கேள்விப்பட்டான். எழுவர் ஒன்று பட்டுவரின் தன்னை எளிதில் வென்று விடலாம் என்று எண்ணங்கொண்ட அவர்களின் அறியாமைக்குப் பெரிதும் வருந்தினான்; ஆயினும், தைரியத்தோடு வரும் அவர்களை எளிதில் விடலாகாதென்றும் தீர்மானித்தான்.

அவ்வமயம் அவையில் அமைச்சர்களும், புரோகிதர்களும், மாங்குடிகிழார் முதலான புலவர்களும், தானைத்தலைவர்களும், சிற்றரசர்களும் இருந்தார்கள். அவர்களை நோக்கிப் பாண்டியர் பெருமான், "ஆ! என்ன ஆச்சரியம்! சேரனும் சோழனும் ஐம்பெருவேளிரும் என்மீது போருக்கு வருகின்றனராம். அவர்கள் எனது வாள்வலியும் தோள்வலியும் படைவலியும் நன்கு அறிந்திருந்தும், ஏதும் அறியாத பிறர் போல் இங்ஙனம் போர் செய்ய வருவது நகைத்தற்கிடனாயுள்ளது. நன்று! நன்று!! அவ்வேந்தர்கள் என்மீது கொண்ட பொறாமை காரணமாக இவ்வாறு போருக்கு வருகிறார்களெனத் தெரிகிறது. அவர்கள் என்னைச் சிறியவன் என்றும், அற்பன் என்றும், சிறிய வலியற்ற சேனையை யுடையவன் என்றும், தாங்கள் வலிமிகுந்த யானைப் படையுடையவர்கள் என்றும் கூறிக் கொண்டனராம். அவர்கள் அறிவீனத்தை என்னென்பது? தமிழ் நாட்டில் உள்ள மன்னர்கள் தமக்குள் ஒன்றுபட்டிருந்தா லன்றோ, பிற நாட்டார் நம்மிடம் அச்சங் கொள்வர். ஒருவன் புகழொடு வாழ்வதைக் காணச் சகியா இவ் வற்பர்கள் ஒற்றுமையோடு வாழ்வ தெங்ஙனம்? அவர்கள் எழுவர் வருவதால் என்னை எளிதில் வென்று விடலாமென்று எண்ணிக் கொண்டனர் போலும். அவர்கள் மட்டு மன்று, இத்தமிழ்நாடே ஒன்று சேர்ந்து வரினும் **பாண்டின்-நெடுஞ்செழியன்** அஞ்சுபவன் அல்லன்; அந்த எழுவரின்



அகந்தையை அடக்குவன். அவர்களை வெல்லுதற்கரிய போரிலே வெற்றி கொள்ளா விடின், என் குடிகள் நிற்க நிழல் இன்றித் தவித்துக் கண்ணீர் விட்டுப் புலம்பி, 'எம் மரசன் மகா கொடியன்; அவனது ஆட்சி கொடுங்கோன்மைத்து' என்று என்னை இகழ்வார்களாக. நமது அவையில் வீற்றிருக்கும் **மாங்குடி மருதனார்** முதலாய புலவர் பெருமக்கள் என்னைப் பாடா மொழிவார்களாக. என்னைத் தமிழ் மக்கள் நினையாமற் போகக் கடவர். அமைச்சர்களே! சேனைத் தலைவர்களே! நமது நாற்படைகளையும் தயாரியுங்கள். அவ்வரசர்கள் 'பாண்டியன் நமக்கு அஞ்சுபவன் அல்லன்' என்னும் உண்மையயை அறிந்து கொள்ளுமாறு செய்வேன்" என்று வீராவேசங் கொண்டு வஞ்சினங் கூறித் தன்னாசனத்தி னின்றும் எழுந்தான்.

விரைவில் பாண்டிய மன்னன் தன் சேனைகளோடும் தெய்வத்திருவருளைத் துணையாகக் கொண்டு போருக்குப் புறப்பட்டான். சிறிது போழ்தில் இருதிறத்துச் சேனைகளும் கை கலந்தன. கரியொடு கரியும், பரியொடு பரியும் மலைந்தன. வீரரொடு வீரர் பொருதனர். எங்கும் குருதியாறு பெருக் கெடுத்தது. யானைகளும் குதிரைகளும் வெட்டுண்டு வீழ்ந்தன. வில், வாள், வேல், கேடயம் என்ற கருவிகள் தத்தம் தொழிலைச் செய்தன. வீரர்கள் அஞ்சாமாற் பொருதனர். காண்போர் அஞ்சத்தக்கவாறு அப்போர் காணப்பட்டது. முடியுடை மூவேந்தரும் ஐந்து சிற்றரசர்களும் சேர்ந்து செய்த பெரும் போராதலின், அதனை மாபெரும்போர் என்று கூறத்தகும்.

இருதிறப்படைகளும் நெடுநேரம் இளைக்காமல் அமர் புரிந்தன. பாண்டியன் போர் செய்ய விருப்பங்கொண்டு, தனது தேரை முன்னே நடத்தி, வாளைக் கையிலேந்தினன்; பகைவர் சேனையுட் புகுந்தனன். அவ்வளவே: பகை வீரர்கள் வெட்டுண்டனர்; கரிகள் தலையறுப் புண்டன; பரிகள் குதித்து மாண்டன. சேரனும் சோழனும் தங்களாற் கூடியவரையில் சண்டையிட்டனரென்றாலும், பாண்டியனைப் போலப் போர் செய்ய அவர்களால் இயலவில்லை. அதனால், அவர்கள் மனக் கலக்கங் கொண்டார்கள்; குறுநில மன்னர் குருதியைச் சிந்தினர். பாண்டியன் ஆற்றலை யுணர்ந்தும், அவன்மீது போருக்கு வந்தமைக்காக எழுவரும் தங்களை நொந்துகொண்டார்கள்.

பின்னர்ச் சிறிது நேரத்திற்குள் பகைவர் சேனை நிலைகலங்கி ஓட்டமெடுத்தது. சேனை சிதறவே, எழுவரும்

பின்னிடலானார்கள். அவர்கள் கால்களைப் பின் வைப்பதைக் கண்ட பாண்டியன் வாளேந்தி அவர்களை அண்மினான்.

'நாம் இனித் தாமதிப்பின், பாண்டியன் வாளுக்கு இரையாவோம்' என்பதை நன்குணர்ந்த பகையரசர்கள் புறங்காட்டி ஒடத் தலைப்பட்டார்கள். பாண்டியனும் சினங் கொண்டு அவர்களைத் துரத்திச் சென்றான். அவனது படையும் அவன் பின் சென்றது. இங்ஙனம், எழுவர் முன்னே ஒட, ஒருவன் அவர்களைத் துரத்தியோட, முடிவில் இருதிறத்தாரும் **தலையாலங் கானம்** என்னும் இடத்தை யடைந்தார்கள். அவ் விடத்தில் பாண்டியனுக்கும் பகையரசர் எழுவருக்கும் பெரும்போர் நடந்தது. அப்போர் இத்தன்மைத்து என்று கூறும் தரத்ததன்று. பகைவர் என்ற கடலில் பாண்டியன் என்ற மரக்கலம் ஒடிற்று. எங்குப் பார்த்தாலும் பாண்டியன் காணப்பட்டான். அவன், பகையரசர் கண்களுக்கு யமனைப்போன் றிருந்தான். சிறிது போழ்தில், பாண்டியர் பெருமான் எழுவரையும் அத் தலையாலங்கானத்துப் போரில் முற்றிலும் தோற்கடித்தான். பகைவர் இருந்த விடம் தெரியாமல் மறைந்தனர்.

பாண்டியன் வெற்றிபெற்றதும் தன் நாட்டிற்குத் திரும்பினான். அன்று முதல் அவன், **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

### மிழலைக்கூற்றமும் முத்தூர்க்கூற்றமும்

சோழ நாட்டில், மிழலைக்கூற்றம் என்றோரு ஜில்லா இருந்தது. அது, காவிரியாற்றின் நீர்ப் பெருக்கால் செழிப்புற்று விளங்கும் பூமி. ஆதனை வேள்-எவ்வி என்பான் ஆண்டு வந்தான். அவனுக்குப் பின்னர்ப் பட்டமடைந்து அரசாண்ட வேளிருள் ஒருவன் எக்காரணத்தாலோ, பாண்டியன் சீற்றத்துக் காளானான். அதனால், பாண்டியன் அவனை வென்று, அவனைக் கைப்பற்ற வேண்டும் என்று விரும்பினான்; ஒரு பெரும்படையுடன் சென்று, அவ்வேளைப் போரில் வென்று, மிழலைக் கூற்றத்தையும் அதனை யடுத்திருந்த முத்தூர்க் கூற்றத்தையும் தன் வசப்படுத்தி மீண்டான்.

## 3. புலவர் அறிவுறுத்தல்

பாண்டியன் செய்த போர்ச் செயல்கள் எல்லாம் நன்கு கவனித்த புலவர்-மாங்குடிகிழார், அவனைப் புகழவும், நன்னெறியில் புகுத்தவும் விருப்பங் கொண்டவராய் ஒருநாள் அவனை நோக்கி,



"செழிய! நினது நாளாகிய மீன் நின்று நிலவுவதாக; நினது பகைவர்களுடைய நாளாகிய மீன் நில்லாது பட்டுப்போவதாக; நெல்லை யரியும் பெரிய உழவர் செஞ்ஞாயிற்றுனது வெயிலை வெறுப்பர்; நுளையர், வெம்மையையுடைய மதுவை யுண்பர்; மெல்லிய குரவைக் கூத்திற்கேற்ற தாளத்தையாடும் கடற்று வலையாலே தழைத்த புன்னையினது மெல்லிய பூங்கொத்தாற் செய்யப்பட்ட மாலையைச் சூடிய ஆடவர், விளங்கிய வளையையுடைய மகளிரோடு விளையாடுவர். அம்மகளிர் பெரிய பனையினது நுங்கின் நீரும், பொலிவினையுடைய கரும்பின் இனிய சாறும், மணலினிடத்துத் திரண்ட தெங்கினது இனிய இளநீருடன் கூடக் கலந்து, இம்மூன்று நீரையும் உண்பர். இங்ஙனம் வாழ்கின்ற மக்களைக் கொண்டது வேள்எவ்வியின் ஊராகிய மிழலைக் கூற்றம். வயலிடத்து, கயல்மேயத்தக்கனவும் போரிடத்து நாரை யுறங்கத் தக்கனவும் ஆன கழனிகளுடையது பழைய முதிர்ந்த வேளிரது முத்தூற்றுக் கூற்றம். இவ் விரண்டையும் நீ, கைக் கொண்டு விட்டனை. உன் பெருமைதான் என்னே! நின்னொடு நிலைபெற்றுள்ள நினது வெற்றிச் சிறப்பைப் பலர் வாழ்த்த, இரக்கும் பரிசிலர் நின் வண்மையைச் சொல்ல, ஒள்ளிய வளையையுடைய மகளிர் பொற்காலத்தில் ஏந்திய குளிர்ந்த நறுநாற்றத்தையுடைய மதுவை மருப்ப, அதனை யுண்டு மகிழ்ச்சி கொண்டு நல்லொழுக்கத்துடனே இனிதாக நடப்பாயாக; பெரும! பரந்த இடத்தையுடைய உலகத்தின் கண்ணே பிறந்து பரக்க ஒழுகாது நின்று மாய்ந்தோர் பலர்; அவர் வாழ்ந்தோர் எனப்பட்டார். நின் போன்ற சீரிய ஒழுக்கம் உடையோரே வாழ்ந்தோர் என்று சொல்லுவர் அறிவுடையோர்.

செழிய! பெரிய கடலின் கண் காற்றாற் புடைக்கப்பட்ட மரக்கலம் நீரைக் கிழித்து ஒடுமாறு போலக் களிறு சென்று போர்க்களத்தை இடமகலச் செய்கின்றது. அவ்வாறு, களம் அகலச் செய்த பரந்த இடத்தின்கண் கூரிய வேலேந்தி வேந்துபடப் போரைக் கலக்கி, அவர் முடிந்தலையை அடுப்பாகக் கொண்டு குருதிப் புனலாகிய உலையின்கண் தசையும் மூளையும் ஆகியவற்றைப் பெய்து, வீரவளையையுடைய தோளாகிய துடுப்பால் துழாவியடப்பட்ட உணவால் அடுகளத்தின்கட் கனவேள்வி வேட்ட வேந்தே! அமைந்த கேள்வியையும்,

ஐம்புலனும் அடங்கிய விரதங்களையும், நான்கு வேதங்களையும் உடைய அந்தணர் சுற்றமாக, வேந்தர் அதற்கேற்ப ஏவல் செய்ய, வேள்வியையைச் செய்து முடித்த அரசே! நினக்குப் பகைவர் என்னும் பெயரைப் பெற்று நின்னோடு போர் செய்தற்கு மாட்டாராயினும் நினது பகைவர் துறைக்கத்து வாழ்வர்,'' என்று அரசனின் வெற்றிச் சிறப்புக்களையும், அறவேள்வி செய்து முடித்தவையும், மற்றும் பல குணாதிசயங்களையும், அக்கால மக்களின் வாழ்க்கை முதலியனவும் தெளிவுபட இருபாடல் களால் பாடி முடித்தார்.

பாண்டியன் புலவர் 'பெருமானைப் பெரிதும் போற்றி, அவருக்கு வேண்டும் பரிசில்களைக் கொடுத்தனன். புலவர், வெளியூர்களைச் சுற்றி வரவேண்டுமெனக் கூறி, மதுரையி னின்றும் நீங்கினார்.

## 4. புலவரும் எழினியாதனும்

வாட்டாறு என்ற ஊரை எழினியாதன் என்பவன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் சிறந்த கொடையாளி. புலவர்களுக்குத் தந்தைபோன்றவன். அவனைப் பாடிப் பரிசில்பெற வேண்டு மென்று விருப்பங் கொண்ட புலவர் மாங்குடிகிழார் வாட்டாற்றை யடைந்தார். அரசன் புலவரை அன்புடன் வரவேற்று, உணவளித்தான்; புலவர் வேண்டியவற்றை ஈந்தான். அவனது தண்ணளித்தன்மையும் ஈத்துவக்கும் செல்வியையும் கண்டானந்தித்த புலவர் அவனை நோக்கி,

"எக் காலமும் வற்றாத நீர் வளப்பத்தையுடைய செழிய கழனிகளையுடையோய்! இனிய மதுவையுண்டு மனங் களித்திருப்பர் நின்னாட்டுக் குடிகள். அவர்கள் நன்றாகக் குரவைக் கூத்தாடுவார்கள். நீ, அவர்கள் கூத்தைக் கண்டு மகிழ்வை. உன்னை வெகுண்டோர்களுக்கு வலியாகுவை; கேளிலோர்க்குக் கேளாகுவை. குறுமுயலின் நிணத்தைப் பெய்த சோற்றை உண்ணும் தலைவ! உன்னைத் தினந்தோறும் யானும் என்போன்ற புலவர்களும் வாழ்த்த, நீ ஆற்று மணலினும் பல வாழ்நாட்களைப் பெற்று வாழ்தி'' என்று, அவனது கொடைச்சிறப்பும் வெற்றிச்சிறப்பும் மக்களின் நிலையும் விரித்துக் கூறி மகிழ்வித்தார். பின்னர்ப் புலவர் அங்கு நின்றும் நீங்கி, பாண்டியனை யடைந்தார். நெடுங்காலம் பாண்டிய னிடமே இருந்து அவனுக்கு நன்மார்க்கத்தைப் போதித்து



'மதுரைக் காஞ்சி' என்ற அகவற்பாவைப் பாடி, அவனைப் பல வேள்விகளைச் செய்வித்தார். பாண்டியன் புலவர்மீது மிக்க பற்றுடையவனாய், அவரைத் தம் குலகுரு வென மதித்துப் போற்றி வந்தான். நாட்கள் பல செல்லப் புலவர் மண்ணைத் துறந்து விண்ணை நாடினர்.

## 6. பாக்களின் உள்ளுறை

புலவர்-மாங்குடிகிழார் பாடியனவாக, மதுரைக் காஞ்சி யகவல் ஒன்றும், நற்றிணையில் 123-ம் பாடலொன்றும், குறுந்தொகையில் ஒன்றும், புறத்தில் (24, 26, 313, 335, 372, 396) ஆறுபாடல்களும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் ஆகப் பத்துப் பாடல்கள் கிடைத்துள்ளன.

நற்றிணையில் இவர் பாடியுள்ள பாடலில், மீன்களைக் குருகுகள் தின்பதையும், அவை இருட்காலத்தில் வளைந்தபனை மடலின் கண்ணே கட்டிய குடம்பைகளில் வசிப்பதையும் நன்றாக விளக்கியுள்ளார், ஒவ்வொரு நாட்டு மக்களுடைய இயல்பையும், அவர்களின் வாழ்க்கையையும் அழகாகச் சித்தரித்துக் கூறும் மனப்பான்மை இப்புலவரிடம் நன்கமைந்துள்ளது என்பதை மிழலைக் கூற்றத்து மக்களின் செய்கைகளை அவர் கூறுவதில் இருந்து தெளியலாம். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணை நிலத்து வாழும் மக்களின் இயல்வுகளை அக்காலத்துப் புலவர்கள் நன்குணர்ந்திருந் தார்கள்.

அரசர்கள் போரிற்குச் செல்வதில் இருந்து வெற்றி யுற்று மீளும் வரை நடக்கும் நிகழ்ச்சிகள் யாவற்றையும் அவர்கள் கவனித்து வந்தனர். பாண்டியன்-நெடுஞ் செழியன் பகைவர் சேனையில் யானையை முதலில் விடுத்தலும், அது சென்று தன் அரையன் புகுதற்கு இடத்தை யுண்டாக்குதலும், பின்னர்ப் பாண்டியன் வாளேந்தி சேனையுட் புகுதலும் புலவர் நன்கு வருணித்துள்ளார். இவர், அரசனைப் புகழ்ந்ததே யல்லாமல், அவனை அறக்களவேள்வியைச் செய்யுமாறு தூண்டி, அவனை நல்வழியில் உய்வித்தார். இதனால் இவர் அரசனுக்கு ஏற்ற அமைச்சருமாயினார். இவரது குணாதிசயங்கள் பின்னும் கூறப்புகின் இடம் பெருகும்.

# VI. மோசி கீரனார்

## 1. மோசி கீரனார்

மலைவளம் பெற்ற பாண்டியநாட்டில் தலைநகராய மதுரைக் கருகில் **மோசி** என்ற ஊர் உள்ளது. அவ்வழகிய ஊர் பல தமிழ்ப்புலவர்களை ஈன்றெடுத்ததால், தமிழ் உலகில் புகழை நிறுவியதாகும். அவ்வூரில் கடைச் சங்க காலத்தில் புலவர்களாக விளங்கியவர்களில் ஒருவரான **மோசி கீரனார்** என்பவர் பிறந்தார். கீரன் என்பது அவரது இயற் பெயர். மோசி என்பது ஊரின் பெயர். ஆர் விகுதி சிறப்பு நோக்கி வழங்கப்பட்டது.

இவர் **படுமாற்றூர் மோசி கீரனார்** எனவும் வழங்கப் படுவர். சிவகங்கைத் தாலுகாவில் படுமாற்றூர் என்ற ஊர் உள்ளது. அவ்வூரில் இவர் தங்கி யிருந்தமையின் அப் பெயர் பெற்றார். உறையூரில் ஏணிச்சேரி என்ற விடத்தில் இருந்தமையின், முடமோசியார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என வழங்கப்பட்டார். இவ்வாறே நம் புலவரும் வழங்கப் பெற்றார் என்க.

இப் புலவர் இன்ன குலத்தவர் என்றுஅறியக்கூட வில்லை. இவர் எக்குலத்தவர் ஆயினும் ஆகுக. புவியரசேத்தும் கவியரசாக விளங்கிய இப்புலவர் பெருமானின் அரும் பாடல்களும் எளிய வாழ்க்கையும் அவர் சீரிய ஒழுக்கம் வாய்ந்தவர் என்பதையும், அவர் பீடு மிக்க மாட மதுரையில் சங்கத்திருந்து தமிழாராய்ந்தோரில் ஒருவராக விளங்கினமை அவரது புலமையையும் வெளிப்படுத்துகின்றன.

அரசர்கள் இவரிடம் கொண்டிருந்த நட்பும், மதிப்பும் இனிவரும் இவரது வரலாற்றிலிருந்து உணரலாம். புலமை நிறையப் பெற்ற இப் புலவர் பல தமிழ் மன்னர்களையும் சிற்றரசர்களையும் நிறைபடப்பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தவர்.



## 2. சேரமானும் புலவரும்

'பெருஞ்சேரலிரும் பொறை' என்ற பெயர் வாய்ந்த இவன் சேரநாட்டை யாண்டு வந்தான். இவன் நால்வகைப் படைகளை யுடையவன்; எவர்க்கும் அஞ்சா நெஞ்சினன்; தமிழைப் பெரிதும் வளர்த்தோன்; தமிழ்ப் புலவர்களை ஆதிரித்தவன்.

இவன் ஒருமுறை 'காரி' என்ற வேளுக்குப் பரிந்து சென்று 'அதியமான் நெடுமானஞ்சி' என்னும் தகடூர் மன்னனோடு போர்புரிந்து, அவனைக் கொன்றான். வீரம் வாய்ந்த இம் மன்னனது புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. நமது புலவர் மோசிகீரனார் இவனைக் காண விரும்பினார்; தம்மூரினின்றும் நீங்கிச் சேரநாட்டை யடைந்தார்.

புலவரைக் கண்ட அரசன் முகமன் கூறி வரவேற்று நல்விருந்தளித்தான். தாம் கேள்வி யுற்றவாறே சேரன் விளங்குவதைக் கண்ட புலவர் மகிழ்ச்சி கூர்ந்து, அவனைப் பலவாறு வாழ்த்தினர். உணவெடுத்துக் கொண்டபின், புலவர் முரசு வைத்திருந்த கட்டிலின் மீது படுத்துறங்கினர். அது, முரசு வைக்கக் கூடிய கட்டில் என்பதை அவர் அறியார். அவர் அங்ஙனம் துயில்வதைக் கண்ட சேரன், "பாவம்! இப்புலவர் வழி நடந்த களைப்பால், இது முரசு கட்டில் என்பதையும் அறியாது துயில் கொண்டனர். உடலில் வியர்வை ததும்புகின்றது. இவர் களைப்பாற யான் கவரி கொண்டு வீசுவேன்" என்று, கவரி யொன்றைக் கையிலேந்தி புலவர் அருகில் அமர்ந்து விசிறிக் கொண்ருந்தான்.

புலவர் திடீரெனக் கண் விழித்தார்; அரசன் கவரிகொண்டு வீசுவதைக் கண்டார்; அப்போதே புலவர் தான் முரசு கட்டிலில் தூங்கியதை உணர்ந்தார். வேறொரு அரசனாயிருப்பின், தான் செய்த மூடச்செய்கைக்கு வெகுண்டு, தன்னைக் கொன் றிருப்பான் என்பது அவர் அறிவார். சேரமான் தன்னை அங்ஙனம் செய்யாமைக்குப் பெரிது மகிழ்ந்தார். அவர் அவனது அன்பை எண்ணி மகிழ்ந்தார். புலவர் சேரமானை நோக்கி,

"வேந்தே! நினது முரசம் கருமரத்தாற் செய்ததும் பீலியால் தொடுக்கப்பட்ட ஒள்ளிய பொறியையுடைத்தாகிய நீலமணி போலும் நிறத்தை யுடைய தாரைப் பொற்றளிரை யுடைய உழிஞையுடனே பொலியச் சூட்டப்பட்டதும் குருதிப் பலிகொளும் விருப்பத்தையுடையது. அது நீராட்டி வர

வெளியே கொண்டு செல்லப்பட்டுள்ளது. அது வைக்கப்பட்டிருப்பது எண்ணெயினது நுரையை முகந்தாற் போன்ற மெல்லிய பூவையுடைய கட்டில். இது, முரசு கட்டில் என்பதை யான் அறியாதவனாய், இதன்மேல் ஏறிக்கிடந்தேன். இங்ஙனம் யான் செய்த பிழைக்கு வேறோரு வேந்தனாயின், தனது வாளால் என்னைத் துணித்திருப்பன்; நீயோ, தமிழ் உலகத்திற்கே அணிகலனாய் விளங்கும் கருணைக் கடலனையாய்; என்னை உனது கூர்மை பொருந்திய வாளுக்கு இரையாக்கினாயில்லை. அத்துடன் அமையாது, குறுகவந்து நினது வலியையுடைய முழவு போலும் தோளையெடுத்துச் சாமரத்தாற் குளிர வீசினை. நீ, இவ்விடத்து இச்சாமரையை வீசுதல், இவ் வகன்ற உலகத்தின் கண்ணே பரக்கும் பரிசு இவ்வுலகத்துப் புகழுடையோர்க்கல்லது, அவ்விடத்ததாகிய உயர்ந்த நிலைமையையுடைய உலகத்தின் கண் உறைதல் இல்லாமையைத் தெரியக் கேட்ட பரிசாலேயோ? வெற்றி பொருந்திய தலைவா! அதற்குக் காரணம் சொல்லுவாயாக"

என்று, சேரமான் தண்ணளித்திறனையும், அவன் முரசின் பெருமையையும், தன் எளிமையையும் பொருளாகக் கொண்டு நற்சுவை ததும்பிய நற்றமிழில் நற்பாவொன்றினை நயம்பட உரைத்தார்.

சேரமான் புலவரின் பொன்மொழிகளைக் கேட்டு மகிழ்வடைந்தான். அவன் புலவர்க்கு உபசாரவார்த்தைகளைக் கூறித் தேற்றி, அவர் விரும்பிய பரிசிலை வாரிக் கொடுத்தான். புலவர் சேரனது உள்ளத் தூய்மைக்குப் பெரிதும் வியந்து, அவனைத் தம் வாயார வாழ்த்தி அகன்றார்.

## 3. புலவரும் கொண்கானங்கிழானும்

பின்னர்ப் புலவர் கொங்கணம் என்ற மலை நாட்டையடைந்தார். அங்கு, கொண்கானம் என்று ஒரு மலையுண்டு. அதனைக் கிழான் (உரிமை யுடையவன்) என்ற சிற்றரசன் ஒருவன் ஆண்டுவந்தான். அவன் தமிழ் மொழியை வளர்ப்பதிலும், தமிழ்ப் புலவர்களை யாதரிப்பதிலும் ஊக்கங் காட்டி வந்தான். அவன் வெற்றி வீரம் வாய்ந்தவன்; வலிதிற் சண்டைக்குச் செல்லான்; தானாக வரும் போரையும் விடான்.



இத்தகைக் கிழானிடம் நம் புலவர் பரிசில் வேண்டிச் சென்றார். புலவர் பெருமையை யுணர்ந்த கிழானும் அவரை எதிர் கொண்டழைத்து உபசரித்து நல்விருந்தளித்தான். புலவர் அளவிலா அகமலர்ச்சி கொண்டு, அவனைத் தம் அரும் பாடல்களால் மகிழ்வித்துப் பரிசில் பெற விரும்பி,

"மன்ன! உலகத்து மக்கள் திரையலைக்கும் கடலினது கரைக்கண் அணிய விடத்தே போகினும் அறிவாரைப் பார்த்தால் நீர் வேட்கையைத் தணிக்கும் சிறியநீரைக் கேட்பர். அதுபோல, அறிவுடையோர் வேந்தரிடத்தராகவும் குற்றந்தீர்ந்த வள்ளியோரை நினைத்துச் செல்வர். அதனால், யானும் பெற்ற தனைப் பயனாகக் கொண்டு பெற்ற பொருள் சிறிதாயினும், 'இவன் செய்தது என்?' என்று இகழேன், வறுமையால் வாடுகின்றேனாதலின்; நின்னை நினைந்து வந்தேன். எனக்குக் 'கொடு' என்று யான் இரவேன். நீ அப்பரிசிலைத் தரினும் தாராயாயினும் பூசலிடத்து எறியும் படைக்கலத்துக்குப் புறத்து அடியிடா ஆண்மையையும், உச்சியினின்றும் பலவாயிழியும் குளிர்ந்த அருவியையுடைய நினது கொண்கானத்தையும் பாடல் எனக்கு எளிது" என்று பரிசிற்றுரையிற் பாடினார். இப் பாவில் புலவர் தமது வறுமையையும் பெருமையையும் அவனது மலைச் சிறப்பையும் பெருந் தகைமையையும் விரித்துள்ளார்.

புலவர் புகன்றவற்றைக் கேட்ட கிழான் களி மிகுந்து, அவர் வேண்டிய பரிசிலை அவர் மனம் கிழுமாறு தந்தான். அப்போது புலவர்பரிசில் வேண்டிச் செல்லும் பாணனை முன்னிலைப் படுத்துக் கிழான் பெருமையை அவனிடம் எடுத்துக்கூறிப் பரிசில்பெற் றேகுமாறு கூறுவதாகப் பாணாற்றுப்படை என்ற துறையில் பாட விரும்பினார். விரும்பியவாறே அவர், "வளைந்த கோட்டையுடைய சிறிய யாழை உலர்ந்த மருங்கிலே தழுவிக் கொண்டு 'அறிவோர் யார்தான் எனது துன்பத்தைத் தீர்க்க?' என்று கூறிச் செல்லும் பாண! நான் கூறுவதனை இப்பொழுது கேட்பாயாக; நயத்தால், பாழூரின்கண் நெருஞ்சியினது பொன்னிறத்தையுடைய வலியபூ எழுகின்ற ஞாயிற்றை எதிர்கொண்டாற்போல, வறுமையுற்ற யாழ்ப்புலவரது ஏற்கு மண்டை, விளங்கிய புகழையுடைய கொண்பெருங்கானங் கிழானது குளிர்ந்ததாரையை யுடைய மார்பை மலர்ந்து நோக்கின" என்ற விழுமிய கருத்தைவைத்து,

'வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ
யுணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண! கேளினி நயத்திற்
பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
வேர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்
கிலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண் பெரும்கானத்துக் கிழவன்
றண்டா ரகல நோக்கின மலர்ந்தே'

என்ற கொழவிய பாடலைப் பாடினார்.

பின்னர்ப் புலவர் பெருந்தகை, கிழான் மலையாகிய கொண்கானம் என்பதைப் பாராட்டிப் பாட விரும்பி, "பிறருடைய மலைகள் வண்மையாதல் அல்லது வலியாதல் இவ் விரண்டில் ஒன்றையுடையன. ஆனால், பெரிய கொண்கானம் என்னும் மலை எந் நாளும் இரண்டு நன்மையை யுடைத்து. அது, தன்பாற் பரிசில் நச்சிப்போன இரப்போர் காரணமாகத் தான் அவர்க்கு முன்பு கடன் கொடுத்தோராலே வளைப்புண்ணப் பட்டுக் கிடப்பினுங் கிடக்கும். அதுவன்றி, நிறுத்தற்கரிய படையையுடைய அரசரைத் திறைகொண்டு மீட்கும் தலைமையையும் உடைத்து" என்ற பொருளை வைத்து,

'ஒன்று நன் குடைய பிறர்குன்ற மேன்று
மிரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கான
நச்சிச் சென்ற விரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கு மஃதொன்று
நிறையருந் தானை வேந்தரைத்
திரை கொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே'

என்ற பைந்தமிழ்ப் பாவொன்றினை இயன்மொழித் துறையிற் பாடி முடித்தார்.

பின்னர்ச் சின்னாள், புலவர் அவ்வள்ளிலிடம் இருந்து, தம் ஊர் போய்ச் சேர்ந்தார். அவர், இங்ஙனம் பல வேந்தர்களை நாடிப் பரிசில் பெற்று, நல்லொழுக்க முடையராய்க் காலங் கழித்து, முடிவில் நாமகள் நூலிழக்க விண்ணவர் நாட்டை யடைந்தார்.



## 4. பாக்களின் நயம்

நம் பைந்தமிழ்ப் பாவலர் பாடியுள்ள அரிய பாடல்களில் அமிழ்ந்து கிடக்கும் சீரிய சொற்பொருள் நயங்களைக் காண்போம். இவர், அரசரது கோட்பாடு இத்தன்மையதா யிருத்தல் வேண்டும் என்று அறைகின்றார்.

'நெல்லுமுயி ரன்றே; நீருமுயி ரன்றே;
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்;
அதனால், யானுயி ரென்ப தறிகை,
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே' -புறம் 186

பரந்த இடத்தையுடைய உலகம் வேந்தனாகிய உயிரை உடையது. அதனால், இவ் வுலகத்தாருக்கு நெல்லும் உயிர் அன்று, நீரும் உயிர் அன்று; 'யான் உயிர் என்பதனை அறிகை வேலான்மிக்க படையையுடைய வேந்தனுக்கு முறைமை' என்பது இப் பாவின் பொருளாகும். இங்ஙனம் இருக்கும் அரசன் செங்கோலான் என்பதில் என்ன தடை? இப் பாவால், அக் காலத்து அரசர்களுக்கு அவ்வப்போது புலவர் பெருமக்கள் இங்ஙனமாய நல்விஷயங்களை அறிவுறுத்தி வந்தனர் என்பது அறியப்படுகிறது.

கவண் கொண்டெறிந்து யானை முதலியவற்றை ஒட்டலைப் புலவர் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

'............. ... ..........கல்லெனக்
கணமழை பொழிந்த கான்மடி யிரவிற்
றினைமே யானை யினனிரிந் தோடக்
கல்லுயர் கழுதிற் சேணோ னெறிந்த
வல்வாய்க் கவணின் கடுவெடி யொல்லென
மறப்புலி யுரக வாரணங் கதற
நனவுறு கட்சி நன்மயி லால' -அகம். 392

பின்னும், இப்புலவர் ஆய் அண்டிரனது பொதிய மலையையும், பரதவர் கோமான் 'அதலை' என்பானது மலையையும் பாராட்டிக் குறுந்தொகையில் (59, 84, 376) மூன்று பாக்களால் பாடியுள்ளார்.

*இவர் படியனவாக நற்றிணையில் 342-ம் பாடலும், குறுந்தொகையில் 59, 84, 376-ம் பாடல்களும், அகத்தில் 392-ல் பாடலும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும், புறப்பாட்டில் (50, 154, 155, 156, 186) 5 பாடல்களும் ஆகப் பதினோரு பாடல்கள் உள்ளன. மாணவர்களே!*

*இப் புலவர் பெருமக்கள் பாடிய பாடல்களைக் கொண்ட நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், அகநானூறு, புறநானூறு என்ற பைழந்தமிழ் நூல் களை நீங்கள் பெயரிவர்களாயினபின் கற்று மகிழ்வீர்களாக.*



# VII. கோவூர் கிழார்

## 1. இளமையும் கல்வியும்

*கோவூர் என்பது சோழ நாட்டில் உள்ள சிறந்த கிராமங்களுள் ஒன்று. சோழ நாட்டின் வளத்தைப் பற்றி நீங்கள் பன்முறை வாசித்திருப்பீர்கள். சோணாட்டுக் குடிகளில் மிகப் பெருமையுற்று வாழ்பவர் தாளாண்மையிற் சிறந்த வேளாண் மரபினரேயாவர். அம் மரபில் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் ஒரு பெரியார் கோவூரில் வாழ்ந்திந்தார். அவர் செய்த அரும் பேற்றால் பெறற் கரிய நம் புலவர் பெருமானாய கோவூர் கிழாரைத் தம் திரு மகனாராகப் பெற்றார்.*

*புலவர் இளமைதொட்டே பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் உடையவராயிருந்தார். அவர் அன்பு, அடக்கம், தைரியம், பொறுமை முதலிய சிறந்த குணங்களைத் தமக்கு அணிகலன்களாகக் கொண்டிருந்தார். அவரது உத்தம குணங்களைக் கண்டு களித்த தந்தையார் பெரிதும் மனமகிழ்ந்து அவரை ஒரு நல்லாசிரியரிடத்தே கல்வி பயிலச் செய்தார். கோவூரில் அக்காலத்தில் நம் புலவர் ஒருவரே சிறந்த புலவராக விளங்கலானர். அதனால், அவர் இயற் பெயர் இன்றி, தாம் பிறந்த ஊர்ப் பெயரையும் வேளாளரின் சிறப்புப் பெயரையும் தாங்கிக்* **கோவூர் கிழார்** *எனப்பட்டார்.*

*நாளடைவில் புலவர், அவர் காலத்து விளங்கிய இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் பேரறிவு படைத்தவராய் விளங்கி, அக் காலத்திய முடிமன்னர்கள், வள்ளல்கள், செல்வர்கள் முதலாயினோரைக் கண்டு, அவர்கள் நட்பைப் பெற்று, தம்மோடொத்த புலவர்களைக் காத்துச் செம்மனச் செல்வராய் நற்பெயர் பெற்று வாழலானார்.*

## 2. சோழன்–நலங்கிள்ளியும் புலவரும்

கோவூர்கிழார் சோணாட்டில் புலவர் திலகராய் வாழ்ந்து வருகையில், சோழ நாட்டைச் சீருடன் ஆண்டு வந்தவன் **நலங்கிள்ளி** என்பவன். அவன் அரசர்க்குரிய உத்தம குணங் களையும் இலட்சணங்களையும் குறைவறப் பெற்றிருந்தான். அன்பும் அருளும் உடைய அவ் வரசனைச் சென்று காணாத புலவர் இலர் என்றால் அவன் பெருமையை என்னென்பது?

நலங்கிள்ளி புலவர்களைப் பெருந் தெய்வமாகக் கொண்டாடி வந்தான். தமிழ்த்தாய் ஈன்ற தவப் புதல்வர்கள் தமிழ்ப் புலவர்களே என்பது அவனது விழுமிய நோக்கம். அவன் தன்னை நாடிவந்து இரக்கும் பரிசிலரை வறிதே போக விடான்; அவர்கள் எதை விரும்பித் தன்னிடம் வந்தார்களோ அப்பொருளை அவர் மனம் களிக்குமாறு தந்து அனுப்பும் இயல்பு வாய்ந்தவன்.

இத்தகைய மன்னன் புகழ் தமிழ் நாட்டில் பரவியது வியப்பன்று. அவனது அருமை பெருமைகளைக் கேட்டறிந்த கோவூர் கிழார் அவனைக் காணப் பெரு விழைவு கொண்டார்; தமது ஊரை விட்டுப் புறப்பட்டுச் சோழன் தலைநகரை அடைந்தார்; சோழர் பெருமானைக் கண்டார். கோவூர் கிழாரின் கல்வி மேம்பாட்டைப் பல புலவர் வாயிலாக நலங்கிள்ளி உணர்ந்திருந்தான். எனவே, அவன் புலவரை விசாரித்தறிந்து கொண்டபின், அவரிடம் பேரன்பு கொண்டான்; அவரைத் தன் உயிர்த் துணைவராக எண்ணி அவருடன் உண்பதும் உறங்குவதுமாகக் காலங் கழித்தான்.

சோழர் பெருமானது அன்பையும் குணாதிசயங்களையும் நேரிற் கண்ட புலவர் அவனை உத்தம தமிழ்த்தாயின் உயர்குணச் செல்வன் என்று எண்ணினர் எனப் பகரவும் வேண்டுமோ? அவர் அவனிடம் பேரன்பு மிக்கவராய், அவ்வப்போது அவனையும் அவையையும் தமது அறிவாற்றலால் எழுந்த இனிய பாக்களால் மகிழ்வித்து வந்தார்.

## 3. நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும்

புலவர் நலங்கிள்ளியோ டிருக்குங் காலைச் சோழ பரம்பரையில் பிறந்த நெடுங்கிள்ளி என்பவன் மன்னாக முயன்று கொண்டிருந்தான். அதனால், நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும்



பகைமூண்டது. நலங்கிள்ளி சோணாடு தனக்குரியதென, நெடுங் கிள்ளி தனக்குரியதெனக் கூறிவந்தான். எனவே, அரசுரிமையைப் பற்றி உண்டான வழக்கால் இருவர்க்கும் போர் மூண்டது.

அதனால் அவர்கள் இருவர்க்கும் நடந்த போரில் நெடுங் கிள்ளி தோற்றுப் போகும் நிலையில், இருந்தான். அவன் புறங் காட்டியோடி ஆவூர்க் கோட்டைக்குள் நுழைந்துகொண்டான். நலங்கிள்ளியோ அவனை விடுபவன்? அம் மன்னன் நெடுங் கிள்ளியை விடாது பின் பற்றிச் சென்று ஆவூர் கோட்டையை முற்றுகையிட்டான். உள்ளே நெடுங்கிள்ளி யிருந்துகொண்டு பகைவன் உள்ளேராதவாறு செய்ய முயன்றான். நலங்கிள்ளி ஆவூர்க்கோட்டையைக் கைப்பற்ற விருப்பங்கொண்டவனாய்த் தான் படையுடன் உறுதியாக முற்றுகை யிட்டிருந்தான். இவ்வாறு மிக்கவலியுடைய இவ்விருவேந்தர் செய்து கொண்டிருந்த சண்டையால் ஆவூர் நாட்டு மக்கள் அல்லற் பட்டனர். அவர்களுக்கு உணவு கிடைப்பதே அரிதாயிற்று. மக்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியில் வருதற்கே அஞ்சினர். கால்நடைகள் மேய்ச்சலுக்கு அனுப்பப் படாமல் தவித்தன. அவ்வூரார் ஒவ்வொரு நிமிடமும் மிக்க ஆபத்தில் இருந்தனர் என்றே கூறுதல் அமையும்.

இத்தகைய இக்கட்டான நிலையைப் பற்றி நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் நினைத்தார்களில்லை. ஆனால், எல்லா உயிர் களையும் சமமெனப் பார்க்கும் அருள் நிறைந்த ஆன்றோரான நம் புலவர் பெருமான் கோவூர் கிழார் ஆவூர் முற்றுகையை உணர்ந்தார்; நெருக்கடியான நிலையை அறிந்தார்; ஒரு மரபில் உதித்த இருவர் கேவலம் அரசுரிமையைப் பெரிதாக எண்ணித் தங்கள் குடிகட்கு இயற்றும் தீங்கைக் கண்டிக்க விரும்பினார்; விரும்பி ஆவூர்க் கோட்டையை அடைந்தார்.

புலவர் கோட்டைக்குள் சென்றார்; சென்று உள்ளே இருந்த நெடுங்கிள்ளியைக் கண்டார்; கண்டு, “சோழமன்ன! யானைகள் தமது பிடியினது ஈட்டத்தோடு பெரிய கயத்தின்கண் படியாதிருக்கின்றன; நெல்லையுடைய கவளத்துடனே நெய்யால் மதித்துத் திரட்டப்பட்ட கவளத்தையும் பெறாமல் இருக்கின்றன; திருந்திய பக்கத்தையுடைய வலிய கம்பம் வருந்தச் சாய்த்து நிலத்தின்மேலே புரளும் கையையுடையனவாய் வெய்தாக வுயிர்த்துச் சுழலுகின்றன; அவை, உரு மேறு போல முழங்குகின்றன. பாலில்லாத குழவிகள் அழுகின்றன. மகளிர்,

பூவில்லாத வறிய தலையை முடிக்கின்றார்கள். குடிகள் நீர் இல்லாத தங்கள் மனைகளில் இருந்துகொண்டு வருந்திக் கூப்பிடும் கூப்பாட்டைக் கேட்கவும் இவற்றிற் கெல்லாம் நாணாமல் நீ இவ்விடத்தில் இனிதாக இருத்தல் தகாது. நண்ணுதற்கரிய வலிமையுடைய வலிய குதிரையையுடைய தோன்றால்! நீ அறத்தின் வழி நிற்பவனாயின், 'இது நினதன்றோ' என்று சொல்லிக் கோட்டைக் கதவைத் திறந்து விடுவாயாக; மறத்தின் வழி நிற்பவனாயின், போரால் திறத்தல் செய்வாயாக. அவ்வாறின்றி, நீ கதவைத் திறவாமல் கோட்டைக்குள் ஒரு பக்கத்தே ஒதுங்கி யிருத்தல் நாணுந் தன்மையை யுடையது" என்ற சீரிய கருத்தை அமைத்து, உயரிய செய்யுள் ஒன்றினைப் பாடினர்.

இச்செய்யுளைச் செவிமடுத்துக் கேட்ட சோழன் நெடுங் கிள்ளி தன்னால் குடிகளுக்கு உண்டான கேட்டையுணர்ந்தான்; உடனே அன் ஆவூர்க் கோட்டையின் வாயிற் கதவைத் திறந்து விட்டான்; அங்கு நின்றும் வெளிப்பட்டு உறையூர் அரணுள் புகுந்தான். நெடுங்கிள்ளி ஆவூரினின்று நீங்கியதும் நலங்கிள்ளி ஆவூரைக் கைப்பற்றிக் கொண்டான்.

## 4. இளந்தத்தனாரும் நெடுங்கிள்ளியும்

மேற்கூறிய செய்திகள் நிகழுங் காலத்தில் சோழ நாட்டில் **இளந்தத்தனார்** என்ற பைந்தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த புரவலர்களிடத்திற் சென்று பாடிப் பரிசில் செற்றுச் சீவித்து வந்தார். அவர் வறுமையின் கொடுமையால் வாட்ட முற்றுச் செய்து தோன்றாது, திகைத்திருக்கையில் நெடுங்கிள்ளி யின் நினைவு அவருக்கு உண்டானது. உடனே அவர் அவனைத் தேடிச் சென்றார்.

புலவர் தேடிச் சென்ற சமயம் நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையை விட்டு உறையூர் அரணுள் புகுந்து கொண் டிருந்தான். புலவர், உறையூரை அடைந்தார். அச் சமயம் நெடுங் கிள்ளி தனது படை வீரர்களை நோக்கி, "வீரர்காள்! நம்மைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பி அந் நலங்கிள்ளி ஒற்றர்களை இங்கு அனுப்பக் கூடும். ஆதலால் இங்கு வரும் பிற ஊரார்களை நன்றாய்க் கவனியுங்கள். உங்கட்குச் சிறிது சந்தேகம் உண்டாயினும், அவர்களை உடனே சிறை செய்து விடுங்கள். பிறவற்றைப்



பின்னர்ப் பார்த்துக் கொள்வோம்" எனக் கட்டளை யிட்டிருந்தான்.

இத்தகைய நெருக்கடியான நிலையை அறியாப் புலவர்- இளந்தத்தனார் உறையூரை அடைந்து அங்கு இருந்த நெடுங்கிள்ளியின் ஆட்களிடம் சென்று தாம் அரசனைக் காண விரும்புவதாகத் தெரிவித்தார். ஆட்கள் புலவரைப் பார்த்தனர். புலவரோ வறுமையே உருக்கொண்டாற் போலத் தோன்றினார்; கந்தையாடையைக் கட்டியிருந்தார். அவரது உண்மை நிலையை உணர ஆற்றலற்ற படை வீரர் அவரைப் பகையரசனிடம் இருந்து வந்த ஒற்றன் எனத் தீர்மானித்தனர். தங்கள் தீர்மானப்படி, பாவம்! அப்புலவரை-வறுமை தீரப் பரிசில் பெற்றேகலாம் என்று எண்ணி நெடுங்கிள்ளியிடம் அப் பெரியாரைப்-புல்லறி வாளரான அப் படைவீரர் உண்மையை விசாரியாது சிறையில் அடைத்தனர்.

## 5. கோவூர் கிழார் புலவரை மீட்டமை

இளந்தத்தனார் நெடுங்கிள்ளியால் சிறையாக்கப்பட்டதை யுணர்ந்தார் சோவூர்கிழார். தம்மை யொத்த புலவரைப் பகைவனது ஒற்றன் என்று சந்தேகித்துச் சிறையில் அடைத் திருப்பதை எண்ண எண்ண அவர் மனம் கொதித்தது. உடனே புலவர் உறையூரை நோக்கிச் சென்றார்; உறையூரை யடைந்து நெடுங்கிள்ளியைக் கண்டார். கண்டு, "அரசே! வீணே இப்புலவனை ஒற்றனெனக் கருதிச் சிறையில் இட்டனையே; இது நினது பெருமைக்குத் தகுமோ? வண்மையை யுடையோரை நினைத்துப் பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகள் போலச் சென்று நெடிய வென்று கருதாது அரிய வழி பல வற்றையுங் கழிந்து, திருந்தாத நாலால் தாம் வல்லன பாடி ஆண்டுப் பெற்ற பரிசிலால் மகிழ்ந்து, சுற்றத்தை யூட்டித் தாமும் பெபாருளைப் பாதுகாவாது உண்டு உள்ளமலர்ந்து வழங்கித் தம்மைப் புரப்போராற் பெறும் சிறப்பு ஏதுவாக வருந்தும் இப் பரிசிலால் வாழும் வாழ்க்கை, கூறுபடக் கல்வி முகத்தால் தம்மொடு மலைந்தோர் நாணத் தமது கல்வியால் வென்று, தலை நிமிர்ந்து நடந்து அவ்விடத்து இனிதாக ஒழுகும் அவ்வளவன்றிப் பிறர்க்குச் செய்யும் கொடுமை யறிந்ததோ வெனின், இலலை. இஃதன்றி, பரிசிலால் வாழும் வாழ்க்கை உயர்ந்த புகழுடைய நில மகளும் திருப் பொருந்திய நும்மை

யொக்கும் தலைமையு முடைத்து,'' என்று, பைந்தமிழ்ப் புலவர்களின் இன்ப வாழ்க்கையைக் கூறி, அது முகத்தானே இளந்தத்தரின் குற்றமற்ற தன்மையையும் விளக்கிக் கூறினார்.

புலவர் செய்த அரிய சொற்பொழிவு அரையன் உள்ளத்தில் ஊன்றியது. அவன் உடனே இளந்தத்தனாரைச் சிறையினின்றும் விடுவித்தான். இளந்தத்தனார் தம்மைக் காப்பாற்றிய கோவூர் கிழாரைப் பலபட ஏத்தி விடைபெற்றுத் தம்மூரை யடைந்தார். கோவூர் கிழார் சிலநாள் உறையூரில் தங்கியிருந்தார்.

## 6. உறையூர் முற்றுகை

புலவர் உறையூரில் இருக்கையில், நலங்கிள்ளி என்பான் தன் படையொடு உறையூருக்கு வந்து உறையூர் அரணை முற்றுகையிட்டான். அதனால் நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் போர் மூண்டது. இதனைப் புலவர் கோவூர் கிழார் அறிந்தார்; ஒரு குடியிற் பிறந்த இருவேந்தர்கள் தங்களுக்குள் மாறுபட்டுப் போர் செய்தலையே சிறந்த தொழிலாகக்கொண்டு, நாட்டையும் குடிகளையும் கவனியாதிருத்தல் சரியன்று என்பதை அவர் களுக்கு எடுத்துக் கூறி, போரை நிறுத்த விழைந்தார்.

புலவர் தாம் விரும்பியவாறே அவ் விருவேந்தரையும் அடைந்து, நோக்கி, "வேந்தர்களே! உங்களில் ஒருவன் பெரிய பனையினது வெளிய தோட்டைச் சூடின சேரன் அல்லன்; மற்றொருவன் கரிய கோட்டினையுடைய வேம்பினது தாரை யுடைய பாண்டியனு மல்லன்; நின்னுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக் கட்டப்பட்டது; நின்னுடன் பொருவா னுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக் கட்டப்பட்டது; ஆதலால்; நும்முள், ஒருவீர் தோற்பினும் தோற்பது நுங்குடியன்றோ? இருவீரும் வெல்லுதல் இயல்வு மன்று; ஆதலால், நுமது செய்கை நுங்குடிக்குத் தக்கதொன்றன்று. இம் மாறுபாடு, கொடியாற் பொலிந்த தேரையுடைய நும்மைப் போன்ற வேந்தர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும்; ஆதலால், இது தவிர்தலே நுமக்குத் தக்கது'' என்ற சீரிய கருத்தை வைத்து,

*'இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்;*
*கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன்;*
*நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொடு*



*பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே;*
*ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே;*
*இருவீர் வேறல் இயற்கையு மன்றே, அதனால்*
*குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி, கொடித்தேர்*
*நும்மோ ரன்ன வேந்தர்க்கு*
*மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே'*

என்ற கொழுவிய பாடலைப் பாடினர்.

புலவர் கூறிய விஷயங்கள் யாவும் இரு வேந்தர் தம் மனத்திலும் நன்றாய்ப் பதிந்தன. அவர்கள் புலவர் கூறியவை உண்மையே எனத் தீர்மானித்தவராய்ப் போரை விட்டு நட்புக் கொண்டனர். புலவர் தமது சொல் வன்மையால் விளக்கமாக விஷயங்களைக் கூறி இருவேந்தர்க்கும் உள்ள பகைமையை ஒழித்தனர் என்றார், அவர் ஆற்றலை என்னென்பது? தீந்தமிழின் திறனல்லவோ புலவர்க்குப் பெருமை யுண்டாக்கியது?

## 7. கிள்ளிவளவனும் புலவரும்

புலவர் வாழுங்காலை, காவிரிப்பூம் பட்டினத்தை ஆண்டு கொண்டிருந்தவன் சோழன்-குள்முற்றத்துஞ்சிய கிள்ளிவளவன் என்பவன். அவன் சிறந்த குணங்களைக் கொண்டவன்; குடிகளை அன்போடு ஆள்பவன். அவன் திருக் கோவலூரை யாண்டுவந்த மலையமான் திருமுடிக்காரி என்போனிடம் பகைமை கொண் டிருந்தான்; அவனைப் பழி வாங்கவும் எண்ணியிருந்தான்.

அது காரணமாக ஒரு கால் அம் மன்னன் மலையமானின் இளமை மிக்க மக்களைக் கைப்பற்றிக் கொணர்ந்து அவர்களை யானைக் காலால் இடரும்படி செய்து கொல்ல நினைத்தான். இவ்வநீதச் செயலைக் கோவூர்கிழார் உணர்ந்தார். அன்பே உருவாகக் கொண்ட அப் பெரியார் மனம் அழலில் இட்ட வெண்ணெய் எனக் கரைந்தது. அவர் உறையூரை விட்டுக்காடு செடிகளைக் கடந்து விரைவில் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார்.

அடைந்த புலவர் அரசர் பெருமானை அன்போடு நோக்கி, "மன்னவா! நீதான், புறவின் அல்லலன்றியும் பிறவும் உற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்த சோழன் மரபில் உள்ளாய்; இவர்தாம், அறிவால் உழுதுண்ணும் கற்றோரது வறுமையை

யஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலை யுடையராய் வாழ்வாரது மரபில் உள்ளார். இவர், இப்பொழுது களிற்றைக் கண்டு தம் இளமையால் தாம் முன்பு வெருவி யழுகின்ற அழுகையை மறந்த புல்லிய தலையை யுடைய சிறு பிள்ளைகள்; மன்றை வெருவிப் பார்த்து முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தை யுடையர்; இது கேட்டாயாயின், நீ விரும்பியதைச் செய்வாயாக," என்ற கருத்தை அமைத்து.

'நீயே, புறவினல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை; இவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர்; மன்னுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்;
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே'

என்ற பாடலைப் பாடினர்.

இப்பாடலின் மலையமானின் குடிப்பபிறந்தார் நற் செய்கையும், சோழர் தண்ணளித்திறனும், பிள்ளைகளின் எளிய தன்மையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இப் பாடலைக் கேட்ட அறிவு மிகுந்த சோழ மன்னவன் தண்ணளி நிரம்பியனாய்ப் பிள்ளைகளைக் கொல்லாது விட்டனன்.

அரசனது பரந்த நோக்கத்தையும் கூரிய அறிவையும் கண்ட கோவூர்கிழார் வியந்தார்; அவனைப் புகழ்பவராய், "கூற்றும் தன்னால் உயிர் கொள்ளக்கூடிய காலம் வருந் துணையும் பார்க்கும்; நீ, அவ்வாறு காலம் பாராது வேல் நெருங்கிய படையையுடைய பெரியோர் மாளும்படி வெல்லக் கூடியவன். கொல்லும் போரையுடைய தலைவ! எட்டுத் திசையும் எரிகொள்ளி எரிந்து வீழவும், பெரிய மரத்தின் கண்ணே இலையில்லாத நெடிய கோடாகிய வற்றல் பற்றவும், வெய்ய சுடரையுடைய ஞாயிறு பலவிடத்தும் செறிந்து தோன்றவும், மற்றும் அஞ்சத்தகுவனவாகிய பறவைகள் குரல் இசைப்பவும், பல்லு நிலத்தின்கண்ணே வீழவும், பன்றி யேற்றை ஏறவும், ஆடையைக் களையவும், இங்ஙனம் கனாவினும் மெய்ம்மை யினும் பொறுத்தற் கரியவற்றைக் கண்டு போர் செய்யும் வலியையுடையோய்! நின் மேற்செலவின் கூறுபாட்டைக் கருதி, நின்னைச் சினப்பித்தவரது நாடு, மயக்கம் பொருந்திய காவலல்லாத இருத்தலையுடையராய்த் தம் பிள்ளைகளுடைய பூப்போலுங் கண்ணை முத்தங்கொண்டு தம் மனைவியர்க்குத் தமது வருத்தந்தோன்றாமல் மறைக்கும் துன்பத்தை யுடைய ஆடவரோடு மிக்க கலக்கமுற்றது; காற்றுடன் எரி நிகழ்ந்தாற் போன்ற செலவையுடைய போரின்கண்ணே மிக்க வளவ!" என்றார்.



பின்னும் புலவர் சோழனது நற்குணங்களைக் கூறி வியப்பவராய், "தேன் போன்ற இனிய நரம்புத் தொடை பொருந்திய சிறிய யாழையுடைய பாண! கயத்தின்கண் வாழும் ஆமையை நாராசத்தின்கண் கோத்தாற்போன்ற நுண்ணிய கோலால் பிணிக்கப்பட்ட தெளிந்த கண்ணையுடைய பெரிய உடுக்கையின் ஓசை இனிதாக விருக்கும்; இவ்விடத்தே சிறிது ஆறிப்போவீராக; என்று சொல்லிப் பலவும் என்னைக் கேட்கின்ற இரவலனே! யான் கூறு வதைக் கேட்பாயாக; தைமாதத்துக் குளிர்ந்த பொய்கையைப் போலக் கொள்ளக் கொள்ளத் தொலையாத சோற்றையுடைய அகன்ற நகரையும், அவன் இடும் சோற்றையும், அந்நாட்டு நீரையும் உடையவ னாகிய சோழன் கிள்ளிவளவனது நல்ல புகழை நினைத்து, நினது விறலியுடனே மெல்ல மெல்ல நடந்து செல்வையானால் செல்வம் பெறுகுவை; இது நிச்சயம்; நீ ஐயுற வேண்டா" என்ற கருத்தை வைத்துக் கொழுவிய பாடலைப் பாடினர்.

கிள்ளிவளவன் புலவரின் பெருமையையும் கல்வியின் அருமையையும் அரிதின் உணர்ந்து, அவரை அன்போடு உபசரித்து இன்னடிசில் ஈந்து உவப்பித்தான்; அவருக்கு வேண்டிய பரிசுகள் பல நல்கினான். புலவர் அகமலர முகமலர்ந்து சோழனை வாழ்த்திக் கொண்டிருந்தார்.

## 8. புலவர் புகழ் மொழிகள்

கோவூர்கிழார் கிள்ளிவளவனிடம் விடைபெற்று நலங் கிள்ளியிடம் சென்றார். நலங்கிள்ளி புலவரை அன்புடன் வரவேற்று, அவரைத் தன தரண்மனையில் தங்கியிருக்கச் செய்தான். நல்லாரை நல்லாரே காமுறுவர் அன்றோ? குணத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்த நலங்கிள்ளி அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த கோவூர் கிழாரை விரும்பியது தகுதி

யல்லவா? சோழன் புலவரிடம் தமிழ்க் கல்வியைக் குறைவறக் கற்றுத் தேர்ந்து, கவிபாடும் ஆற்றல் பெற்றான்.

புலவர் அவ்வப்போது சோழனது அரிய குணங்களையும் அருஞ் செயல்களையும் எடுத்துக் கூறி அவனை மகிழ்வித்து வந்தார். ஒருமுறை புலவர், "அரசே! நீ, சிறப்புடைய முறைமையால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றும் காட்சி போலச் சேரபாண்டியருடைய இரண்டு குடையும் பின்னாக வோங்கிய நினது ஒன்றாகிய வெண் கொற்றக்குடை நிறம் பொருந்திய கலைநிறைந்த திங்கள்போல ஓங்கிச் சேய்மைக் கண்ணே விளங்க, பகையை விரும்பி வெல்லும் போரினைச் செய்யும் பாடி வீட்டின் கண்ணே யிருத்தல் அல்லது நினது நகரின்கண் இருத்தலை உடம்படாய்; கோட்டினது நுனை முகந்தேய மருத்துப் பகைவரது காவலையுடைய மதிலைக் குத்தும் நின்னுடைய யானைகள் அடங்கா; பூசல் என்று கேட்டால் வீரக்கழலையுடைய மறவர், காடு நடுவே கிடந்த நாடு மிகவும் தூரத்தில் இருப்பதால், 'யாம் போவேமல்லேம்' என்று கருதார்; ஆதலால், ஒசை மிகுந்த பல விழாவினையுடைய பகைவர் நாட்டில் தாக்கி விட்டுக் கீழ்கடல் பின்னதாக மேல் கடலினது வெளிய தலையையுடைய திரை நினது குதிரைகளின் குளம்பை நனைக்கும்படி வலமாகப் படைகளை விட்டுத் தங்கள் நாடுகளுக்கும் நீ வருதல் கூடும் என்று வட நாட்டு வேந்தர் அஞ்சி நித்திரையின்றி இருக்கின்றார்கள்" என்று அரசனது ஆண்மையையும் படை வலியையும் வியந்து கூறினார்.

மேலும் புலவர் நலங்கிள்ளியின் தண்ணளித்திறனைக் கூறி வியப்பவராய், " பரிசின் மாக்காள்! நமது சுற்றத்தினது அடுகலத்தை நிறைக்கும் பொருட்டு விலையாக நெடிய துகிற்கொடியை யுடைய வஞ்சிமா நகரையும் தருகுவன்; நிறமுடைய கலவை பூசப்பட்ட வளைந்த சந்தினையுடைய முன் கையினையும் வேய் போன்ற தோளினையும் ஒள்ளிய நுதலினையும் உடைய விறலியர் பூவிற்கு விலையாகப் 'பெறுக' என்று மாடத்தை யுடைய மதுரையையும் தருகுவன்; ஆதலால், யாமெல்லாம் அவனைப் பாடுவோம். இக்குளிர்ந்த மருத நிலத்தையுடைய நாடு, பழைய நில வரிமையைக் குறிப்பின், நல்ல அறிவையுடைய குயக் குலத்திளையோர் கலம் வனைதற்குக் திகிரிக் கண்ணே வைத்த பச்சை மண்ணாகிய கனத்திரள் போல் அவன் கருத்திற் கொண்ட முடிவை யுடைத்து" என்று பாடினார்.



பின்னரும் புலவர், "பாண! நீர் மிக்க காவிரியினது கரை மரத்தைச் சாய்க்கும் மிக்க வெள்ளம் உலகத்து உயிர்ப் பன்னையைப் பாதுகாக்கும் நல்ல சோழ நாட்டை யுடையவன் எம் வேந்தர் பெருமான் நலங்கிள்ளி என் பான்; மேலும் அவன், பூணைத்தாங்கி அழகிய பெருமையையுடைய எழில் பெற்ற செம்புள்ளி பொருந்திய மார்பினை யுடையவன்; வன்மையால் வீரரை அகப்படுக்கும் பெருமை பொருந்திய நெடுந்தகை; திறம் வாய்ந்த வீரன்; அவன்பாற் செல்வையாயின், பிறன் வாயிலை நீ இனி நினைக்காதவாறு வேண்டிய பரிசிலை நல்குவன்" என்று கூறி, நலங்கிள்ளியின் வீரப் பிரதாபங்களைக் கூறி மகிழ்ந்தார்.

புலவர் பெருமான் மேலும் சோழன், பாண்டிய நாட்டில் இருந்த ஏழரண்களை அழித்துக் கைக்கொண்டு அவற்றில் தனது புலிக்கொடியை நாட்டியதைப் புகழ்ந்து கூறி, அவ்வப்போது அரசனை மகிழ்வித்து வந்தனர்.

## 9. புலவர் பாடிய பாக்கள்

இவர் பாடியனவாக நற்றினையில் 393-ம் பாடல் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும் புறத்தில் பதினைந்தும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும், ஆகப் பதினெட்டுப் பாடல்கள் கிடைத் திருக்கின்றன. இவர் குறிஞ்சித் திணையைப் பலபடியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இவர் பாடிய பாக்களின் சவை செப்பற் கரிது. இரண்டு சோழ மன்னர்களையும் பகைமையை யொழித்து ஒற்றுமை யுடன் இருக்க வேண்டிய பாக்கள் படிப்போர் உள்ளத்தையும் கேட்போர் உள்ளத்தையும் பிணிக்கத்தக்கதாயுள்ளன. புலவர் அன்பும் அருளும் மிகக் கொண்டனர் என்பது அவர் செய்த அருஞ்செயல்களால் அறியப்படும். மலையமான் மக்களைக் கொல்வதைத் தவிர்த்தார்; இளந்தத்தனாரைச் சிறையினின்றும் மீட்டார்; இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் புலவர் பாடிய பாக்கள் அருமைபெருமை வாய்ந்தவை; அவற்றின் பொருள் நயம் இன்பத்தைத் தருவதாகும். புலவர், சொல்வன்மை பெற்றவர். அத்திறனால் அவர் சோழர்களைத் தன் சொற்படி யாட்டி வந்தார்; நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் இருந்த பகைமையைப் போக்கினார்; கிள்ளிவளவனின் அடாத செய்கையைத் தவிர்த்தார்; நெடுங்கிள்ளியால் சிறையாக்கப் பட்ட இளந்தத்தனாரை மீட்டார்.

கோவூர்கிழார் புலவர் வாழ்க்கையயை வெகுவாய்ச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவா சோணாட்டினராதலின் காவிரிச் சிறப்பை நன்றாய்க் கூறியுள்ளார்; குழவிக்குச் சுரக்கும் தாயின் பால்போல் காவிரியின் வெள்ளம் உயிர்த்தொகுதியைக் காக்கும்' என்று கூறுகின்றார்.

இவர் அரிய நீதிகளை அவ்வப்போது அரசர்களுக்கு எடுத்துக் கூறுவது பாராட்டற்பாலது; யாவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதே இவரது விழுமிய நோக்கம் எனத் தெரிகிறது. இவரது அரிய வலராற்றில் மனத்தூய்மை, வாய்மை, அருளுடைமை, அன்புடமை, உபகாரத் தன்மை முதலாய சிறந்த குணங்கள் பரக்கக் காணலாம். இத்தகைய பெரியோர் சொல்லை முடிமன்னர்கள் கேட்டு நடந்தனர் என்றால், அதில் வியப்பென்ன?



# VIII. பிசிராந்தையார்

## 1. இளமையும் கல்வியும்

'பொய்யா தளிக்கும் வையை' எனப் புலவரால் புகழ்ந்து போற்றப் படும் வற்றாது பாயும் வையை யாறு வளம் பெற்ற பாண்டிய நாட்டிற் பாய்கிறது. தமிழ் நாடாகிய நங்கைக்குச் சிறந்த முகமாய் விளங்குவது பாண்டிய நாடே யாகும். அதன் வனப்பையும் சிறப்பையும் நம் பண்டை நூல்களில் பரக்கக் காணலாம். இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற பாண்டிய நாட்டின் தலை நகராய பீடு மிக்க மாட மதுரையை முற்கூறிய நங்கையின் நூதலில் உள்ள திலகம் என்னலாம்.

ஆ! தமிழ் நூல்கள் உண்டான விடம்-தமிழ்ப் புலவர் பெருமக்கள் கூடியிருந்த விடம்-எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெருமானாய விரிசடைப் பெம்மானும் சங்கப் புலவர்களோடு கூடித் தமிழாராய்ந்த விடம்-அங்கயற் கண்ணிபங்கன் அறுபத்து மூன்று திரு விளையாடல்கள் அழகுறச் செய்த விடம்-அம் மதுரைமா நகர் அன்றோ! இன்றும் கண்டோரைக் களிப்புறச் செய்யவும், காணாதாரைக் கண்ணீர் சொரியச் செய்யவும், அடைந்தோரை அன்புடன் அணைத்தலைச் செய்யவும் அன்றோ, மலைமகளுடன் அம் மதுரைமா நகரில் காணற் கரிய சிவபெருமான் திருக்கோலங் கொண்டுள்ளான்!

இத்தகைய சிறந்த நகரைத் தலை நகராகக் கொண்ட பாண்டிய நாட்டின் பெருமையை என்னென்று விரிப்பது! இப் பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊர் ஒன்று உளது. அதில், இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரத் தெண்ணுறு ஆண்டுகட்டு முன்னர் ஆந்தையார் என்ற பெரியார் ஒருவர் தமிழ்த்தாயின் அருந்தவப்பயனாய்த் தோன்றியருளினார்.

அவர் இளமையில் தக்க ஆசிரியரிடத்தே கல்வி பயின்று, அக்காலத்தில் ஏற்ற முற்று விளங்கிய தொன்னூற்களைத் தொன் முறைப்படிக் கற்றுக் கற்றோர் மெச்சும் பண்டிதரானார்.

அவர், சிறந்த செந்தமிழ்ப் புலவராயினபின், தம் குணத்திற் கொத்த குலமகளை நாடி மணந்துகொண்டார். புலவரும் அவர் மனைவியாரும் இல்லறத்தை இனிது நடாத்துகையில் புலவரை யொத்த புண்ணிய மக்கள் பலர் அவர்களுக்கு உண்டாயினர். ஏனவே புலவர், தம் மனைவி மக்களோடு காலங் கழித்து வந்தார். அவ்வப்போது ஆந்தையார் தாம் விரும்பிய சில பெருமக்களிடம் சென்று, கவிபாடிப் பரிசில்பெற்று மீள்வர்.

புலவர்-ஆந்தையார் சிறந்த ஒழுக்கம் உடையவர்; இறைவன் இன்னருளை நினைந்து நினைந்து உருகுந் தன்மையர்; தம்மை அடைந்தோரை நன்னெறியில் புகுத்துபவர்; அவர் கொண்டிருந்த உத்தம குணங்கள் அவர் மனைவி மக்களிடத்தும் பரவி, அக்குடும்பமே சன்மார்க்க நெறியில் வேரூன்றி யிருந்தது.

ஆ! 'கற்றதனாலாய பயன் என்கொல்; வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்' என்ற வள்ளுவர் வாய்ச்சொல் புலவர் பெருமான் கற்றிருந்தனரோ? வள்ளுவர் கூறிய தெள்ளிய நெறியைப் பின் பற்றியன்றோ பிசிராந்தையார் நடத்துவந்தார்! கற்றறிந்த கயவர் பலர் வீண் ஆடம்பரச் செய்கைகளைச் செய்தும், முடியாதனவும் வீணானவையும் ஆன பேச்சுக்களைப் பேசியும் திரிவது போல நம் புலவர் திரிந்தனரோ? இல்லை, இல்லை; அவர் அடக்கமே உருவெனத் தோன்றினார்; தமிழே தாம் என விளங்கினார். நிறை குடம் தளும்பாதன்றோ? என்னே புலவர் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும்!

## 2. புலவரும் பாண்டியனும்

ஆந்தையார் பாண்டிய நாட்டில் வாழ்ந்து வருகையில் அறிவுடை நம்பி என்னும் பாண்டிமன்னன் பாண்டிய நாட்டை யாண்டு வந்தான். அவன் மறங்கடிந்து அறம் வளர்த்தவன்; தண்ணளி நிறைந்த தனிப்பெரு வள்ளல்; தன்னை அண்டிப் பிழைப்போரை அன்புடன் நடத்தும் அருங்குணம் வாய்ந்தவன். புலவர்களைப் பெரிதும் பாராட்டிப் பரிசில் ஈகுவன்.

இத்தகைய பாண்டி மன்னனை நம் புலவர் அடிக்கடிச் சென்று காண்பார். அவர் அடிக்கடி அவனுக்கு நற்போதனை யளிப்பார். ஒரு முறை, புலவர் அரசனுக்குக் குடிகள் இடத்திலிருந்து இறை கொள்ளும் முறையை நன்றாய்ப் போதிக்க விரும்பினார்; விரும்பி, "அரசே! காய்ந்த நெல்லை



யறுத்துக் கவளமாகக் கொள்ளின், ஒரு மாவிற்குக் குறைந்த நிலத்தில் விளையும் நெல்லும் பல நாளைக்கு உபயோகப்படும். நூறு செய் ஆயினும், யானை தனித்துப் புகுந்து உண்ணுமாயின், அதன் வாயில் புகுந்த நெல்லினும் பெரும் பாகம் அதன் காலால் மிதிக்கப்பட்டுக் கெடுகின்றது. இதனை நன்கு உணர்ந்து அறிவுடைய அரசன் இறை கொள்ளும் நெறியை அறிந்து கொண்டால், குடிகள் கோடி பொருளினை அரசனுக்கு ஈட்டிக் கொடுத்துத் தாமும் தழைப்பார்கள்; வேந்தன் அறிவால் மெல்லியனாகி நாடோறும் தாம் அறியாது அரசன் மனம் போன வழி விட்டு வேடிக்கைப் பார்க்கும் அமைச்சர் சொல்லைக் கேட்டு அதன்படி நடக்க விரும்புவானாயின், யானை புகுந்த வயல்போலத் தானும் உண்ணப்பெறான்; உலகமுங் கெடும்" என்ற சீரிய கருத்தை வைத்து,

*'காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே*
*மாநிறை வில்லதும் பன்னாட் காகு*
*நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே*
*வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு;*
*மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே*
*கோடி யாத்து நாடுபெரிது நந்து*
*மெல்லியன் கிழவ னாகி வைகலும்*
*வரிசை யறியாக் கல்லென சுற்றமொடு*
*பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்*
*யானை புக்க புலம்போலத்*
*தானு முண்ணா னுலகமுங் கேடுமே'*

என்ற நிறை பொருள் ததும்பும் செய்யுள் ஒன்றினைப் பாடி யருளினார்.

இப் பாடலில் உள்ள விஷயங்கள் யாவும் பாண்டியன் மனத்திற் பசுமரத்தாணிபோல் நன்றாய்ப் பதிந்தன. அவன் புலவர் கூறிய அரிய விஷயங்கள் படியே நடந்துவரத் தலைப்பட்டான். அரசன் புலவரின் திட்ப நுட்பம் செறிந்த பாக்களை அடிக்கடிக் கேட்டு இன்புறுவன்; அவன் மனம் மகிழுமாறு அடிக்கடிப் பரிசில் அளிப்பன்.

## 3. புலவர் சோழனை நினைத்தல்

நமது பைந்தமிழ்ப் புலவர் பாண்டிய நாட்டில் இருக்கையில் சோழ நாட்டை உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவன் கோப்பெருஞ் சோழன் என்பவன். அம் மன்னவன் தமிழ் மொழியிடத்து நீங்காத அன்புடையவன்; தமிழ்ப் புலவர்களிடத்தோ பெரும் பற்றுடையவன்; தமிழைப் பெரிதும் ஆதரித்த சோழ அரசர்களுள் கோப்பெருஞ் சோழன் ஒருவன் எனக் கூறுதல் அமையும்.

அம் மன்னன் நடுவுநிலை, சாந்தம், பொறுமை, அன்பு, அருள், பிழை பொறுத்தல் முதலாய உத்தம குணங்கள் பலவும் பெற்றிருந்தான். அவன் நாட்டுக் குடிகள் அவன் ஆட்சியில் இன்பத்தை நுகர்ந்தனரே யன்றித் துன்பத்தைக் கனவிலும் கண்டிலர். 'எம் மரசன் நீடூழி வாழ்க' என்று சோணாட்டுமக்கள் இரவிலும் பகலிலும் நனவிலும் கனவிலும் இறைவனை வழுத்திக் கொண்டிருப்பர் என்றால், சோழனின் பெருமையை என்னென்று விரிப்பது!

இத்தகைய மன்னன் பெருமையைக் கேள்வியுற்றார் நம் புலவர் ஆந்தையார். அன்பே உருவென அமைந்த ஆந்தையார் சோழனைத் தான் காணாதிருந்தும் அவனைத் தம் ஆருயிர் நண்பனாகக் கருதினார்; அவனைச் சென்று காணப் பெரு விருப்பங் கொண்டார்.

ஆந்தையாரின் குணாதிசயங்களைப் பலர் மூலமாகக் கோப்பெருஞ் சோழனும் கேழ்வி யுற்றிருந்தான். அவன் அவரைக் காண விரும்பினான். என்றாலும், ஒருவரை யொருவர் சந்திக்கும் சமயம் வாய்க்கவில்லை; எனினும், ஒருவர் மீது ஒருவர் கொண்ட நட்பு வளர்பிறை போன்று வளர்ந்து முழுமதித் தன்மையை யடைந்து ஒரே உயர் நிலையில் இருந்தது. என்ன ஆச்சரியம்! ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகியதில்லை. அங்ஙனம் இருந்தும் அவர்கள் நட்பு வளர்ந்தோங்கி வந்தது.

*'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்'*

என்ற வள்ளுவர்வாக்கு இங்குச் சிந்திக்கற் பாலது. உணர்ச்சி ஒன்றே அவர்களுக்குள் நட்டைப் பெருக்கிய சிறந்த கருவியாகும்.



புலவர் எப்போதும் சோழனது பலதிறப்பட்ட குணாதிசயங்களைத் தம் வாயாரச் சொல்லி இன்பமடைவர். அவர், ஒரு நாள் மாலைக் காலத்தில் தென்றிசையினின்றும் வட திசை நோக்கிப் பறந்து செல்லும் அன்னச் சேவல் ஒன்றைக் கண்டார். அவர் அதனை நோக்கி, "அன்னச் சேவலே! அன்னச் சேவலே!! கொல்லுதலைச் செய்யும் வெற்றியையுடைய அண்ணல் தன் நாட்டைத் தண்ணளியுடன் காப்பாற்றுகின்றான். அவன் முகம் பொலிவுற்று விளங்கும். அது போல நிலவு விளங்கும் இப்போது தமியோராயினார் பிரிந்தவர் பொருட்டு வருந்துவர். அத்தகைய இம்மாலைப் போதில் குமரியாற்றின் பெரிய துறைக்கண்ணே அறிரையை மேய்ந்து வடதிசைக் கண் இமய மலைக்கண்ணே போகின்றாய் ஆதலால், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நல்ல சோழ நாட்டின்கண் சென்று பொருந்துவை யானால், உறையூரின்கண் உயர்ந்த நிலையையுடைய மாடத்தின் கண்ணே நீதங்கவேண்டாம்; நேரே தடையின்றிக் கோயிற் கண்ணே புகுந்து எம்முடைய பெருங்கோவாகிய கிள்ளி கேட்பப் கிள்ளி கேட்பப், 'பெரிய பிசிர் என்னும் ஊரின் கண் ஆந்தை யுடைய அடியேன் கீழ் வாழ்வேன்' என்று சொல். உடனே மன்னன், நினது இன்புறும் பேடை பூணத் தனது விருப்பமுறும் நல்ல அணிகலத்தைத் தருவன்" என்ற கருத்துக் கொண்ட செய்யுள் ஒன்றினை மனம் உருக பாடி, சோழன் தன்னிடத்துக் கொண்டுள்ள நட்பின் திறத்தை நயம்படக் கிளந்தார். இங்ஙனம், புலவர் ஆந்தையார் சோழனைக் காண இயலாது அவனது அருட்பெருங் குணங்களைத் தம் வாயாரச் சொல்லி மகிழ்ந்து வந்தார்.

பின்னர் ஒரு கால் புலவர், "உம்முடைய இறைவன் யார்தான் என்று கேட்பீராயின், எம்முடைய இறைவன் கோப்பெருஞ் சோழன்; பாணருடைய சுற்றத்தினது தீராத வறுமையைத் தொலைப்பவன்; நல்ல சோழ நாட்டு வேந்தன்; புரையற்ற நட்பினையுடைய 'பொத்தி' என்னும் புலவனோடு கூடி மெய்ம்மையார்ந்த மகிழ்ச்சியை நாள் தோறும் அனுபவிப்பவன்" என்று சோழனது நாட்டு வளப்பத்தையும், ஈகைத் தன்மையையும், புலவரை அவன் ஆதரிக்கும் திறனும் வெளிப்பட இனிய பாவொன்றினைப் பாடி மகிழ்ந்தார்.

## 4. சோழன் வடக்கிருத்தல்

புலவர் நிலை இங்ஙனமாக, சோழ நாட்டின் நிகழ்ச்சியைக் கவனிப்போம். கோப்பெருஞ் சோழனுக்கு இரு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்கள் எக் காரணத்தாலோ தந்தையிடம் பகைத்துக் கொண்டார்கள். அதனால் சோழ வேந்தன் தன் மக்களை ஒழித்து விடக் கருதிப் போர்க் கோலம் பூண்டான்.

அவ்வமயம் **புல்லாற்றூர் எயிற்றியனார்** என்ற செந் தமிழ்ப் புலவர் ஒருவர் சோழனை யடைந்தார்; அவன் போர்க் கோலம் பூண்டு, மக்கள் மேல் சண்டை செய்யப் போவதை அறிந்தார். அப் புலவர் அரசனது சீற்றத்தைக் தணிக்க விரும்பி, "சோழர் பெரும! வெண் கொற்றக் குடையால் உலகத்தை நிழற் செய்து புகழால் விளங்கும் வென்றியை யுடைய வேந்தே! நின்னொடு இப்போது போர் செய்ய எழுந்தவர் பகைமை முற்றிய நினது பழைய பகைவர்களான சேர பாண்டியர் அல்லர்; நினைத்துப் பார்த்தால், நீயும் அவர்க்கு பகைவன் அல்லை; பகையைக் கொல்லும் யானையையுடைய தலைவ! நீ சம்பாதித்த நல்ல புகழை இவ்வுலகத்துப் பொருந்தி, தேவருலகத்திற் போய்ப் பின்பு நீ ஒழிந்த அரசாட்சி உரிமை அவர்க்குரியது; இதனை நீ நன்கு உணர்ந்தே யுள்ளாய்; இன்னமும் கூறுவேன் கேட்பாய்; புகழை விரும்பும் வேந்தே! நிலைபெற்ற வலியோடு நின்னைக் கருதி போர் செய்தற்கு எழுந்திருந்த நின் புதல்வர் தோற்றல், நினது பெரிய செல்வத்தை அவர்க்கன்றி யாருக்குக் கொடுப்பாய்? போரை விரும்பிய செல்வ! நீ, அவர்க்குத் தோற்றல் நின்னை யிகழும் பகைவர் உவப்பப் பழியை உலகத்தே நிறுத்துவை; ஆதலால், நினது பகைமை ஒழிவதாக; நின்னுடைய உள்ளம் வாழ்வதாக; அஞ்சினோர்க்கு அரணாகும் நினது அடி நிழல் நல்வினையை மயங்காமற் செய்தல் வேண்டும்; விணேணோரது உலகத்தின் கண் அமைந்தவர் விரைந்த விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளக் கடிதின் விரைந்து எழுவாயாக" என்று நீண்டதோர் பிரசங்கம் செய்தார்.

புலவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அரசன் மனத்தில் ஊன்றியது. அவன் புலவரது அறவுரையால் பரிபக்குவம் அடைந்தான்; நல்லாடைகளைத் துறந்தான்; அரசுரிமையைத் துறந்து உண்ணா நோன்பு பூண்டு உயிர்விடத் துணிந்து வடக்கிருந்தான்.



## 5. நம்பின் திறன்

இச்செய்தி எவ்வாயோ ஆந்தையார் கேள்வி யுற்றார். அவர் மனம் எவ்விதம் இருந்திருக்கும் என்பதை நீங்களே உணருங்கள். அவர் ஒன்றுந் தோன்றாராய்ப் பாண்டிய நாட்டை விட்டுக் காடு மலையுந் தாண்டிச் சோழ நாட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். நிற்க,

வடக்கிருந்த அரசனைச் சுற்றிப் புலவர் பலரும் முதியோர் பலரும குழுமியிருந்தனர். அப்போது சோழன் அவர்களை நோக்கி, " எனதாருயிர் நண்பரான பிசிராந்தையார் இவ்விடம் இன்னும் சிறிது நேரத்திற்குள் வருவார்" என்றான். அருகில் இருந்த பெரியோர் அரசனை நோக்கி, "வேந்தே! ஆந்தையார் உமது அருமை பெருமைகளைக் கேள்வியுற்று உம்மிடம் நட்புக்கொண்டனரே யன்றி உம்மை நேரிற் கண்டவர் அல்லரே. மேலும, இச்செய்தி அவருக்கு எங்ஙனம் எட்டக் கூடும்? அவர் வருவர் என்பதை எங்ஙனம் நம்பக்கூடும்?" என்றனர்.

சோழன் சான்றோரைப் புன்னகையோடு நோக்கி, "என் உயிரைக் காப்போன் பிசிர் என்னும் ஊரில் உள்ளோன்; அவ்வூர் பாண்டிய நாட்டில் உள்ளது. அவன் நான் செல்வமுற்று வாழுங்காலத்து வராதிருப்பினும், நான் இன்னாமையுறுங் காலத்து ஆண்டு நில்லான்" என்று கூறிப் பின்னும் அவர்களைப் பார்த்து, "நீங்கள் கொண்ட ஐயத்தை ஒழியுங்கள்; நிறைந்த அறிவினை யுடையீர்! அவன் என்றும் இகழ்ச்சியிலனாய் இனிய குணங்களை யுடையன்; பிணித்த நட்பினையிடையன்; புகழ் அழிய வரூஉம் பொய்ம்மையை விரும்பான்; தனது பெயரைப் பிறர்க்குச் சொல்லும் போது, 'என்னுடைய பெயர் பேதைமையை யுடைய சோழன்' 'என்று, எனது பெயரைத் தனது பெயராகச் சொல்லும் மிக்க அன்புபட்ட உரிமையை யுடையவன்; இப்படி யான் துயரமுறுங்காலத்து ஆண்டு நில்லான்; இப்படி யான் துயரமுறுங்காலத்து ஆண்டு நில்லான்; இப்பொழுதே வருவன்; அவனுக்கு இட மொழிக்க" என்று சொன்னான்.

அரசன் கூற்றைக் கேட்ட சான்றோர் வியந்து இடமொழித்தார்கள். ஆ! என்னே, நட்பின் திறன்! சோழன் குறித்த நேரத்தில் பிசிராந்தையார் அங்குத் தோன்றினார். சான்றோரும் புலவர்களும் வியந்தனர். அப்போது பொத்தியார் என்ற பைந்தமிழ்ப் பாவலர், "ஆ ! இவ்வரசன் தன் சுக

போகங்களை வெறுத்துத் துறந்து இவ்விடத்தே வரத் துணிந்தது, கருதுங் காலத்து வியக்குந் தன்மையுடைந்து. இவன் இவ்வாறு துணிந்த அதனினும் வியக்குந் தன்மை வாய்ந்தது, வேற்று வேந்தனது நாட்டின்கண் விளங்கம் அமைந்த சான்றோன் இத்தகைய ஓர் இன்னார் காலத்து இவ்விடத்து வருதல்; இவ்வாறு வருவான் என்ற துணிந்து சொல்லிய வேந்தனது மிகுதியும், அவன் சொல்லிய சொல் பழுதின்றாக வந்தவனது அறிவும் வியக்குந்தோறும் விய்ப்பு மிக்கது; ஆதலால். தன்செங்கோல் செல்லாத தேயத்துறையும் அமைந்தோனது நெஞ்சைத் தன்னிடத்தே உரித்தாகப்பெற்ற பழைய புகழுடைய அப்பெற்றிப் பட்ட பெரியானை யிழந்த இந் நாடு என்ன இடும்மைப் யுறுங் கொல்லோ! இது தான் இரங்கத் தக்கது'' என்ற சீரிய பொருளைச் சிறப்புற பொதிய வைத்து,

*'நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே*
*யெனைப் பெருஞ் சிறப்பினோ டீங்கது துணிதல்;*
*அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்*
*தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி*
*யிசைமர பாக நட்புக் கந்தாக*
*வினையதோர் காலையீங்கு வருதல்*
*வருவ னென்ற கோனது பெருமையும்*
*அதுபழு தின்றி வந்தவ னறிவும்*
*வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே;*
*ஆதனால், தன்கோ லியங்காத் தேயத்துறையுஞ்*
*சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை*
*யன்னோனை யிழந்தவிவ் வுலகம்*
*என்னா வதுகொ லளியது தானே'*

என்ற பாவொன்றினைப் பாடி வியந்து கரைந்தார்.

சோழன் ஆந்தையாரை மார்புறத் தழுவி, அவரது கரைகடந்த அன்பிற் பெரிதும் ஈடு பட்டான். ஆந்தையார் தாம்காண விரும்பித் தவங்கிடந்த தனிப் பெருந் தலைவனைக் கண்டதால், அவனது திருவுருவத்தினைத் தம் கண்களுக்கு விருந்தூட்டினார்.



அவ்வமயம், அருகில் குழுமி யிருந்த சான்றோர் புலவரை நோக்கி, "புலவீர்! தம்மைப் பற்றிப் பல ஆண்டுகளாக நாங்கள் கேள்வியுறற்றுள்ளோம்; கேள்வியுற்ற நாங்கள் முதுமை யடைந்து விட்டோம்; நாங்கள் கேள்விப்படுவதற்கு முன்னர்ப் பல ஆண்டுகளாகத் தாங்கள் இருந்திருக்க வேண்டும். தங்களுக்குக் காலத்தாற் பிற்பட்ட நாங்கள் மூப்பு அடைந்திருக்கத் தாங்கள் குறையாத இளமைப் பருவத்துடன் காணப்படக் காரணம் என்ன?'' என, வியந்து கேட்பாரயினர்.

அதற்குப் புலவர், "நுமக்குச் சென்ற ஆண்டுகள் பலவாயிருக்க, நரையில்லா திருத்தல் எங்ஙனம் கூடியது என்று என்னைக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப் பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினார்; யான் கருதிய அதனையே அவர்களும் கருதுவர்; அதற்கு மேலே யான் இருக்கின்ற வூரின்கண் நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டிய உயர்ந்தோர் இடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையிடைய சான்றோர் பலராதலான் அரசனும் செங்கோலனாய் விளங்குன்றான். எனவே, யான் துன்பம் இன்னதென்றறியேன்; எக்காலத்தும் இறைவன் அளித்துள்ள இன்பத்தையே மடுக்கின்றேன். அதனால், யான் நரைப்பிணி யில்லாதிருக்கின்றேன்'' என்ற கருத்தை வைத்து,

*'யாண்டுபல வாக நரையில வாகுதல்*
*யாங்கா கியரென வினவுதி ராயின்,*
*மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;*
*யான்கண் டனையரென் னிளையரும்; வேந்தனும்*
*அல்லவை செய்யான்; காக்கும் அதன்றிலை*
*ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழு மூரே'*

என்ற கொழுவிய பாடலை விடையாகப் பகர்ந்தார்.

பின்னர் புலவர் ஆந்தையார் அரசனோடு உயிர் விடக்கருதி அவனருகில் வடக்கிருந்தார்; அரசன் உயிர் துறந்ததும் தாமும் நட்பின் மேலீட்டால் உயிர் துறந்தார்.

இந் நட்பின் திறத்தைக் கண்ட கண்ணகனார் என்ற நற்றமிழ்ப் புலவர், "பொன்னும், பவளமும், முத்தும் நிலை பெற்ற

பெரியமலை தரப் பெற்ற விரும்பத்தக்க மணியும் ஒன்றற் கொன்று இடை நிலம்படச் சேய் நிலத்தின வாயினும், கோவை பொருந்தி அரிய விலையினையுடைய நல்ல அணிகலங்களை செய்யுங் காலத்து ஓரிடத்துத் தோன்றினாற் போல, எந்நாளும் அமைந்தோர் அமைந்தோர் பக்கத்தராவர்; அமைதியில்லார் அமைதியில்லாதார் பக்கத்தராவர்,"என்னும் கருந்தமைந்த சிறந்த பாட்டைப்பாடி ஆந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் கொண்டிருந்த நட்பின் திறத்தை வியந்தார்.

## 6. புலவர் பாடிய பாக்கள்

இப் புலவர் பாடியவனாக நற்றிணையில் ஒன்றும் அகத்தில் ஒன்றும் புறத்தில் நாலுமாக ஆறுபாடல்கள் கிடைத்துள்ளன.

இவர் நெய்தலையும் குறிஞ்சியையும் பாராட்டிப் பாடியுள்ளார். இவர் பாடியதாகவுள்ள நற்றிணைப் பாடலில் 'நாரை தன் பெடையொடு போய்க் கடலில் தன் வாயால் துழாவி, மீனைப் பிடித்துக் கடற்கரைச் சோலை மரங்களின் கிளைகளில் கட்டியுள்ள கூடுகளில் விரும்பி யழைக்கும் தன் குஞ்சுகளின் வாயில் போடும்' என்று கூறி உள்ளூரை அமைத்துள்ளார்.

இப்பெரியார் நரைதிரையின்றி நெடுங்காலம் சீவித்திருந்த முதியோர் எனத் தெரிகிறது. இவர் சோழனிடம் கொண்ட நட்புநலன் நன்கு விளங்குகின்றது. மேலும், பரிமேலழகர் 785-ம் குறள் உடையில், 'கோப் பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தை யாருக்கும் போல உணர்ச்சி யொப்பின், அதுவே, உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும்' என்று எழுதி யிருப்பதால் இவர் நட்பின் திறத்தை அறிக.

இவர் பாடியதாகயுள்ள அகப்பாட்டுச் செய்யுளில், 'இரவு முழுவதும் மழைபெய்து, விடியற் காலத்தே மலையைச் சூழ்ந்து காணப்படும் வெண் மேகம், குயவன் சூளைமேற் சூழ்ந்துள்ள புகையைப் போன்றுள்ளது' என்று கூறிய உவமை நயம் ஆராயத்தக்கது.

இப்பெரும் புலவர் நட்பிலக்கணத்துக்கே சிறந்த சான்றாக விளங்குகின்றார் என்பதில் ஐயம் உண்டோ?

○○○



# ஆசிரியரின் பிற நூல்கள்

**(கால வரிசையில்)**

1. நாற்பெரும் வள்ளல்கள் 1930
2. ஹர்ஷவர்த்தனன் 1930
3. முடியுடை வேந்தர் 1931
4. நவீன இந்திய மணிகள் 1934
5. தமிழ்நாட்டுப் புலவர்கள் 1934
6. முசோலினி 1934
7. ஏப்ரஹாம் லிங்கன் 1934
8. அறிவுச்சுடர் 1938
9. நாற்பெரும் புலவர்கள் 1938
10. தமிழர் திருமண நூல் 1939
11. தமிழர் திருமண இன்பம் 1939
12. மணிமேகலை 1940
13. மொஹெஞ்சொதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் 1941
14. பாண்டியன் தமிழ்க் கட்டுரை (முதல் தொகுதி) 1941
15. பல்லவர் வரலாறு 1944
16. மறைந்த நகரம் (மாணவர் பதிப்பு) 1944
17. சேக்கிழார் (ஆராய்ச்சி நூல்) 1945
18. இரண்டாம் குலோத்துங்கன் 1945
19. கட்டுரை மாலை 1945
20. செய்யுள் - உரைநடைப் பயிற்சி நூல் 1945
21. முத்தமிழ் வேந்தர் 1946
22. காவியம் செய்த கவியரசர் 1946
23. விசுவநாத நாயக்கர் 1946
24. சிவாஜி 1946
25. சிலப்பதிகாரக் காட்சிகள் 1946
26. இராஜேந்திர சோழன் 1946
27. பல்லவப் பேரரசர் 1946
28. கட்டுரைக் கோவை 1946
29. சோழர் வரலாறு 1947
30. ஆராய்ச்சிக் கட்டுரைகள் 1947
31. பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு 1947
32. வீரத் தமிழர் - 1947
33. இருபதாம் நூற்றாண்டுப் ஸபலவர் பெருமக்கள் 1947
34. இந்திய அறிஞர் 1947

35. தமிழ்நாட்டு வடஎல்லை 1948
36. பெரியபுராண ஆராய்ச்சி 1948
37. கதை மலர் மாலை (மலர் ஒன்று0 1948
38. இராஜன் சிறுவர்க்குரிய கதைகள் 1948
39. சிறுகதைக் களஞ்சியம் (பகுதி 1- 3) 1949
40. மேனாட்டுத் தமிழறிஞர் 1950
41. தென்னாட்டுப் பெருமக்கள் 1950
42. இந்தியப் பெரியார் இருவர் 1950
43. தமிழ்ப் புலவர் பெருமக்கள் 1950
44. நாற்பெரும் புலவர் 195
45. மறைமலையடிகள் 1951
46. அயல்நாட்டு அறிஞர் அறுவர் 1951
47. சங்கநூற் காட்சிகள் 1952
48. இளைஞர் இலக்கணம்
(முதல் மூன்று பாரங்கட்கு உரியது) 1953
49. விஞ்ஞானக் கலையும் மனித வாழ்க்கையும் 1953
50. பாண்டிய நாட்டுப் பெரும் புலவர் 1953
51. சேக்கிழார் (மாணவர் பதிப்பு) 1954
52. திருவள்ளுவர் காலம் யாது? 1954
53. சைவ சமயம் 1955
54. கம்பர் யார்? 1955
55. வையை 1955
56. தமிழர் திருமணத்தில் தாலி 1955
57. பத்துப்பாட்டுக் காட்சிகள் 1955
58. இலக்கிய அறிமுகம் 1955
59. அருவிகள் 1955
60. தமிழ் மொழிச் செல்வம் 1956
61. பூம்புகார் நகரம் 1956
62. தமிழ் இனம் 1956
63. தமிழர் வாழ்வு 1956
64. வழிபாடு 1957
65. இல்வாழ்க்கை 1957
66. தமிழ் இலக்கணம் (இளங்கலை வகுப்பிற்கு உரியது) 1957
67. வழியும் வகையும் 1957
68. ஆற்றங்கரை நாகரிகம் 1957
69. தமிழ் இலக்கண இலக்கியக் கால ஆராய்ச்சி 1957
70. என்றுமுள தென்றமிழ் 1957
71. சைவ சமய வளர்ச்சி 1958
72. பொருநை 1958
73. அருள்நெறி 1958
74. தமிழரசி 1958



75. இலக்கிய அமுதம் 1958
76. எல்லோரும் வாழவேண்டும் 1958
77. தமிழகக் கலைகள் 1959
78. தமிழக ஆட்சி 1959
79. தமிழக வரலாறு 1959
80. தமிழர் நாகரிகமும பண்பாடும் 1959
81. தென்பெண்ணை 1959
82. புதிய தமிழகம் 1959
83. நாட்டுக்கு நல்லவை 1959
84. தமிழ் அமுதம் 1959
85. பேரறிஞர் இருவர் 1959
86. துருக்கியின் தந்தை 1959
87. தமிழகக் கதைகள் 1959
88. குழந்தைப் பாடல்கள் 1960
89. கட்டுரைச் செல்வம் 1960
90. தமிழகப் புலவர் 1960
91. தமிழ் மொழி இலக்கிய வரலாறு (சங்க காலம்) 1963
92. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் 1964
93. தமிழ் அமுதம் (மாணவர் பதிப்பு) 1965
94. சேக்கிழார் (சொர்ணம்மாள் நினைவுச்
சொற்பொழிவுகள்) 1969
95. பத்துப்பாட்டு ஆராய்ச்சி 1970
96. கல்வெட்டுகளில் அரசியல் சமயம் சமுதாயம் 1977
97. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி 1978
98. இலக்கிய ஓவியங்கள் 1979

**பதிப்பு ஆண்டு தெரியாத நூல்கள்**

99. சிறுவர் சிற்றிலக்கணம்
100. பைந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும்
101. பாண்டியன் தமிழ்க் கட்டுரை (தொகுதி -2)

**ஆங்கில நூல்**

102. The Development of Saivism in South India 1964

**பார்வைக்குக் கிடைக்காத நூல்கள்**

1. பதிற்றுப்பத்துக் காட்சிகள்
2. செந்தமிழ்ச் செல்வம்
3. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்
4. பள்ளித் தமிழ் இலக்கணம்
5. செந்தமிழ்க் கட்டுரை (முதல், இரண்டாம் புத்தகங்கள்)
6. செந்தமிழ்க் கதை இன்பம் (முதல், இரண்டாம் பகுதிகள்)

குறிப்புகள்